# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 18 சனிக்கிழமை (02– 01 – 1999) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:32


## தொலைபேசி மூலம் சங்கரிக்கு மிரட்டல்!

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ. ஆனந்தசங்கரிக்கு இனந்தெரியாதோர் நேற்று இரு தடவைகள் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகரசபைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரும் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொலைபேசியில் தெரிவிக்கப்பட்ட விடயம் என்ன என்பது தெரியவரவில்லை.

(உ-5)

# தொப்பிகல காட்டில் படை நடவடிக்கை!

## புலிகளின் முகாம்களை அழிப்பதற்காகவாம்

மட்டக்களப்பு, ஜனவரி 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிகல காட்டுப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிக்கும் இலக்குடன் "தரஷற" என்ற பெயரில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை கொட்டும் மழையிலும் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் வழிகாட்டலில்—

மாதுருஓயாவில் இருந்து இரு அணிகளும்—

கிரானில் இருந்து ஓர் அணியும்—

இந்த நடவடிக்கையை நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பித்தன.

இராணுவ நடவடிக்கையை முடித்து தமது நிலைகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த படையணிகளில் கிரான்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை!

வவுனியா; ஜன. 2

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் சர்வதேச தொலைத் தொடர்பு சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு புலிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக அங்கிருந்து வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேச மக்கள் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்கள் பல நாள் அலைந்து வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளுக்கு வந்தே தமது உறவினர்கள், நண்பர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறாக மக்கள் படும் அவதியைத் தீர்க்கும் நோக்குடன் புலிகள் வன்னியில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து விடாது பெய்து வரும் கடும் மழையால் வெள்ள அபாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 2

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக மீண்டும் ஒரு முறை வெள்ளநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மாத முற்பகுதியிலும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து பெய்த மழை காரணமாக சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தங்கி இருந்தமை தெரிந்ததே.

நேற்றும் நேற்று முன்தினமும் தொடர்ந்து பெய்த மழை காரணமாக குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள சிறுசிறு குளங்கள், வாய்க்கால்கள், ஏரிகள் நிரம்பி வழிவதுடன் சில பகுதிகளில் வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

யாழ். நகரப்பகுதியில் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக பஸ் நிலையப் பகுதி முற்றாகவே வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் பிரயாணிகள் அனைவரும் வெள்ளத்தில் மூழ்கியே தமது பயணத்தை மேற்கொண்டதைக் காணமுடிந்தது.

யாழ். ஆஸ்பத்திரியின் வார்ட்டுக்களிலும் நேற்றைய மழையுடன் ஒழுக்குகளினால் வெள்ளம் ஏற்பட்டு நோயாளர்கள் பெரும் அவல நிலைக்கு உள்ளானதைக் காணமுடிந்தது.

இதேவேளை யாழ். நகரப் பகுதியை அண்டிய கொக்குவில் மற்றும் அரியாலை, திருநெல்வேலி, வண்ணார் பண்ணை, நாயன்மார் கட்டு முதலிய பகுதிகளிலும் தென்மராட்சியில் மிருசுவில், விடத்தற்பளை மற்றும் எழுதுமட்டுவாள் முதலிய பகுதிகளிலும் தீவுப்பகுதியில் நெடுந்தீவு மற்றும் நயினாதீவுப் பகுதிகளிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மழை தொடரும் அறிகுறி!

கொழும்பு, ஜன. 2

வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பித்துள்ளதால் இன்று முதல் சில தினங்களுக்கு நாட்டின் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை தொடர்ந்து பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

(உ-7)

## யாழ். மாநகர சபை நேற்றுக்கூடியது!

யாழ்ப்பாணம், ஜன 2

யாழ். மாநகர சபையில் இந்த வருடத்துக்கான முதலாவது மாதாந்தக் கூட்டம் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று பகல் 11.00 மணியளவில் மாநகர சபை உறுப்பினர் க. சின்னத்துரை தலைமையில் ஆரம்பமான இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அறுவரும், புளொட் உறுப்பினர்கள் மூவரும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

**மட்டக்களப்பில்**

## வருடப் பிறப்பை கொண்டாட வேட்டு!

### படையினர் தீர்த்தனர்

மட்டக்களப்பு, ஜன. 2

மட்டக்களப்பு நகரில் புத்தாண்டு பிறந்த வேளையில் படையினரும் பொலீஸாரும் ஒரே சமயத்தில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வேட்டு ஒன்று இருதயபுரத்தில் உள்ள வீடு ஒன்றில் வீழ்ந்ததில் 72 வயது வயோதிபர் உட்பட இருவர் காயமடைந்தனர். அவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-21)

## இந்தியாவிலும் நிகழ்ச்சிகளுக்கு சந்திரிகா தாமதமாகவே சென்றார்

கொழும்பு, ஜன. 2

கடந்த வார இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க—இலங்கையில் தாம் வழமையாகச் செய்வது போல — அங்கும் பல முக்கிய பிரமுகர்களுடனான சந்திப்புகளின் போது உரிய நேரத்துக்குச் செல்லாமல் அவர்களைக் காக்க வைத்ததாகவும்—

நேரம் பேணாத இலங்கை ஜனாதிபதியின் போக்கு இந்தியப் பிரமுகர்கள் பலரையும் அதிருப்திக்கு உள்ளாக்கியதோடு சினத்தையும் ஏற்படுத்தியதாகவும்—

புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு ஜனாதிபதி புதுடில்லி செல்லும் நேரம் மாற்றியமைக்கப்பட்டது. இதன் காரணமாக ஜனாதிபதி செல்லவேண்டிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்தவிரைவில் 'அவுட்'!

கொழும்பு, ஜன. 2

ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் இடத்துக்கு புதிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிப்பது குறித்து ஜனாதிபதி மாளிகையில் பேச்சுகள் அடிபடுவதாக 'யுக்திய' சிங்கள வார இதழ் முதலாம் பக்கத்தில் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு ஜனாதிபதியுடன் நெருக்கமான இரு அமைச்சர்களின் பெயர்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

**கிழக்கு பல்கலை:**

## 'ராகிங்' சம்பவம் பற்றி பொலீஸார் விசாரணை

மட்டக்களப்பு, ஜன. 2

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் 'ராக்கிங்' சித்திரவதைக்கு வணிகபீட முதலாம் ஆண்டு மாணவன் ஒருவர் உள்ளாகிய சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

'ராக்கிங்' சித்திரவதைக்கு உள்ளாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கதிரேசுப்பிள்ளை விருத்தாசலம் என்ற அந்த மாணவனின் வாக்கு மூலத்தைப் பொலீஸார் பதிவு செய்தனர்.

தன்னை 'ராக்கிங்' சித்திரவதைக்குள்ளாக்கிய சிரேஷ்ட மாணவனை அடையாளம் காட்ட முடியும் என்று அந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலும் பெரு வெள்ளம்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் ஆறாவது நாளாகத் தொடரும் அடை மழை காரணமாக அங்குள்ள சகல குளங்களும் நிரம்பிப் பாய்வதோடு பெரும் வெள்ள நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த வெள்ள நிலைகாரணமாக வீதிகள் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளன. பல வீதிகளில் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம் பெயர்ந்து காட்டுப் பகுதிகளில் குடிசைகள், கூடாரங்கள் அமைத்து வாழும் மக்கள் பெரும் அவலங்களை எதிர் நோக்கியுள்ளதாகக் கூறப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குளங்களில் அதிகமாக வான்பாய்வதாக வன்னிப் பகுதி நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனிக்குளத்தில் நேற்று முன்தினம் முதல் 2 அங்குலம் வரை வான்பாய்ந்து வருவதாகவும்—

அங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதனால் குளத்துக்கு வந்து சேரும் நீரின் அளவு அதிகரிப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

இதனால் குளத்தின் பாதுகாப்புக்கருதி மடைக்கதவுகள் வழியாக நீர் வெளியேற்றப் படும் என்றும்—

நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் கிடாய் படுத்த குளக்கட்டு வெட்டப் பட்டு நீர் வெளியேற்றப்படும் என்றும்—

இதனால் இப்பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும்—

வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் குடும்பங்கள் ஏற்கனவே இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-6-ரீ)

## திருவாசகம் முற்றோதல்

கைதடி சைவ ஐக்கிய சங்கம் ஒழுங்கு செய்துள்ள திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் கைதடி வக்கு கயிற்றசிட்டிக் கந்த சுவாமி கோயிலில் சங்கத் தலைவர் வ. சுப்பையா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ முத்துகணேசக் குருக்களின் ஆசியுரையும், பிற்பகல் 2 மணிக்கு விசேட பூசை ஆராதனையும் இடம்பெறும்.

(ஐ-74)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம்பெறும்.

திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சண்முகவடிவேல் ஐயா தலைமையில் நடைபெறும்.

(உ-152)

## பருத்தித்துறையில் பொருள் இறக்குவது நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 2

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல்கள் துறைமுகப் பகுதியில் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## நல்லூர் குடும்பங்களுக்கு புதிய பங்கீட்டு அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன. 2

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் சகல குடும்பங்களுக்கும் ஜனவரி முதலாம் திகதி முதல் புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பழைய பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்து புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கப் படும்.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் சகல கிராம அலுவலர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன. ஆதலால் 15-01-99 இற்கு முன்னர் அவர்களுடன் தொடர்பு கொண்டு பங்கீட்டு அட்டைகள் பதிவதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் சகல குடும்பங்களும் கேட்டுக் கொள்ளப் படுகின்றன. குறிப்பிட்ட திகதிக்கு முன் தங்களை பதிவு செய்யாதவர்களுக்கு பின்பு பங்கீட்டு அட்டை வழங்குவதில் சிரமங்கள்ஏற்படலாம்.— என்று நல்லூர் உதவி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## ரெலிகொம் ஊழியரின் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

ஸ்ரீலங்கா ரெலிகொம் யாழ். பிராந்திய அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கம், யாழ். போதனா வைத்திய சாலைக்கு நோயாளர் நலன் கருதி ஒருதொகுதி பாய்கள், தலையணைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

1999 ஆம் ஆண்டின் ஆரம்ப தினமான நேற்று இந்த அன்பளிப்புப் பொருள்கள் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் நலன்புரிச் சங்க பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டன.

(உ-15)

## யூபிலி 2000 இசை மாலை

யாழ்ப்பாணம், ஜன, 2

கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட தேம்பாவணி இசைக்குழு வழங்கும் 'யூபிலி 2000, ஆண்டினை வரவேற்கும் இசைமாலை நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் துரை ஆரோக்கியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ், ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும், அருட் சகோதரி சோபியா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-8)

## மாணிக்கவாசகர் சிலை பவனி

வலி.தென்மேற்கு, ஜன. 2

நவாலிவடக்கு ஊட்டுக்குளி நாச்சிமார் கோயில் திருவெம்பாவை உற்சவத்தின் இறுதி நாளான இன்று சனிக்கிழமை அதிகாலை மாணிக்கவாசகர் சிலை வீதி வழியாக ஊர்வலமாக எடுத்துவரப்பட உள்ளது.

(ஐ-185)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம். ஜன. 2

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகக் மைதானத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாரதி சனசமூக நிலையத் தலைவர் த.கங்காபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மைதானத்தைத் திறந்து வைப்பார். உதைபந்தாட்டக் காட்சிப் போட்டிகளும் இடம்பெறும்.

(ஐ-8)

## புத்தாண்டில் 285 பேர் காயம்

கொழும்பு, ஜன. 2

நேற்றுப்புத்தாண்டுகொண்டாட்டங்களின் போது கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இடம்பெற்ற சிறிய விபத்துக்கள், சச்சரவுகள், பட்டாசு வெடித்தல் போன்ற சம்பவங்களினால் சுமார் 285 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களில் 36 பேரின் நிலைமை கவலைக்கிடமாக வுள்ளது என வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-5)

## தமிழில் மட்டும் கருமமாற்ற 11 பிரதேசசபைகள் முடிவு!

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பதினொரு பிரதேச சபை நிர்வாகங்களையும் தமிழ்மொழி மூலம் மேற்கொள்ளஅந்தப்பிரதேச சபைகள் முடிவு செய்துள்ளன.

பிரதேச சபையின் கோவைகள் உட்பட சகல நிர்வாகக் கடிதங்களையும் தமிழ்மொழியில் பராமரிப்பது என்றும்

பிரதேச சபை வெளிபிடங்களுக்கான தொடர்புகளை தமிழில் மேற்கொள்வது என்றும் —

அந்தப் பிரதேச சபைகள் முடிவு செய்துள்ளன.

தமிழ்மொழி மூலம் அரச கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் கடிதத் தொடர்புகளை மேற் கொள்வது என்றும்—

தமிழ்மொழி பெயர்ப்பு இல்லாமல் அரச, கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் இருந்து வரும் கடிதங்களைத் திருப்பி அனுப்புவதென்றும்— அந்தப் பிரதேச சபைகள் முடிவு செய்துள்ளன.

இந்த நடைமுறையை இம் மாதம் முதல் தீவிரமாகச் செயற்படுத்தவும் அவை தீர்மானம் எடுத்துள்ளன.

## நாட்டுக்கூத்து

வலிவடக்கு, ஜன. 2

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய இசை நாடகப்போட்டியில் முதாலம் இடத்தைப்பெற்ற கைதடி மத்தி வளர்மதி நாடகமன்ற ஆண், பெண் கலைஞர்கள் இணைந்து வழங்கிய காத்தவராயன் சிந்து நாட்டுக்கூத்து புத்தாண்டையொட்டி இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூத்தை அண்ணாவியார் ச. சிவஞானம் நெறியாள்கை செய்கின்றார்.

(உ-86)

## தீர்த்த கேணி திறப்பு விழா

தென்மராட்சி, ஜன. 2

சாவகச்சேரி நுணாவில் குளம் கண்ணகை அம்பாள் ஆலய "கண்ணகா புஸ்கரணி" தீர்த்தக்கேணி திறப்பு விழா சிறபபு மலர் வெளியீட்டு விழா இன்று காலை 11 00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இ. நாகராசா தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை கலந்து கொள்வார்.

முதல் பிரதியை சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் துரைசிங்கம் ரகு பெற்றுக் கொள்வார். சிறப்பு மலர் அறிமுக உரையை ஆசிரியர் ஐ. கமலநாதன் நிகழ்த்துவார்.

(உ-117)

## பயிற்சி நெறியும் கண்காட்சியும்

வடமராட்சி, ஜன. 2

வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கெருடாவில் இளைஞர் கழகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் மகளிர் பயிற்சி நெறியும், கண்காட்சியும் இன்றுசனிக்கிழமையும்நாளை ஞாயிற்றுக் கிழமையும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) பிரதேச செயலர் த. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றத்தைச் சேர்ந்த தி. சிவதெட்சணாமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

(ஐ-173)


மாணவர்களின் கவனத்திற்கு

**பொருளியல்**

S வரதராஜன்

**A\L 99**

மாணவர்கள் தொகை வரையறுக்கப்பட்டுள்ளதால் புதிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நிர்வாகி

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

(61849)



**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி

சனி முதல் திங்கள் வரை

கார்த்திக், குஷ்பு

நடித்த

வருஷம் 16

செவ்வாய் முதல்

ரஜனியின்

நல்லவனுக்கு நல்லவன்

தினசரி;- 10.30, 2.30

(பழைய நேரம்)

T. P. No. 070—212223

(61826)



**ராஜா டாக்கீஸ்**

இன்று முதல் குதூகல ஆரம்பம்

நெப்போலியன், நாசர், தேவயானி,

மணிவண்ணன் நடித்த

**கிழக்கும் மேற்கும்**

முதல். வாரம்

10-30, 2-00, 5-00

(சி/5957)



**நாகம்ஸ்**

சினிமா

சுன்னாகம்.

அஜித், தேவயானி

நடித்த

**காதல்கோட்டை**

(ரீல்ஸ்)

காட்சிகள்: 10-30, 2-30

(61846)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை பொன்னம்மா

சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பொன்னம்மா 31-12-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான முதலித்தம்பி சின்னத்துரையின் அன்பு மனைவியும், மகாதேவா (பிரபல வர்த்தகர்), சரோஜினிதேவி, தெய்வேந்திரன் (ஓய்வுபெற்ற O.T.S. கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்லத்துரை (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), மகேஸ்வரி, உமாராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தியாகராஜா மயில்வாகனம் (லண்டன்), செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாகரன் (கனடா), கிருபாகரன் (டாக்டர் வவுனியா), சசிகரன் (பல்கலைக்கழகம் கனடா), புஸ்பலதா (ஆஸ்திரேலியா), புஸ்பராணி, புஸ்பகலா (ஆஸ்திரேலியா), புஸ்பமாலா (கனடா), சரஸ்வதி (கனடா), சிதீபன் (கனடா), வதனி (கனடா), ரஜினி (கனடா). கருணாளினி (கனடா), பிரதீபன் (யாழ்.மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-01-99) சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மகாதேவா (மகன்)

சரோஜினிதேவி (மகள்)

அரசடி,

கொக்குவில் மேற்கு.

(61845)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# மின் விநியோகம் குறித்து 'கூல் எயார்' விளக்கம்

குடாநாட்டில் முன்னிரவிலும் விடியும் வேளையிலும் மின் விநியோகம் அடிக்கடி துண்டிக்கப்படுவது குறித்து கடந்த 19-12-1998 சஞ்சீவியில் 'அதிரடி அரங்கு' பகுதியில் ஒரு தகவல் வெளியாகியிருந்தது.

மின் பாவனை கூடும் போது அதற்கேற்ப வலுவை அதிகரித்துத் தர ஜெனரேட்டர்கள் தவறுவதால் 'ஓவர் லோட்' ஆகி 'டிரிப்' விழுவதே இந்நிலைமை ஏற்படக் காரணம் என்ற சாரப்பட அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

'சம்பந்தப்பட்ட அதிகாரி' ஒருவர் தெரிவித்த தகவல்கள் சிலவும் அதில் இடம் பெற்றிருந்தன.

ஆனால் காங்கேசன்துறையில் ஜெனரேட்டர்களை இயக்கும் 'கூல் எயார்' மின் நிலைய அதிகாரிகள் இதனை எழுத்து மூலம் மறுத்துள்ளனர். அவர்கள் தெரிவித்திருப்பதின் சாராம்சம் வருமாறு:

★ கஷ்டங்களுக்கு மத்தியில் குடாநாட்டு மக்களின் நன்மைகருதி, சேவை மனப்பான்மையுடன், கடின உழைப்பின் மூலம் இந்த ஜெனரேட்டர்கள் அமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

★ காலை, மாலை வேளைகளில் அடிக்கடி ஏற்படும் மின் தடைக்கும் மின் நிலையத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. எக்கட்டத்திலும் எமது ஜெனரேட்டர்கள் 'ஓவர் லோட்டோ' அன்றி 'ஓவர் வோல்ட்டோ' ஆகி டிரிப் பண்ணவில்லை.

★ எமது ஜெனரேட்டர்கள் நல்ல நிலையில் இயங்கக் கூடியவை. சிறந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் மின் உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காங்கேசனில் இந்த ஜெனரேட்டர்களை நிர்மாணிக்க முன்பு, கொழும்பில் இது போன்ற ஜெனரேட்டர்களில் எமது தொழில் நுட்பவியலாளர்களுக்கு இரண்டு மாதப் பூரண பயிற்சி வழங்கப்பட்டது. இங்கிலாந்தில் இருந்து வரவழைக்கப்பட்ட பொறியியலாளர்கள் இது தொடர்பான பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கினர். எனவே ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு அவ்வப்போது கொழும்பிலிருந்து கட்டளைகளைப் பெறவேண்டியிருந்தது என்று கூறுவது சரியல்ல.

''காங்கேசன் துறைக்கு வெளியே எங்கோ இருக்கும் பிழைகளை எமது தலையில் போட்டு, எமது உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் தவறான கணக்குப் போட்ட இந்த 'சம்பந்தப்பட்ட அதிகாரி' எனக் குறிப்பிட்ட இந்த நபரை இனிமேலாவது இப்படியான பொய்த் தகவல்களை வழங்கி தன் மட்டத்தில் தான் மேலதிகாரி எனப் பெருமிதமடைய வேண்டாம் என்பதை இந்த அறிவித்தலைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலம் அவரை எச்சரித்து உதவுமாறு வேண்டுகிறோம்'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு

1. 'கூல் எயார்' நிறுவனம் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் யாழ். குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்க முன்வந்தமை பாராட்டுவதற்கு உரியது. ஆனால் குடாநாட்டில் அதி உச்சப் பாதுகாப்பு வலயத்துக்குள் அது அமைக்கப்பட்டிருப்பதும் வெளித் தொடர்பு, போக்குவரத்து இல்லாத இடத்தில் அது அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது. ஆகவே 'குடாநாட்டு மக்களின் நன்மை கருதி', 'சேவை மனப்பான்மையுடன்' என்ற பதங்களுக்கு இணங்க அது அமைக்கப்பட்டதா, செயற்படுகின்றதா என்பதைக் காலமும், நிறுவனம் இங்கு இலாபம் கருதாமல் ஆற்றப் போகும் பணியுமே உறுதிப்படுத்த வேண்டும்.

2. எமது தகவலிலே 'சம்பந்தப்பட்ட அதிகாரி' என்று மட்டும் மொட்டையாக நாம் குறிப்பிட்டிருந்தோம். அவர் காங்கேசன் துறையில் 'கூல் எயார்' நிறுவனத்தில் பணிபுரிபவராகக் கூட இருக்கலாம். ஆனால் மறுப்பு அனுப்பிய நிறுவன அதிகாரி ''காங்கேசன் துறைக்கு வெளியே எங்கோ இருக்கும் பிழைகளை எமது தலையில் போட்டு, எமது உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் தவறான கணக்குப் போட்ட இந்த சம்பந்தப்பட்ட அதிகாரி'' — என்று குறிப்பிட்டுள்ளார். ஏன் அவர் அத்தகைய முடிவுக்கு வந்தார்?

மின்சார விநியோக விடயத்தில் 'கூல் எயார்' நிறுவனத்துக்கு அப்பால் சம்பந்தப்பட்டோர் இலங்கை மின்சாரசபை மட்டுமே. இரண்டிலும் பல தரத்திலும் பல அதிகாரிகள் இருக்கின்றார்கள். நாம் அந்த அதிகாரி யார், எவர் என்று குறிப்பிடவில்லை.

ஆனால் 'கூல் எயார்' சார்பில் மறுப்பு அனுப்பிய அதிகாரி, தங்கள் நிறுவனத்துக்கு வெளியே (அதாவது மின்சார சபையைச் சேர்ந்த) ஓர் அதிகாரியை இலக்கு வைத்து — ''தவறான கணக்குப் போட்ட, இந்த சம்பந்தப்பட்ட அதிகாரி எனக் குறிப்பிட்ட இந்த நபரை'' — என்று சாடியிருக்கின்றார்.

அப்படி சாடியதற்குக் காரணம் என்ன? நெருப்பில்லாமல் புகையாது.

தாங்கள் பேசிப் பரிமாறிக் கொண்ட தகவல்கள் 'அதிரடி அரங்குக்கு' எட்டியுள்ளனவே! ஆகவே நாங்கள் யாருடன் உரையாடினோமோ அவர்தான் அத்தகவலைக்கொடுத்திருப்பார் என்ற 'காய்ச்சலில்' வந்த வாசகங்கள் தாம்அவை.

'கூல் எயார்' சார்பில் அனுப்பப்பட்ட மறுப்பைத் தவறு என்றோ, அல்லது ஏற்கனவே அதிரடி அரங்கில் பிரசுரமான தகவல்களைச் சரி என்றோ நிரூபிப்பது 'அதிரடி அரங்கு' பத்தியாளருக்கு சாத்தியமற்றது. ஏனெனில் 'கூல் எயார்' இயங்கும் இடமும், பணியும், விடயமும் அப்படிப்பட்டவை.

என்றாலும் ஒரு விடயத்தை ஊர்ஜிதப்படுத்த முடியும். 'ஓவர் லோட்' மின் விநியோகம் 'டிரிப்' ஆவது கூல் எயார் ஜெனரேட்டர்களில் இடம்பெறாமல் போனாலும், அதன் பின்னர் உடனடியாக மீண்டும் மின் விநியோகத்தை வழங்க முற்படும் போது — திடீரெனத் தேவைப்படும் அதிக மின் வலுவை — உடனடியாக அந்தக் கணமே வழங்கக்கூடிய நிலையில் ஜெனரேட்டர்கள் இல்லை. கொஞ்சம், கொஞ்சமாக மின் வலுவை அதிகரித்தால் மட்டுமே அத்தேவையை இந்த ஜெனரேட்டர்களால் நிறைவு செய்ய முடியும்.

உதாரணமாக மூன்று அல்லது நான்கு மெகா வாட்ஸ் மின் பாவனை உள்ள நிலையில் 'டிரிப்' பண்ணினால், மீண்டும் அந்த 'லோட்டை' வைத்துக் கொண்டு விநியோகத்தை வழங்க முற்பட்டால் அத்தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையில் ஜெனரேட்டர்கள் இல்லை. இதனால் மின் விநியோக வலையைப் பல துண்டுகளாகப் பிரித்து, டிரிப் பண்ணிய பிறகு, 1.5 மெகா வாட்ஸ் அளவில் இருந்து ஒவ்வொரு இடமாக விநியோகத்தை மெல்ல மெல்லத் தொடங்கி உச்ச நிலைக்குக் கொண்டு போக வேண்டியிருக்கும். ஆனால் இரவில் — ஊரடங்கு வேளையில் அல்லது ஊரடங்கு ஆரம்பிக்க இருக்கும் வேளையில்— பல்வேறு டிரான்ஸ்போமர் நிலைகளுக்கும் ஆள் அனுப்பி அங்கு அவற்றின் விநியோகத்தை நிறுத்தி, ஒவ்வொன்றாகப் போட வைப்பது மின்சார சபைக்கு சாத்தியமற்றது; அதற்குரிய தொடர்பு சாதன வலைப் பின்னலும் அவர்களுக்கு இல்லை.

இது பற்றிய மேலதிக விவரங்களை இலங்கை மின்சார [illegible]

(ஆ-ர்)

## படையினர் பயன்படுத்தும் தென்னந் தோட்டங்கள் திருப்பி ஒப்படைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 2

தென்மராட்சியில் படையினர் நிலைகொண்டுள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களை அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு பலாலி இராணுவத் தலைமையக அதிகாரிகளுக்குப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த அறிவித்துள்ளார்.

இது பற்றிய தகவல் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

''தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களில் படையினர் தங்கி உள்ளனர். அந்தத் தோட்டங்களைத் தோட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைத்தால் தற்சமயம் உயர்ந்துள்ள தேங்காய் விலையைக் குறைக்க முடியும். ஆகவே தனியாரிடம் அவர்களின் தோட்டங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுங்கள்'' என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்றைப் பருத்தித் துறைப் பிரதேச சபை நிறைவேற்றி அவருக்கு அனுப்பியிருந்தது.

அதையடுத்தே அவர் பலாலி இராணுவத் தலைமையக அதிகாரிகளுக்கு மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் தென்னந் தோட்டங்களை வைத்திருக்கும் தனியார்கள் தமது தோட்டங்களின் விவரங்களைப் பருத்தித்துறைப் பிரதேச சபை அலுவலகம், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அலுவலகம், ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## அதிரடி அரங்கு

புத்தூர்ப் பகுதி கடை உரிமையாளர் ஒருவர் கூறியதகவல் இது:

அங்குள்ள கடைக்குச் செல்லும் ஆண் சீருடையினர் ஒரு வயதுக் குழந்தை முதல் குமரிகள் வரை அணியும் — பெண்களுக்கான — சட்டைகள், தலைக்கு அணியும் 'கிளிப்', 'பேள்' போன்ற பொருள்களையும் அடிக்கடி வாங்குகின்றனராம்.

இவை எல்லாம் ஏன்? எதற்கு? என்று கேட்டால் 'எங்கள் காதலிக்கு', 'எங்கள் மனைவிக்கு', 'எங்கள் பிள்ளைகளுக்கு' என்று பதில் வருகின்றது. காலம் அப்படி. முருங்கைத் தடியை சும்மா நிலத்தில் சாய்த்து வைத்தாலே வேர் ஓடி, அரும்பு விட்டு, பதியாகி, மரமாகி விடுகின்ற காலமல்லவா? நீண்ட காலம் தரிக்கும்போது இப்படித்தான் ஆகும்.

கப்பல் சென்ற தடம் கடலில் இருக்கவா போகின்றது என்ற நம்பிக்கை நம் பெண்கள் பலருக்கு!

பாவம். நமது கலாசாரம், பண்பாடு சீரழிவது குறித்து கவலைப்படுவோர்தான் குய்யோ, முறையோ என்று கத்துகின்றார்கள். ஆனால் அவர்களால் தடுக்க முடியவில்லை என்பது ஒரு புறமிருக்க —

தமிழ்த் தேசிய உணர்ச்சியை மழுங்கடிக்க இதுவும் ஒரு வழி என்பதை ச(க)திக்குள் சிக்கும் நமது பெண்கள் உணராததுதான் கவலை.

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாண நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் (ரியூட்டரி) ஒன்று மாணவர்களிடம் இருந்து அறவிடும் கட்டணத்தை ஏதேச்சையாக இரண்டு மடங்காக்க முடிவு செய்திருப்பது குறித்து இப்பத்தியில் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால் அந்த ''ரியூட்டரியின்'' நிர்வாகியோ தன்னைத் தட்டிக் கேட்க பத்திரிகை யார் என்ற அகந்தையுடன் தமது முடிவை அமுல் செய்திருக்கிறார்.

இவரது இந்த நடவடிக்கை ஏனைய 'ரியூட்டரிகளுக்கு' முன்னுதாரணமாகி விட்டால், வசதி குறைந்த மாணவர்களின் கல்விச் செலவு அவர்களது பெற்றோர்களின் வருவாய்க்கு அப்பாற்பட்டதாகி விடும்.

குறிப்பிட்ட ''ரியூட்டரி'' யின் கட்டண உயர்வைக் கண்டித்தும், ஆட்சேபித்தும், மாணவர்களும் பெற்றோர்களும் உதயனுக்கு கட்டுரைகள், கடிதங்கள் எழுதியுள்ளனர்? ஏன், கண்டனக் கவிதைகள் கூட எழுதியுள்ளனர்!

சம்பந்தப்பட்ட ''ரியூட்டரி' நிர்வாகி தமது முடிவை மாற்றி, மாணவர்களிடம் அறவிட்ட அதிக கட்டணத்தை மீளக் கொடுக்காவிடில் 'ரியூட்டரி' யின் பெயரைக் குறிப்பிட்டு பெற்றோர், மாணவரின் கண்டனத்தை. கருத்துக்களை உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் பிரசுரிக்க நேரிடும்.

★ ★ ★ ★ ★

மல்லாகம் பகுதி ஆலயம் ஒன்றைச் சேர்ந்த ஒருவர் சாமியார் போல போலியாகச் செயற்பட்டு சுவாமியின் பெயரால் மக்களை மிரட்டி அப்பாவி மக்களிடமிருந்து ஆயிரக் கணக்கில் பணம் சுருட்டி வருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கதைக்க முடியாமல் இருக்கும் ஒரு வயோதிபரைக் குணப்படுத்தித் தருவதாகக் கூறி ஒரு தொகைப் பணமும் இருபது சேவல்களையும் அவரது குடும்பத்தவரிடம் இருந்து வாங்கிய அவர், மீண்டும் அவர்களைத் தொந்தரவு செய்தார். 12 அடி நீளமுள்ள நான்கு சீற்றும் 160 சிமெந்துக் கல்லும் தனக்குத் தராவிடில் 18 நாளில் அந்தக் குடும்பத் தலைவனின் உயிரை 'காலகண்டன்' பறித்து விடுவான் என்று மிரட்டி அவற்றையும் அபேஸ் செய்த பின்னர், ''அந்தக் குடும்பத் தலைவர் வாழ்ந்து கெட்டவர்; அவரை இனிச் சுகப்படுத்த முடியாது!'' என்று கையை விரித்து விட்டாராம்.

இப்படிப் பலரை ஏமாற்றி, ஆனந்தமாகத்' திரியும் அந்நபர் குறித்து சில இயக்கங்களிடமும் முறைப்பாடு போயிருப்பதாகத் தகவல்.

மக்களின் சமய நம்பிக்கையை முதலாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள் இத்தகைய எத்தர்கள்! ஆகவே எச்சரிக்கையாக இருக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டப்படுகின்றனர்.

★ ★ ★ ★ ★

நேற்றுப் புத்தாண்டு. நேற்று அதிகாலை — அதாவது நேற்றுமுன்தினம் நள்ளிரவு — 12.00 மணிக்கு புதுவருடம் பிறந்தது, அதையொட்டி மக்கள் பிரார்த்தனை மற்றும் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். அதற்காக மக்களுக்கு வசதி செய்யும் விதத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டதாக படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. ஆனால் படைத்தரப்பில் கடைசி நேரத்தில் விடுக்கப்பட்ட இந்த அறிவிப்பால் ஊரடங்கு தளர்த்தப்பட்டமை அந்த நேரம் முடிந்த பின்பும் கூட பலருக்கும் தெரியவரவில்லை.

வழமையான ஊரடங்கு 31 ஆம் திகதி இரவு 9.00 மணி முதல் அதிகாலை 2.00 மணி வரை தளர்த்தப்பட்டிருப்பது பற்றிய அறிவிப்பு —

பருத்தித்துறை பிரிகேட்டில் 31 ஆம் திகதி காலை பத்திரிகையிலும், 30 ஆம் திகதி மாலையில் பலாலி சேவையிலும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமத்தின் ஏனைய பிரதேசங்களில் ஊரடங்கு (31ஆம் திகதி இரவு 9.00 மணி முதல்) தளர்த்தப்படுவது பற்றிய அறிவிப்பு அன்று மாலையே பலாலி சேவையில் அறிவிக்கப்பட்டது. அத் தகவல் தொண்ணூறு வீதமான மக்களை எட்டவில்லை. வலிகாமத்தின் பெரும்பகுதி மக்கள் அடுத்தநாள் — நேற்று — காலையில் பத்திரிகை பார்த்துத்தான் முதல்நாள் ஊரடங்கு தளர்த்தப் பட்டிருந்த தகவலை அறிந்து கொண்டனர்.

இத்தகைய இறுதிநேர ஊரடங்குத் தளர்வுகள், அறிவிப்புகள் வேண்டுமானால் யாழ். குடாநாட்டு மக்களுக்கு இராணுவம் சலுகை காட்டுகின்றது எனச் சர்வதேச உலகை நம்பவைக்க உதவலாம். ஆனால் குடாநாட்டு மக்களுக்கு உதவப் போவதில்லை.

-மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள $5\frac{1}{2}$ அடி உயரமுள்ள பெரிய கெல்வினேற்றர் குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: யூட் பேர்ட்டி, 390, பருத்தித்துறை வீதி, அம்மன் கோவில் அண்மை, நல்லூர்.
(61748)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் (Broiler) சேவல், கல் பேட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(61804)

### தேவை

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் K. K. S. பலாலி வீதிகளுக்கு அண்மையில் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 831, மே/பா, உதயன், யாழ்ப்பாணம்.
(61757)

### வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட்டில் அமைந்துள்ள 192/1, இலக்கமுடைய A. T. எதிர் வீரசிங்கம் அவர்களது வீடும் ஐந்து பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 25, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(61824)

### திருமண சேவை

கேட்டை நட்சத்திரம் 1970 ஆம் ஆண்டு லக்கின பாவம் 48 செவ்வாய்க் குற்றமற்ற ஆசிரியைக்கு மணமகன் தேவை. எம்மிடம் அரச தனியார் தொழில்களில் ஜாதகக் குறிப்புகள் உண்டு. ஜாதகக் குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: திருவெள்ளாறை திருமண சேவை, தா. நிர்மல மூர்த்தி அல்லாரை வீதி, மீசாலை.
(61729)

### ஜோதிடம்

(20 – 12 – 98) ராகு கேது மாற்றம், (09 - 01 - 99) வியாழமாற்றம், (18-01-99) செவ்வாய் மாற்றம் எல்லா ராசிகளுக்கும் ஒரே புத்தகம். ரூ. 12/– விற்பனையாகின்றது. (கணிப்பாசிரியர் PROF. த. சத்தியதாசன்) பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(61632)

### தவறிவிட்டது

சிவலிங்கம் சேதீஸ்வரன் என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் இரண்டும் வட்டுக்கோட்டையில் 26 – 12 – 98 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒளிக்கதிர் அழகு மாடம், வட்டுக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(61834)

### கொப்பி தவறிவிட்டது

மார்கழி 12 ஆம் 20 ஆம் திகதிக்கு இடையில் இரு அப்பியாசக் கொப்பிகள் அடங்கிய 'ஷொப்பிங்பாக்' ஒன்று தவறிவிட்டது. இதில் எனது சொந்த அத்தியாவசிய விவரங்கள் மட்டுமே உள்ளன. கொப்பியின் வெளி அட்டையில் பெயர் எழுதப்படவில்லை. உள் ஒற்றைகளில் பெயர் விவரங்கள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் Mrs, Handy 4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(61821)

## முக்கிய அறிவித்தல்

பருத்தித்துறை நகராட்சி மன்றம்

### கட்டாக்காலி கால்நடைகளை பிடித்தல்

பருத்தித்துறை நகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் வசிப்பவர்கள் தங்கள் கால்நடைகளைத் தங்கள் வளவிற்குள் கட்டி வளர்க்க வேண்டுமென்பதையும், கட்டாக்காலியாக வீதிகளிலும், ஒழுங்கைகளிலும், பொது இடங்களிலும் அலைந்து திரியும் கால்நடைகள் இதற்கென இந் நகராட்சி மன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்படுமென்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வ. விசயரட்ணம்**
**தலைவர்**
**நகராட்சி மன்றம், பருத்தித்துறை.**

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
29—12—1998
(C/5967)

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது சக மாணவன்
**கண்ணன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

### ச. சி. பூபதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**விஞ்ஞானபீட மாணவர்கள்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**

(61812)

## கலைமகள் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

### A/L 2001

### கலை, வர்த்தக பிரிவுகள்

ஆரம்பம்: 04 - 01 - 1999 காலை 9 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | மோகன் |
| வணிகக்கல்வி | — | முரளி |
| கணக்கீடு | — | சிவா |
| தமிழ் | — | லிங்கம் |
| இந்துநாகரிகம் | — | சிறீஸ் |
| அளவையியல் | — | ஜெயசுரேஸ் |
| புவியியல் | — | ஞானி |
| வரலாறு | — | வாகீசன் |
| அரசியல் | — | முகுந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | சுபானுகா |
| வணிக புள்ளி விவரவியல் | — | அம்பு |
| பொது உளச்சார்பு | — | கோணேஷ் |

(61838)
- நிர்வாகி

## நீங்காத நினைவினிலே ஒன்பது ஆண்டுகள்...



அமரர்

### சின்னையா கனகரத்தினம்

(மகாலிங்கம்)

(ஹப்பி ரெக்ஸ்ற் பங்காளர்)

மலர்வு **05–07–1952**
உதிர்வு **11–01–1990**

ஒன்பது ஆண்டுகள் ஓடிக் கழிந்ததுவே
ஓயவில்லை உன்நினைவு எம்மை விட்டு
அன்பினில் பூத்த மலரே உன்னை
அவனியில் பிரிந்தே வாடுகிறோம் ஐயா
நின்முகங் காணா நாமும் இங்கே
நின்மதி இழந்தோம் நீள்துயர் அடைந்தோம்
எம்குல விளக்கே ஏற்றிய தீபமே!
எப்பவுன் திருமுகம் இனியாம் காண்பது?

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர், சகோதரி.**

398/2, நொத்தாரிஸ் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(61793)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### சரவணமுத்து இராசையா

(செல்வம்)

தோற்றம் **18–11–1910**
மறைவு **03–12–1998**

எங்கள் குடும்பத்தலைவனாய் குலவிளக்காய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் வாழ்வைச் சிறப்பித்து அனைவரையும் பேணி வளர்த்த அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியையில் சமுகம் தந்த அனைவருக்கும் எமது நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (02 - 01 – 1999) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் சபிண்டீகரணக் கிரியையில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஆனைக்கோட்டை சந்திக்கு அருகில்,
ஆனைக்கோட்டை.
(61790)


உடற்கல்வி மணி
(DIPLOMA)
கற்கைநெறி
1998/99

உடற்கல்வி மணி
கற்கை நெறியின்
இரண்டாம் தவணை
விரிவுரைகள்
04 - 01 - 1999 இல்
ஆரம்பமாகின்றன.

– பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/5973)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபாப் புரட்சியின் வெற்றிக்கு வித்திட்ட இறுதிச் சமரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

## நேற்றிரவு அதிபர் காஸ்ட்ரோ முக்கிய உரை

ஹவானா, ஜன. 2

கியூபாப் புரட்சியின் வெற்றிக்கு வித்திட்ட இறுதிச் சமரின் 40ஆவது ஆண்டு நினைவு தினத்தை கியூப மக்கள் கொண்டாடுகின்றனர்.

புரட்சியின் வெற்றிக்கு வழி சமைத்த இந்தச் சமரின் மூலம் 1959ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சிப் படைகள் ஆட்சியைக் கைப்பற்றின. சர்வாதிகாரி படிஸ்ராவின் ஆட்சி முடிவுக்கு வந்த தினம் நேற்றாகும்.

கியூபாவின் இளம் கம்யூனிஸ்டுக்கள் இராணுவ சீருடை அணிந்து வீதிகளில் இறங்கி புரட்சியின் நினைவு நாள்களைக் கொண்டாடி வருகின்றனர். கெரில்லா புரட்சியின் முன்னோடியான ஏர்னஸ்டோ சே குவரா தலைமையிலான கெரில்லாக்கள் சந்தா கிளாரா என்னும் இடத்தில் எதிரிப்படைகளைத் தோற்கடித்த தாக்குதல் சம்பவமே புரட்சியின் வெற்றிக்கு காரணமாயிற்று; அதன் மூலம் காஸ்ட்ரோவின் இராணுவம் அதிகாரத்துக்கு வந்தது.

கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வரும் புரட்சியின் நினைவு நாள் கொண்டாட்டங்களின் இறுதியாக நேற்று இரவு அதிபர் பிடல் காஸ்ட்ரோ சந்தியா கோடி கியூபா நகரச் சதுக்கத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு முக்கிய உரையாற்ற இருந்தார். 36 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற கியூபாவை ஒரு கம்யூனிஸ்ட் நாடாக இன்று வரை கட்டிக் காத்து வருபவர் காஸ்ட்ரோ. கியூபாவின் முக்கிய ஆதரவுக்கரமாக விளங்கிய சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னரும் அங்கு கம்யூனிஸம் தப்பிப்பிழைத்து நின்று நீடித்து வருகிறது.

'கியூபப் புரட்சி விரைவில் சரிந்து விடும்' என்று மேற்குலக தொடர்பு சாதனங்கள் விடாமல் பிரசாரம் செய்துவரும் இவ்வேளையில் அதிபர்காஸ்ட்ரோ நேற்றிரவு ஆற்ற இருந்த உரை முக்கியத்துவம் பெறுகிறது. (ஐ)



கெரில்லாப்போராட்டத்தின் முன்னோடியான ஏர்னெஸ்ட்ரோ சே - குவராவும் கியூப புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோவும் புரட்சிக்காலத்தில் ஒன்றாகக் காணப்படுகின்ற புகைப்படம். (ஐ)

# 'யூறோ' நாணயம் நேற்று அறிமுகம்!

லண்டன், ஜனவரி 2

**ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பொது நாணயமான 'யூறோ' (EURO) நேற்று ஜனவரி முதலாம் திகதி முதல் அறிமுக ரீதியில் புழக்கத்துக்கு வந்தது.**

ஐரோப்பாவில் உள்ள 11 நாடுகளுக்கும் பொதுவானதாக இந்த நாணயம் புழக்கத்தில் இருக்கும். ஒஸ்ரியா, பெல்ஜியம், லக்சம்பேர்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளே அவையாகும்.

நேற்று புழக்கத்துக்கு வந்த 'யூறோ' நாணயம் இந்தப் 11 நாடுகளிலும் கட்டம் கட்டமாக அமுலுக்கு வந்து 2 ஆயிரத்து 2ஆம ஆண்டுஜூலை முதலாம் திகதி முதல் பூரணமாகப் புழக்கத்துக்கு வரும். அதுவரை வங்கி நடவடிக்கைகளோடு மட்டுமே இந்த நாணயம் சம்பந்தப்பட்டிருக்கும்.

தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புழக்கத்தில் உள்ள நாணயங்கள் அனைத்தும் 2 ஆயிரத்து 2 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதியுடன் முற்றாகப் புழக்கத்தில் இருந்து நீக்கப்படும்.

சர்வதேச வர்த்தகத்தில் செல்வாக்குச் செலுத்தும் நாணயமாக அமெரிக்க டொலரே தொடர்ந்து இருந்து வருகிறது.

'யூறோ' நாணயத்தை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் முதலில் எடுக்கப்பட்டு வந்தபோது அந்த முயற்சி வெற்றி அளிக்காது எனக் கருதிய அமெரிக்கா தற்போது அந்த நாணயம் புழக்கத்துக்கு வருவதால் கலக்கமடைந்துள்ளது. (ஐ)

# கடத்தலில் தொடர்பு என இருவர் கைது

சென்னை, ஜன. 2

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கடத்தும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேசத்தில் விடுதலைப்புலிகள் உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரும் அவரது ஆதரவாளரும் திருச்சிராப்பள்ளி மாநில காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று காவல்துறையினர் தெரிவித்தனர். (இ-3-6)

# உலகம் மறந்து விட்ட இலங்கைப் போர்!

இலங்கையில் இன நெருக்கடியால் மூண்ட போர் மற்றும் ஒரு புதிய ஆண்டை நோக்கி நகர்கிறது. இப்போர் நீண்டகாலமாகத் தொடருவதால் உலகம் அது குறித்துப் பெரிதும் அக்கறைப்படுவதாக இல்லை.

இவ்வாறு வெளிநாட்டு ராஜதந்திரிகள் கருத்துக் கூறியுள்ளதாக 'றோய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

''உண்மையில் எவருமே அக்கறைப்படுகிறார்கள் இல்லை— என்றே நான் நினைக்கிறேன். நீண்டகாலமாக இப்போர் இழுபட்டுக்கொண்டே போகிறது. இதனால் உலக வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் கரிசனை காட்டுவதாக இல்லை''— என்று மேற்குலக ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

''ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், மேலும் ஆயிரக் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர். ஆனால் உலக அரங்கில் வேறுபாடு எதனையும் காண முடியவில்லை. இலங்கை காஸாவோ, கொசோவோவோ அல்ல'' என்று மற்றொரு ராஜதந்திரி கூறினார்.

அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கான அறிகுறி தென்படாத பட்சத்தில் இலங்கைஅரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் புதிய ஆண்டிலும் தீவிரமாகத் தொடரவே செய்யும் என வேறு சில ராஜதந்திரிகள் கருத்துவெளியிட்டனர்.

இவ்வாறு 'றோய்ட்டர்' மேலும் தெரிவிக்கிறது (ஐ)

# இந்திய கடற்படை தளபதி பதவி நீக்கப்பட்டார்!

இந்தியக் கடற்படைத் தலைமைத்தளபதி அட்மிரல் விஷ்ணு பகவத் கடந்த புதனன்று பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

துணை அட்மிரல் அசில் குமார் கடற்படையின் புதிய தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்புத் துறையில் தலைமைத் தளபதி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

அந்தமான் தீவுகளில் துணைத் தளபதியாக இருந்த ஹரி சிங்கை வைஸ் அட்மிரலாக நியமிப்பதற்குமத்திய அமைச்சரவை நியமனங்கள் குழு மேற்கொண்ட முடிவை ஏற்க மறுத்ததால் அட்மிரல் விஷ்ணு பகவத் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போதிய கவனத்துடனும் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னருமே இந்தப் பதவி நீக்கம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னர் படைத்தளபதி ஒருவர் பதவி நீக்கப்பட்டிருப்பது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும். மத்திய அரசின் இந்த முடிவை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. (ஐ-ரீ)

# அன்வருடைய விந்துக்கறை நிரூபிப்பு

கோலாலம்பூர், ஜன. 2

மலேசியாவின் முன்னாள் பிரதிப் பிரதமரும் நிதி அமைச்சருமான அன்வர் இப்ராஹிமின் வழக்கு விசாரணையின் போது கொண்டு வரப்பட்ட மெத்தையில் அவருடைய விந்துக் கறைகள் காணப்பட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மலேசிய நீதிமன்றில் அரசாங்க இரசாயனவியலாளர் தகவல் தருகையில் மெத்தையில் காணப்பட்ட 13 கறைகளில் சில அன்வருக்கும் அவருடைய முன்னாள் பிரத்தியோக செயலரின் மனைவி சம்ஸிடா டகரினுக்கும் உரியவை என்று டி என் ஏ பரிசோதனையில் தெரிய வந்துள்ளதாக தெரிவித்தார். (ஐ-ரீ)

# திருப்பதியில் 54 கிலோ நிறையுடைய லட்டு!

திருப்பதி, ஜன. 2

புத்தாண்டை ஒட்டி திருப்பதி ஸ்ரீ வெங்கடேசர் ஆலயத்தில் 54 கிலோ நிறையுடைய பிரமாண்டமான லட்டு நேற்று சுவாமிக்கு நிவேதனம் செய்யப்பட்டது.

ஆலய சமயலறைப் பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட இந்த லட்டு நிவேதனத்தின் பின்னர் அடியார்களுக்குப் பங்கிட்டு விநியோகிக்கப்பட்டது.

நேற்று லட்சக்கணக்கான மக்கள் ஆலயத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்பட்டதால் மேலதிகமாக 2 லட்சம் லட்டுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

60 கோடி ரூபா பெறுமதியான வைர கிரீடம் உட்பட விலை மதிப்பற்ற ஆபரணங்களால் நேற்று வெங்கடேசர் அலங்கரிக்கப்பட்டிருந்தார். (ஐ-ரீ)

# இந்திய ராணுவத்துக்கு 'எய்ட்ஸ்' அறிவுறுத்தல்

புதுடில்லி, ஜன. 2

இந்திய இராணுவ மருத்துவப் பிரிவு, படை வீரர்களுக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தலில் பாலியல் சுய திருப்தி முறைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

விபச்சாரிகளுடன் உடலுறவில் ஈடுபடுவதால் 85 சதவீதமான இராணுவத்தினருக்கு எய்ட்ஸ் நோய் ஏற்படுவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையைத் தவிர்க்கும் வகையில் — எய்ட்ஸ் நோயிலிருந்து இராணுவத்தினர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள — படையினருக்கு அறிவூட்டும் முகமாக புதிய கைநூல் ஒன்று விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதில் பாலியல் சுயதிருப்தி முறைகளைக் கையாளுமாறும், அல்லது விளையாட்டு, வாசிப்பு, ஆன்மீகம் ஆகிய துறைகளில் கூடிய கவனம் செலுத்துமாறும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

# 'சக்திமான்'; தடை செய்க!

'தூரதர்ஷனில்' ஒளிபரப்பாகிவரும் 'சக்திமான்' தொடர் நிகழ்ச்சியைத் தடை செய்யுமாறு மாநிலங்கள் அவை உறுப்பினர் ஜானேஸ்வரி மிஸ்ரா வலியுறுத்தியுள்ளார்.

கற்பனைப் பாத்திரமான 'சக்திமான்' போன்று செயற்பட முயன்ற சிலகுழந்தைகள் மாடியில் இருந்து குதித்தும், தீயிட்டுக் கொண்டும் உயிரிழந்தமை தெரிந்ததே.


## மீளாத்துயரம்

றேடியோஸ்பதி உரிமையாளர்

மாண்புமிகு சு. சி. பூபதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாரின் துக்கத்தில் நாமும் ஒருவராக பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்,

பேபி போட்டோ
திருநெல்வேலி.

(61818)



## அறிவித்தல்

வலி. வடக்கு கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராகவுள்ள எமது பகுதி அங்கத்தவர்கள், எமது சங்கத்தில் தங்கள் அங்கத்துவத்தை மாற்றிக் கொள்ளவும். புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சி- குமரவேல்
தலைவர்

இ. பரமேஸ்வரலிங்கம்
செயலாளர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

(61836)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை வீதிகளுக்குத் தார்

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளைச் செப்பனிடுவதற்கு 200 பரல் தார், கொழும்பிலிருந்து மகோ கப்பலில் கொண்டுவரப்படவிருக்கின்றது.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வ. விஜயரட்ணம் மேற்கொண்டுள்ளார். (இ-109)

## வீட்டுச் சேதங்களுக்கு 2 ஆம் கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன. 2

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்த வீடுகளுக்கான நிவாரணத்தைப் பெற விண்ணப்பித்தவர்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

முதற்கட்டமாக இவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 8 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. முதற் கட்ட கொடுப்பனவை 5 ஆயிரம் குடும்பங்கள் பெற்றுள்ளன.

இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்குவதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு பிரதேச செயலர் மட்டத்திலான குழு ஒன்று நேரடியாக விஜயம் செய்து பாதிப்புத் தொடர்பான விவரங்களைத் திரட்டி யாழ். செயலகத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க உள்ளது.

இந்த அறிக்கையின் பின்னர் யாழ். செயலக அதிகாரிகளின் பரிசீலனையின் பின்னரே இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்ட நிவாரணத்திற்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபா செலவு செயயப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டில் வீடுகள் பாதிப்பு நிவாரணம் வழங்குவதற்காக யாழ். செயலகத்திற்கு 22 கோடியே 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5-7)

## அழுகிய நிலையில் மரக்கறி விற்பனை

வலிகாமம்தெற்கு, ஜன. 2

மருதனார்மடம் சந்தையில் மக்களின் பாவனைக்கு உதவாத பலமரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இங்கு விற்கப்படும் பல மரக்கறிகள், பழங்கள், வெங்காயம் முதலியன அழுகிய நிலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவருகின்றது.

மழைகாலமாகையால் பல மரக்கறிகளும் விரைவில் அழுகிவிடும் நிலையில் உள்ளன.

சந்தைக்குக்கொண்டு வரப்படும் கோவா அடிப்பாகம் அழுகி, இலைகள் புழுக்களால் அரித்துக் காணப்படுகின்றன. வியாபாரிகள் அவற்றில் மேலெழுந்தவாரியாக இலைகளை ஒடித்தும், காம்புகளை வெட்டியும் விற்பனை செய்துவருகின்றனர்.

வெங்காயம்நீரில் நனைந்தமையால் முளைகிளம்பிக் காணப்படுகின்றது.

கரட் அழுகிய பாகம் வெட்டப்பட்டு மீதி விற்பனையாகின்றது.

இம்மரக்கறிகளை வாங்கி பயன்படுத்துவோருக்கு வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுகின்றன.

சுகாதார பரிசோதகர்கள் இவற்றை பரிசீலித்து பாவனைக்குதவாதபொருள்களின் விற்பனையைத் தடை செய்ய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஐ-152)


![ROTARACT CLUB]

இதோ
ரசிகப் பெருமக்களே!
இன்னிசை மழையில் நனைய
உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

மக்கள் சேவைக் கழகமாகிய
யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழக
வளர்ச்சி நிதிக்காக
"கானரஸா" இசைக்குழுவினர் வழங்கும்

காதல் கீதங்கள்

இசை நிகழ்ச்சியை கண்டு, கேட்டு ரசிக்கக் கிடைக்கும்
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்!

★ இடர்ப்பட்ட உள்ளங்கள்
இளைப்பாற ஒரு நேரம்

★ அனைத்துமே இசைப்புயல்
ஏ. ஆர். ரகுமான் செதுக்கியவை

இடம்:- யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

காலம்:- 1999 தை 2 ஆம் 3 ஆம் திகதிகளில்
பிற்பகல் 1.30 மணிக்கு

அனுமதிச் சீட்டுக்களை மண்டப வாயிலிலும்
பெற்றுக் கொள்ளலாம்.

புத்தாண்டைப் புது வேகத்துடன் தொடங்குங்கள்!
(சி-5952)


## 4 பாடசாலைகளின் அ. அட்டைகள் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 2

பாடசாலைகள் மூலமாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த— குடாநாட்டைச் சேர்ந்த— 4 பாடசாலைகளின் அடையாள அட்டைகள் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக யாழ். செயலகத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழியவளை சி. சி. த. க பாடசாலை, வாதரவத்தை ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, வரணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குரிய அடையாள அட்டைகளே இவ்வாறு தேங்கிக் கிடப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பே கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஐ-7)

## பரிசில் நாள்

புன்னாலைக்கட்டுவன், ஜன. 2

புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலையத்தின் பரிசில்நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விக்கினேஸ்வரா மணிமண்டபத்தில் க. கேதீஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் ஓய்வுபெற்ற கணக்காளர் நா. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-133)


## கணபதி ஹோமம்

நாட்டில் சமாதானம் வேண்டி வருடா வருடம் நடைபெறும் கணபதி ஹோமம் நாளை (03 - 01 - 1999) ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு உசன் கஜகேணி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

அடியார்கள் யாவரும் வந்து பங்குபற்றி விநாயகரின் அருளையும் வேண்டி நாட்டில் சமாதானத்தைப் பெறுவோமாக!

கேதீஸ்வரக் குருக்கள்

உசன், மிருசுவில்

விளம்பர அன்பளிப்பு:

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
262, கண்டி வீதி, சாவகச்சேரி.

(61848)



## கண்ணீர் அஞ்சலி

31- 12- 1998 இல் காலமான
ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்.

அமரர் சபாபதிப்பிள்ளை வல்லிபுரம்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கா. இரத்தினசாமி குடும்பம்
(மருமகன்)
(காரியாலய உதவியாளர்,
நிர்மாணத் திணைக்களம்
வவுனியா)

சதாஸ் பிளேஸ்,
அத்திரான்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி/5976)


## விடைத்தாள் மதிப்பிடும் பணி

குருநகர், ஜன. 2

நடைபெற்று முடிந்த ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை முதல் யாழ். வேம்படி மகளிர் பாடசாலையில் ஆரம்பமாக உள்ளது.

பரீட்சகர்களாக நியமனம் பெற்ற சகலரையும் அன்று காலை 8 மணிக்கு அங்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-51)

## அடையாள அணிவகுப்பு 14 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன. 2

கிளாலியில் டிசெம்பர் 7ஆம் திகதி மூன்று மாதக் குழந்தை ஒன்றும் 15 வயதுச் சிறுவனும் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பான மரண விசாரணையும் அடையாள அணிவகுப்பும் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் காயமடைந்த பிரதான சாட்சியான திருமதி அ. அமிர்தராணி (வயது 35) ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதால் நீதிமன்றத்துக்கு வர முடியவில்லை.

இதனால் நேற்று முன்தினம் நடைபெறவிருந்தமரணவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றபதில் நீதிவான் க. கேசவன் சாட்சி சமுகமளிக்காமையினால் மேலதிக விசாரணையையும் அணிவகுப்பையும் ஒத்தி வைத்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மூன்று இராணுவத்தினர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ([illegible])


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
14 — 07 — 1966



ஆண்டவன் திருவடியில்
19 — 12 — 1994

செல்வன் உயிரமுத்து வாசுதேவன்
(வாசு)

திதி: 02 - 01 - 1999

தங்கள் பிரிவுத் துயரைத் தாங்க முடியாது ஆறாத் துயருடன் நாலாவதாண்டு நினைவஞ்சலி தினத்தில் உங்கள் ஆத்ம சாந்திக்காக ஸ்ரீ மீனாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கும்

ஐயா, அம்மா, அண்ணாமார், தம்பி.
அக்காமார், மைத்துனர்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு.

(61841)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



செல்வி கந்தப்பிள்ளை கோகிலாம்பிகை
(கோப்பாய் மத்தி)

தோற்றம்
26 - 08 - 1950

மறைவு
02 - 01 - 1998

எமது குடும்பத்தில் பாசவிளக்காய் இருந்து எம்மைவிட்டுப் பிரிந்த இம் முதலாவது ஆண்டு நிறைவில் நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்

சோனெழு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

[61829]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல்கள், கொலைப் பயமுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலேயே மக்கள் சேவை!

## விளக்குகின்றார் 'புளொட்' கிருபா

யாழ்ப்பாணம், ஜன. 2

''அச்சுறுத்தல்கள், உயிரிழப்புக்கள், ஆபத்துக்கள் மத்தியிலும் மக்களின் அன்றாடத் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்காக நாங்கள் செயற்பட்டுவருகிறோம்''

—இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய புளொட் பிரதிநிதி செ. கிருபைராசா தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் க.சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் எவருக்கும் எதிராகவோ, சவாலாகவோ செயற்படவில்லை என்பதை எமக்கு அச்சுறுத்தல் விடுபவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த வருடம் பயங்கரமான ஒரு சூழலில் எமது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றோம். மாநகர சபை பதவியேற்ற நாளிலிருந்து மூன்று மாதத்துக்கு ஒருதடவை ஒருவரை இழந்து வந்துள்ளோம். இனிமேலும் இவ்வாறானதொரு நிலை ஏற்படக்கூடாது என்பதே எமது விருப்பமாகும்.

யுத்தம் ஒரு பக்கத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் போது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக நாங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டோம். தொடரும் யுத்தத்தின் மத்தியிலும் மக்களுக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் எமக்கு எதிரான சக்திகள் இங்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே தேர்தலிற் போட்டியிட்டோம்

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா நகரசபைகள் 1994 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாக இயங்கி வருகின்றன. அது போன்றே யாழ். மாநகரசபையும் இயங்கி மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்று விரும்பியே பதவிகளை ஏற்றுக்கொண்டோம்.

போரினால் அழிவுற்றிருக்கும் யாழ். குடாநாடு அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்பதற்காகவே மக்கள் எமக்கு வாக்களித்துள்ளார்கள். வடக்கு—கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏனைய உள்ளூராட்சிச் சபைகள் இயங்கும் இவ்வேளையில் யாழ். மாவட்டத்திலுள்ள சபைகள் மட்டும் இயங்கவிடாமல் ஏன் தடுக்கப்படுகின்றன?

விடுதலைக்காக போராடுபவர்களுடைய தியாகத்தையும் வீரத்தையும் நாங்கள் மதிக்கின்றோம்; துதிக்கின்றோம்.

ஒவ்வொரு கூட்டத்திற்கு பின்னும் ஒருவரை இழந்து வருகிறோம். அடுத்த கூட்டத்திற்கு யார் யார் இருப்போமோ தெரியாது. மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்த போதும் நாம்சேவையிலிருந்து ஒதுங்கிவிட முடியாது.

தமது தேவைகளை நாம் நிறைவேற்றுவோம் என்பதாலே தேர்தலில் மக்கள் எமக்கு வாக்களித்தார்கள். எமக்கு வாக்களித்த மக்களை நாம் ஏமாற்ற முடியாது என்றார்.

### 'உதயன்' கண்டிக்காதது ஏன்?

ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் ம. மங்களநேசன் உரையாற்றும் போது கூறியதாவது:-

நாம் பதவியேற்ற ஒரு வருட காலத்தில் பலரைப்பலி கொடுத்து விட்டோம்.

தமிழீழ விடுதலை விரும்பிகள் என்ற பெயரில் சபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுபவர்கள் யார் என்பதைத் தெளிவு படுத்த வேண்டும்.

இவ்வாறானதொரு இயக்கம் இருக்கின்றதா? அல்லது இவர்கள் தமிழ்க் கட்சிகள் அல்லது புலிகளின் அடிவருடிகளா என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

'ரெலோ' அமைப்பின் நடவடிக்கையைக் கண்டித்த 'உதயன்' பத்திரிகை தமிழீழ விடுதலை விரும்பிகள் என்ற பெயரில் நடைபெறும் கொலைகள் குறித்து மௌனம் சாதித்து வருகிறது.

தொடரும் கொலைகளுக்கு விடுதலைப் புலிகள் தான் காரணம் என்று சொன்னால் ஏன இவ்வாறு கொலை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்களைக் கேட்போம்

தமிழீழ விடுதலை விரும்பிகள் என்ற பெயரில் செயற்படுபவர்களின் நோக்கம் பிழையானது என்பதை அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கெலாம் இருக்கிறது. இவர்களுக்கு எதிராக அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்

இன்று மதிமுகராஜாவுக்கு நடந்தது நாளைக்கு எமக்கு நடக்காது என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை.

சுழற்சி முறையில் தொடரும் இந்தப் படுகொலைகளை நிறுத்துவதற்கு துண்டுப் பிரசுரம் மற்றும் பேரணிகள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்—என்றார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த க. சின்னத்துரை உரையாற்றும்போது கூறியதாவது:-

மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கின்ற பொது நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைகள் மதிமுகராஜா போன்றவர்களின் கொலையைக் கண்டிக்காதது வேதனைக்கு உரியது. இனிமேலாவது இத்தகைய கொலைகளையும் கண்டிப்பதற்கு அவை தயங்கக்கூடாது.

யாழ். மாநகர சபையை இயங்கவிடாமல் செய்வதனால் யாழ். குடாவில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்க முடியுமா? சிவில் நிர்வாகம் என்றுமே இயங்கிக்கொண்டு தானிருக்கிறது. விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்திலும் சிவில் நிர்வாகம் இயங்கியது. 1961 ஆம் ஆண்டு மட்டும் தந்தை செல்வா நடத்திய சாத்வீக போராட்டத்தினால் இரு நாள்கள் சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருந்தது.

தமிழீழ விடுதலை விரும்பிகளின் கொலைகளைக் கண்டித்து பேரணி நடத்தப்படுவதுடன் துண்டுப் பிரசுரங்களும் பத்திரிகைகளுக்கு அறிக்கைகளும் விடப்படவேண்டும் — என்றார்.

ஈ. பி. டி பியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் அன்ரன் சிவலிங்கம் உரையாற்றும்போது —

துப்பாக்கிகளைக் கண்டு மக்கள் அஞ்சுகிறார்கள். தமிழீழ விடுதலை விரும்பிகளின் தவறான போக்குக் குறித்து துண்டுப் பிரசுரம் மூலம் மக்களுக்குச் சுட்டிக் காட்டப்படவேண்டும் — என்றார்.

மாநகரசபை உறுப்பினர் எஸ். எஸ். கணேந்திரன் உரையாற்றும்போது கூறியதாவது:

மதிமுகராஜாவின் கொலை புத்திஜீவிகள் மற்றும் ஜனநாயகவாதிகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு சாவுமணி.

இங்கு நடைபெற்ற படுகொலைகளுக்கு உரிமை கோர முடியாதவர்கள் சங்கிலியன்படை என்றும் தமிழீழ விடுதலை விரும்பிகள் என்றும் வேறு வேறு பெயர்களில் உரிமை கோரி வருகிறார்கள்.

தாம் செய்த கொலைகளுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய கட்சிகளின் மீது பழிசுமத்தவே இவ்வாறு வேறு பெயர்களில் கொலைகள் நடத்தப்படுகின்றன.

மதிமுகராஜாவிற்கு நேரில் வந்து அஞ்சலி தெரிவிக்கப் பயந்தவர்கள் தொலைபேசி மூலம் தமது அஞ்சலியைத் தெரிவித்தார்கள். இறுதி ஊர்வலம் நடைபெறும் போது வீட்டு வாசலில் நின்றும் வீதிகளில் நின்றும் பெரும் எண்ணிக்கையான மக்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தியதைக் கண்டோம்.


நாங்கள் இங்கு வராது விட்டிருந்தால் இங்குள்ள மக்கள் இராணுவ ஆட்சியின் கீழோ அல்லது சிங்களக் கட்சிகளின் ஆட்சியின் கீழோதான் இருந்திருப்பார்கள்.

தமிழனே தமிழனை ஆட்சி செய்வது தவறானதா?—என்றார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர்களானசெ. கந்தையன், எஸ். விஜயரட்ணம், எஸ். எட்வேர்ட் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

(உ-5)

## இந்த இளைஞனுக்கு உதவுங்கள்



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சென். ஜோன்ஸ் வீதியைச் சேர்ந்த 17 வயது இளைஞன் அலெக்சாண்டர் சாம்ராஜன் 'Fallot's Tetralogy' என்ற இருதய நோயினால்பாதிக்கப்பட்டுள்ளார்.

இவரை தமிழ்நாடு சென்னையில் உள்ள மெடிக்கல் மிஷன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்று இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கு ஆகக் குறைந்தது ஐந்து லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

நான்கு பிள்ளைகளின் தந்தையாரான இவரது தகப்பனார் அலெக்சாண்டர் வர்த்தக நிலையம் ஒன்றில் விற்பனையாளராகப் பணி புரிகிறார். அவரால் இந்தளவு பணத்தைக் கண்டு பிடிக்க முடியாது.

அதனால்—

இந்த இளைஞனுக்குப் புது வாழ்வு அளிக்க உதவும் பொருட்டு யாழ். றோட்டறிக் கழகம் நிதி சேகரிக்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

இந்த உதவி நிதிக்கு பலரும் தம்மால் இயன்றளவு பண உதவி செய்து வருகிறார்கள். நீங்களும் பாதிப்புற்ற இளைஞன் மீது கருணை கொண்டு நிதி உதவி செய்தால் அவனை விரைவில் சிகிச்சைக்கு உட்படுத்த முடியும்.

இந்த மனித நேய உதவிக்குப் பங்களிக்க விரும்புவோர் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி 20215 இலக்க சேமிப்புக் கணக்கில் பணம் செலுத்தலாம். 347, கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் நிறுவன அலுவலகத்தில் இயங்கும் யாழ்.றோட்டறிக் கழகப் பணிமனையிலும் நன்கொடையைச் செலுத்தலாம்.

இளைஞன் சாம்ராஜன் புதுவாழ்வு பெற இரக்கம் காட்டுங்கள்; அவனுக்கு வாழ்வளியுங்கள். பெருமனது கொண்டு உங்கள் பங்களிப்பை நல்குங்கள்.

## வேலணையில் மின் தடை

வேலணை, ஜன. 2

வேலணைப் பகுதிக்கான மின் விநியோகம் கடந்த ஒரு வார காலமாகத் தடைப்பட்டுள்ளது. மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட கோளாறே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரீ)

## பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 2

இடம்பெயர்ந்து இணுவில் காரைக்கால் சிவன் கோயிலடியில் இதுவரை இயங்கி வந்த பன்னாலை சேர். கனகசபை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மீண்டும் முன்னர் இயங்கிய இடத்தில் இயங்கவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து மேற்படி பாடசாலை பன்னாலையில்இயங்க விருப்பதாக பாடசாலையின் அதிபர் நா. ஆனந்தராசா தெரிவித்தார். (ஐ-4)

## கூட்டம்

வலி-தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மரமுந்திரிகை செய்கை செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் பட்டினசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (உ-90)

## ஆசிரியர்கள் பயிலமர்வு

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டத்தில் தரம் ஒன்பதில் விஞ்ஞானமும், தொழிநுட்பவியலும் பாடத்தை கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான பயிலமர்வு நாளை காலை 9-30 மணிமுதல் யாழ். இந்து [illegible] பெறவிருக்கின்றது. [illegible]

## குடும்பப் பெண்மணி புதனன்று சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜன. 2

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் பளை பொலீஸாரினால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

தாளையடியைச் சேர்ந்த திருமதி சந்திரசேகரம் செல்வமலர் (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டதாகஉறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

சடலம்பிரேதபரிசோதனை மற்றும் மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் இவர் நித்திரையாயிருந்த போது வீட்டுக்கு வந்த மூவர் விசாரணை நடத்தப்போவதாகக் கூறி இவரை அழைத்துச் சென்றதாகவும்—

வீட்டிலிருந்து அரைமைல் தொலைவில் வைத்து இவரைச் சுட்டுக் கொன்றதாகவும்—

உறவினர்கள் தெரிவித்தனர்.

(உ-5-15)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ் நகர் மைய றோட்டறக் கழக வளர்ச்சி நிதிக்காக ''கானரஸா'' இசைக் குழுவினர் வழங்கும் காதல் கீதங்கள் இசை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 1-30 மணிக்கு வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-8)

## 13 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். ஆஸ்பத்திரியில் சமயாசமய அடிப்படையில் 13 சுகாதார ஊழியர்களுக்கு நேற்று நியமனம் வழங்கப்பட்டது.

அண்மையில் நடந்த நேர்முகப்பரீட்சையில் இப்பதவிக்கு 30 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனராயினும், வதிவிட சான்றிதழ் சமர்ப்பித்த 13 பேருக்கே நேற்று நியமனம் வழங்கப்பட்டது.

வதிவிடச் சான்றிதழ்களை சமர்ப்பித்த பின்னர் எஞ்சியோருக்கு நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-139)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். பிரதேச செயலக தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு றக்கா வீதியிலுள்ள தையல் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (ஐ)

## விடுவிப்பு

தென்மராட்சி, ஜன. 2

திருவெம்பாவையையொட்டி காலையில் கோயில் மணி, சங்கு ஆகியவற்றுடன் வீடு வீடாகச்சென்ற சிறுவர்கள் பதினொரு பேர் சாவகச்சேரி படையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (உ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைப் பகுதியில் மர முந்திரிகைச் செய்கை

வேலணை, ஜன. 2

வேலணைப் பகுதியில் மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கை செய்வதற்கு ஏற்றதானமண்வளம், நீர்வளம் உண்டா எனப் பரிசோதிப்பதற்கென கொழும்பிலுள்ள மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திலிருந்து இரு உத்தியோகத்தர்கள் கடந்த புதன்கிழமை வேலணைப் பிரதேச சபைக்கு வருகை தந்திருந்தனர்.

இவர்களும் வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தியும், பிரதேசசபை எழுதுவினைஞர் கா. சண்முகதாசனும் வேலணைப் பகுதியினைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

இப்பயிர்ச்செய்கைக்கு வேலணை கிழக்கில் அமைந்துள்ள சாட்டிப் பகுதியே பொருத்தமானது எனச் சிபார்சு செய்யப்பட்டது.

மரமுந்திரிகை பயிர்ச் செய்கைத்திட்டத்திற்கென விசேட மூலதன நிதியிலிருந்து 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்திற்கான நிதி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய கே. என் டக்ளஸ் தேவானந்தாவினால் வேலணைப்பிரதேச சபைக்கு விசேட மூலதன நிதி – 1998 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-ரீ)

# வேலணை சிற்பனை வீதி திருத்தப்படவில்லை

வேலணை, ஜன. 2

வேலணை-குறிகாட்டுவான் பிரதான வீதிக்கு மேற்காகச் செல்லும் சிற்பனை வீதி பாவனைக்கு உதவாத நிலையில் மிகவும் மோசமானதாக உள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையினால், இவ் வீதியினூடான போக்குவரத்து பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

வேலணை – ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இராணுவ முகாம் அமைந்திருப்பதால் அவ்வீதி பொது மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படுவதில்லை. அன்றிலிருந்து இன்றுவரைக்கும் வேலணை ஊர்காவற்றுறைக்கான பிரதான வீதியாக விளங்குவது சிற்பனை வீதி என்பது குறிப்பிடத்தக்கது.

வேலணையில் மக்கள் மீளக் குடியமர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும், வேலணை ஊர்காவற்றுறைக்கான பிரதான வீதியாக விளங்கும் இவ்வீதி திருத்தப்படாதிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் பெரிதும் விசனமடைகின்றனர். (ஐ-ரீ)

## வீதியில் வெள்ளம் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். நாவலர் லேன் பகுதியில் மழைநீர் வழிந்தோட ஏற்ற வடிகாலமைப்பு இல்லாமையால் வீடுகளினுள் வெள்ளம் புகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவலர் வீதியில் இருந்தும் நாவலர் லேன் பகுதியிலுள்ள வீடுகளிலிருந்தும் மழைகாலத்தில் வெளிவரும் வெள்ளநீர் நாவலர்லேன்பகுதியில் வழிந்தோட வழியின்றி அப்பகுதியில் போக்குவரத்திற்குதடையாக தேங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் நால்வரும், ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் ஒருவரும் என மொத்தம் 14 உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர்.

(அங்கு நிகழ்த்தப்பட்ட உரைகளின் விவரம் உள்ளே)

## இந்தியாவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேரத்துக்கு அரை மணி நேரம் முன்னதாகவே புதுடில்லியைச் சென்றடைந்தார். ஆனாலும்கூட அதன் பின்னர் அவர் பொதுநிகழ்ச்சிகளுக்கு உரிய நேரத்துக்குச் செல்லவில்லை என்று கூறப்படுகின்றது.

டிராஷ்ரபதிப வனில் நடைபெற்ற சம்பிரதாய பூர்வ வரவேற்பின் போது இந்தியப் பிரதமர், ஜனாதிபதி உட்பட முக்கிய பிரமுகர்கள் அரை மணி நேரம் காத்திருந்தனர்.

பௌத்த யாத்திரீகர்விடுதிக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் பங்குபற்ற அழைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் மற்றும் முன்னாள் வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்ஸிற் உட்பட சுமார் இருநூறு பிரமுகர்களும் இலங்கை ஜனாதிபதிக்காக அரை மணி நேரம் காத்திருந்தனர்.

ஜனாதிபதியின் விஜயத்தின் முதல் நாளின் போது ஜனாதிபதியுடன் இரவு விருந்துக்கு அழைக்கப்பட்ட சுமார் முந்நூறு ஜப்பானிய பௌத்த பிரமுகர்களும் சுமார் நூறு இந்தியப் பிரமுகர்களும் ஒரு மணி நேரம் எரிச்சலுடன் காத்திருந்தனர்.

மற்றொரு இரவு விருந்து மற்றும் சந்திப்புக்காக இந்திய வர்த்தகர்கள் சுமார் இருநூறு பேர் ஒரு மணி நேரத்துக்கும் அதிகம் தவம் கிடக்க வேண்டி நேர்ந்தது.

தனி சந்திப்புக்காக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இருபது நிமிட நேரமும், முன்னாள் இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் ஒரு மணி நேரமும் காத்திருக்க வேண்டி இருந்தது.

இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்க தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு வந்திருந்த இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி 40 நிமிடமும் இந்திய உப ஜனாதிபதி கிருஷ்ண காந்த் சுமார் ஒரு மணி நேரமும் காத்திருந்துவிட்டு சந்திக்காமலேயே சென்றனர்.

இதனையடுத்து இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் மேலும் 18 மணி நேரம் நீடிக்கப்பட்டது. அந்தக் கால எல்லைக்குள் புதிய நேரம் குறிக்கப்பட்டதை அடுத்து மீண்டும் அடுத்த தடவையில் அவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப்பேசினர்.

இந்தியப் பத்திரிகையாளர்களும் இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்புக்காக பல மணி நேரம் காத்துக்கிடந்ததாகவும்—

இதனால் அவர்களில் பலர் எரிச்சலடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி பங்குபற்றும் நிகழ்ச்சிகளுக்கான நேர அட்டவணையைத் தயாரித்து செயற்படுத்தும் விடயத்தில் புதுடில்லியில் உள்ள இலங்கை அதிகாரிகள் திக்குமுக்காடிப் போனதாகவும்—

தர்மசங்கடமான நிலையை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்ததாகவும்—

புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன. (உ)

# கோபாலசாமியையும் சந்திரிகா சந்தித்தார்?

கொழும்பு, ஜன. 2

இந்தியாவில் தாம் மேற்கொண்ட விஜயத்தை மேலும் ஒருநாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீடித்தமை தென்னிந்திய அரசியல் தலைவர்களைச் சந்திப்பதற்காகவே என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு அவர் தங்கியிருந்த சமயம் சந்தித்த தென்னிந்தியத் தலைவர்களில் மறுமலர்ச்சி தி.மு.க. செயலாளர் வை. கோபாலசாமி ஒருவர் எனக் கூறப்பட்டாலும் அத்தகவலை நேற்றிரவு வரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை என்று அந்தச் செய்தி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## தொப்பிகல...

(முதலாம் பக்கத் தொடர்)

நோக்கி வந்த ஒரு படையணியைபுலிபாய்ந்தகல் பகுதியில் வைத்துவிடுதலைப் புலிகள் சுற்றி வளைத்ததாகவும்—

அங்கு 40 நிமிட நேரம் கடும் சண்டை மூண்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் 3இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்த நிலையில் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் 12 படையினர் அனுமதிக்கப்பட்டனர் என்றும்—

இவர்களில் ஒருவர் அங்கு உயிரிழந்தார் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த மூன்று படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகவும்—

அந்தச் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் படையினரிடம் இன்று ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுநடவடிக்கையில் 4 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

எட்டுப் படையினர் சிறு காயங்களுக்குள்ளாகினர் என்றும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் வானொலியை ஒற்றுக்கேட்டதில் அவர்கள் தரப்பில் 58 பேர் உயிரிழந்தும், 18 பேர் காயம் அடைந்தும் உள்ளமை தெரிய வந்துள்ளது என்றும்— பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (உ-3-21-ரீ)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்)

வைத்து வெளிநாட்டுதொலை தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக தொலைத் தொடர்பு கோபுரங்களைப் புலிகள் வன்னியில் பல பகுதிகளிலும் நிறுவிவருகின்றனர் என்றும்—

முதல் கட்டமாக முல்லைத் தீவுப் பகுதியில் இந்தத் தொலைத்தொடர்பு நிலையம் இயங்க வைக்கப்பட உள்ளதாகவும்—

அறியவந்தது.

வெளிநாட்டுத் தொலைபேசி தொடர்புகளுக்கு ஒரு நிமிடத்துக்கு 750 ரூபா அறவிடப்படும் என்றும்—

வெளிநாட்டுக்கு எடுத்துப் பேச மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும்—

உள்வரும் அழைப்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்றும்—

அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

ஜனவரி முதலாம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பகுதியில் முதலாவது நிலையத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் வேலைகள் பூர்த்தியடையாத காரணத்தால் ஓரிரு வாரங்களுக்கு அது ஒத்தி வைக்கப்பட்டதாகத் தெரியவந்தது. (உ-164)

## 27 தமிழர் இதுவரை கைது

காலியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ரெலிக்கொம் நிலைய குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக நேற்று வரை 27 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே 22 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் —

நேற்றுப் பொலீஸார் மேற்கொண்ட தேடுதலில் மேலும் ஐவர் கைது செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்கள் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். (உ-3-21)

## புலி உறுப்பினர் ஒருவர் மரணம்

பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

பண்ணிசை (சதாசிவம் சிவகுமார்—வவுனியா) என்பவரே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## சாட்டியில் களவாக மாடு வெட்டப்படுகிறது

வேலணை கிழக்கு சாட்டிப் பகுதியில் சட்ட விரோதமாக —களவாக— மாடுகள் வெட்டப் படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வேலணைப் பகுதியில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுதல் பிரதேச சபையினால் தடைசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 'ராக்கிங்'...

(முதலாம் பக்கத் தொடர்)

மாணவன் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளதாக அறிய வந்தது.

பொலீஸார் பலரை நேற்று விசாரணைக்குட் படுத்தினர். (உ-3-21)

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத்தொடர்)

வும்—

இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்கியுள்ளதாகவும் —

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக இப்பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்களும் கத்தரி, பயற்றை போன்ற உப உணவுப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் —

அப்பகுதிகளுக்கான பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நெடுந்தீவுப் பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் பெய்த கடும் மழை காரணமாகச் சுமார் 18 மண் வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் கடந்தமாத முற்பகுதியில் வெள்ள அபாயம் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விவரங்கள் திரட்டப்பட்டபோதும் இதுவரை எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-7-5-15-17-86-111-133-117)


A/L 2001 மாணவர்களே!

கடந்த கால, நிகழ்கால மாணவர்களே D. M. I இன் வளர்ச்சிக்கு உறுதுணை

எதிர்கால மாணவர்களின் வளர்ச்சிக்கு D. M. I யே உறுதுணை

A/L 2001

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: 1999 - 01 - 09

சனி காலை 8-00 மணி (பழைய நேரம்)

D. M. I

ஸ்ரான்லி வீதி, யாழ்.

201 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவதால் அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

D. SAM.

(சி/ 5980)



வெளிவந்து விட்டது

பொருளியல்

சர்வதேச வர்த்தகம்

ஆசிரியர்

வே. கருணாகரன்

யாழ். கனகரத்தினம் ம. ம. வி.

(61825)



எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு!

ராஜ்கிரண் -- ரேவதி நடிக்கும்

தலைமுறை

(பிரமிட் CD)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/5983)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 02-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை
02 – 01 – 1999 சஞ்சீவி

யாழ். நகரில்
இளைஞர், யுவதிகள் விரும்பும்
புத்தம் புதிய ரக பாதஅணிகள்
உடனுக்கு உடன் பெற்றுக்கொள்ள
கணபதி சூ பலஸ்
159, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(நல்லிசில்க்ஸ் முன்பாக.)
(சி/61796)

## கருத்துக் கலசம்
மயூரா

### நாடுக நெறி!

புதிய ஆண்டு நேற்று மலர்ந்துள்ளது.

புதியன எப்போதும் புத்துணர்வும் பூரிப்பும் தருவன; புதிதாக, புதுமையாக எதனையேனும் செய்தாக வேண்டும் என்ற எழுச்சியைத் தூண்டுவன.

புதியனவற்றைச் செய்யவும், புதுமைகளைப் படைக்கவும் புதிய சிந்தனைகள் அவசியம். அந்தப் புதிய சிந்தனைகளை மட்டுமன்றி புதிய நோக்கங்களையும் செயலாக்குவதற்கு மனப் பக்குவமும்வளங்களும்வசதிகளும் இன்றிமையாதன.

வளங்கள், வசதிகள் அவரவர் தத்தமது வாழ்க்கையை அமைக்கும் சிறப்பினாலேயே கிடைக்கின்றன. ஒருவனின் வாழ்க்கை அவன் வாழும் விதம் கொண்டு அளக்கப்படும்.

எப்படியும் வாழலாம் என்ற எண்ணமுடையவனின் வாழ்க்கை சிறப்புடையதாக, முழுமையானதாக, மற்றவர்கள் மெச்சத்தக்கதாக அமையாது.

இப்படித்தான் வாழ வேண்டும் என்று தனக்குத் தானே நெறிமுறைகளை வகுத்து நல்வழி நின்று வாழ்க்கையை நடத்துபவனுக்கே வளம் நிறைந்த, வசதிகளை எட்டக் கூடிய வாய்ப்பும் வல்லமையும் கிடைக்கும்.

வாழ்க்கைக்கான வழிமுறைகளை வகுக்கும் போது எமது மூதாதையர்கள் சொல்லித் தந்த அறநெறிகள், நன்னெறிகள், தர்மங்கள், நீதி வழிகள், ஆன்மீகத் தத்துவங்களையும் அவை யாவற்றினதும் மூலங்களையும் மறந்து விடலாகாது.

இப்போது எம்மில் பலருடைய வாழ்க்கை மேற்சொன்னவற்றை நீக்கி, துறந்து வேறு வகை கொண்டதாக அமைந்திருப்பது கவலைக்குரியது. இன்றைய சமுதாயம் சீரழிந்தும், அமைதியும் நிம்மதியும் குலைந்தும், குழம்பியும், சகதியாக மாறியும் இருப்பதற்கு எங்களது மூலாதார வாழ்க்கை நெறிகளைக் களைந்து விட்டமையே காரணம்.

மனிதநேயம், நல்லொழுக்கம், நீதி நியாயத்துக்குக் கட்டுப்படுதல் — அவற்றைப் பேணுதல், கருணை, பிறர் மீது அன்பு செலுத்துதல், அவர்களுக்கு உதவுதல், தர்மங்களைக் கைக்கொள்ளுதல், பெரியோருக்கு மதிப்பளித்தல் மற்றும் பல முந்தைய நெறிகள் எமது சமூகத்தில் விதைக்கப்பட வேண்டிய தேவை உருவாகி உள்ளது.

பிறந்துள்ள புதிய ஆண்டில் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தவும், சீர்செய்யவும், வேண்டிய வேளையில் திருத்திக் கொள்ளவும் நாட்டம் கொள்வராக.

# காதலர் நெஞ்சினில் கனிந்த காட்சிகள்!

"நெஞ்சம்தாம் கலந்தனவே' என்றொரு தொடர் குறுந்தொகையில் வருகிறது. அத்தொடர் தமிழர் வாழ்வின் விளக்கமாக அமைந்துள்ளது. தமிழர் நாகரிகத்தைக் காட்டுகிறது.

இக்காலத்தில் பெரும்பாலான திருமணங்களில் சாதியும் சாதியும் கலக்கின்றன. சமயமும் சமயமும் கலக்கின்றன. லட்சங்களும் உத்தியோகங்களும் கலக்கின்றன. நெஞ்சம் கலப்பதில்லையே!

நெஞ்சக் கலத்தலின் அவசியம் பற்றிப் பெரும்பாலானபெற்றோர் கவலைப் படுவதில்லை. பின்னர் குடும்பங்களில் பிணக்கும் பிரிவும் ஏற்படும்போதுதான் நெஞ்சக் கலப்பின் அவசியம் விளங்குகிறது.

### நெஞ்சம் கலந்த தலைவன் தலைவி

காதல் வாழ்வு ஏழு பிறப்புக்கும் தொடர்வது; விதியோடு தொடர்புடையது; காதலர் சந்திப்பதும் கூட விதியின் விளைவே!

பெரும்பாலான தலைவன் தலைவி சந்திப்புகள் அவள் கன்னியாகவும் அவன் காளையாகவும் இருக்கும் போது ஏற்படும். சில சந்திப்புக்கள் சிறுவராக இருக்கும்போதே — காதல் உணர்வு ஏற்படுமுன்னரே நிகழ்வதும் உண்டு. அப்படி நிகழ்வது பெரும்பேறு. போன பிறப்பில் விட்ட தொடர்பு இந்தப் பிறப்பில் சிறு வயதிலேயே தொடங்குவதானால் பெரும்பேறு தானே!

அத்தகைய பேறு பெற்ற இருவர் சிறுவயதில் நண்பர்களாகப் பழகி வயது வந்ததும் காதலர்களாயினர்.

திருமணம் புரிவதற்குப் பெற்றோர் சம்மதம் பெறுவதில் தடை ஏற்படலாம் என அவர்கள் இருவரும் கருதினர். பெற்றோருக்குத் தெரியாமல் ஊரை விட்டு புறப்பட்டு வேற்றூர் சென்றனர். இவர்களை இடைவழியிற் சிலர் கண்டனர். இவர்களைப்பற்றி அவர்கள் உரையாடினார்கள்.

''இவர்கள் இருவரும் சிறு வயதில் எந்நேரமும் ஒன்றாகச் சேர்ந்து இருப்பார்கள். சிறுவர்கள் ஆதலால் இவர்களுக்கிடையில் சிறு சண்டையும் வந்துவிடும்.''

''இவன் இவளுடைய கூந்தலைப் பிடித்து இழுப்பான். இவள் சும்மா இருப்பாளா? இவளும் இவனுடைய தலைமயிரைப் பிடித்து இழுத்து விட்டு ஓடுவாள். இதனைக்கண்ட இவர்களது செவிலித் தாயர் இவர்களுடைய விளையாட்டுச் சண்டையைத் தடுப்பார்கள். தடுத்தாலும் இவர்கள் சண்டையை நிறுத்தமாட்டார்கள்.

அப்படிப்பட்டவர்கள் இன்று இயற்கை மணம் புரிந்துகொண்டு இரட்டைமலர் மாலை போன்று இணைந்துள்ளனர்.

''இவன் இவள் ஐம்பால்
பற்றவும் இவள் இவன்
புன்தலை ஓரி
வாங்குநர் பரியவும்
காதற் செவிலியர்
தவிர்ப்பவுந் தவிராது
ஏதில் சிறுசெரு
வுறுப மன்னோ
நல்லைமன்ற அம்ம
பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல்
அன்ன இவர்
மணம்மகிழ் இயற்கை
காட்டியோயே!''

இது அன்பு வாழ்வின் ஒரு காட்சி. அடுத்த காட்சியைப் பார்ப்போம்.

திருமணம் புரிந்த தலைவனும் தலைவியும் தனிக்குடித்தனம் நடத்தினர்; அன்பு வாழ்வு வாழ்ந்தனர். அன்பில் விளைந்த அமுதாக மைந்தன் பிறந்தான். இருவர் மகிழ்ந்த வீட்டில் இருவரையும் மகிழ்விக்க ஒரு புதல்வன். அன்பினால் இணைந்தவர்களை மேலும் இறுக்கமடையச் செய்யும் அன்புக் கயிறாகக் குழந்தைச் செல்வம், கல்விச் செல்வம், பொருட் செல்வம் கொண்ட அவர்கள் பிள்ளைச் செல்வமும் பெற்றனர். மூவராகிய இக்குடும்பத்துக்கு என்ன குறை? எல்லாம் நிறைவே!

வீட்டுப் பணியுடன் வாழ்வு முடிந்து விடுகிறதா? நாட்டுப் பணியும் இருக்கிறதே! பகை அரசர் படையெடுக்கின்றனர். அரசன் போருக்கு ஆயத்தம் செய்தான். தலைவனும் அரசனது படையில் இணைந்துகொண்டான்.



நாடு காக்கும் போர்ப்பணியில் ஈடுபட்டுப் போர்க்களம் செல்கின்றான். அவனது அரசன் பாராட்டும் விதத்தில் தனது கடமையைச் செய்து அரசனுடைய வெற்றிக்குத் துணையாகிறான் அவன். இது அவனது புறவாழ்வு.

இனி அவனது அகவாழ்வைப் பார்ப்போம். காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட இல்லறம். அந்த இல்லறத்தின் செல்வமாகிய அன்புக் குழந்தை. அழுக்காறற்ற அன்பு கொண்ட சுற்றத்தினர். இன்சொல் கொண்டு விருந்தை உபசரிக்கும் உயர்ந்த பண்பு எல்லாம் சேர்ந்த நல்வாழ்வு.

புலவர் ம. பார்வதிநாதசிவம்

### வீட்டுநினைவு வந்தது

இத்தகைய சிறப்பமைந்த வீட்டை நாட்டுப் பணிக்காகப் பிரிந்து இருந்தான். நாட்டுப்பணி முடிந்தது. வீட்டு நினைவு எழுந்தது. தேர்ப்பாகனை அழைத்தான்.

''பாகனே! நாம் இப்போதே ஊருக்குத் திரும்பவேண்டும். வேகமாகத் திரும்பவேண்டும்.,,

''தலைவியை உடனே காண வேண்டும். தலைவிஎப்படிப்பட்டவள்? நெல்லிக்காயை உண்டவர் உடனே தண்ணீர் குடிக்கும்போது அந்தத் தண்ணீர் இனிக்குமே! அதுபோன்ற இன்சொல்லை உடையவள்.

''முன்பெல்லாம் போருக்கு வரும் போது அவளை மட்டுமே பிரிந்து வருவேன்; இப்போது அப்படியில்லையே. இப்போது அவளுடன் எனது அழகையும் அவளது அழகையும் சேர்த்துப் பிறந்த எனது புதல்வனும் இருக்கிறானே! நாம் போகும் போது இருண்டு விடும். நிலவு வானில் தோன்றிவிடும். விண்ணக நிலவைக் குழந்தைக்குக் காட்டி மண்ணக நிலவாகிய எனது மனைவி, மகனுக்கு உணவு ஊட்டுவாள். அவள் உணவூட்டும் காட்சியை தாயையும் சேயையும் ஒருங்கே காணும் காட்சியை நான் இழந்துவிடக் கூடாது. நீ சிறிது தாமதித்தாலும் எனது மகன் உறங்கி விடுவான். நான் இந்தக் காட்சியைக் காணமுடியாது. அதனால் விரைவாயாக!'' என்கிறான்.

தலைவன் போர்ப் பாசறையில் இருந்து புறப்பட்டான். தேர் விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. தலைவனின் மனத்திரையில் ஒரு படம் ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் படம் எது?


விண்ணிலே தண்ணிலவு! மண்ணிலே அழகுமயமான பெண்ணிலவு! அந்தப் பெண்ணின் கையிலே ஓர் உயிரோவியம். அந்த உயிரோவியத்துக்குப் பெண்ணிலவு கொஞ்சியும் கெஞ்சியும் உணவூட்டுகிறது.

''கடவுக காண்குவம்
பாக!............
..................................
பண்ணன் சிறுகுடிப்
படப்பை நுண்இலைப்
புன்காழ் நெல்லிப்
பைங்காய் தின்றவர்
நீர் குடி சுவையின்
தீவியமிழற்றி
முகிழ் நிலாத்திகழ் தரும்
மூவாத்திங்கள்
பொன்னுடைத்தாலி
என் மகன் ஒற்றி
வருகுவை ஆயின்
தருகுவென்பால் என
விலங்கு அமர்க்கண்ணள்
விரல்விளி பயிற்றித்
திதலை அல்குல் எம்காதலி
புதல் வற்பொய்க்கும்
பூங்கொடி நிலையே!''

''உணர்ச்சியைத் தூண்டும் அளவைப் பொறுத்தே ஒரு நூல் நிலைபேற்றை அடைகிறது. அதற்கேற்ற அளவில்தான் இலக்கியம் என்ற பெயரைப்பெறுகிறது.'' என்கிறார் விமர்சகர் ஒருவர்.

தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கியங்கள் காதல் உணர்வைச் சித்திரிக்கின்றன. அகநானூற்றுப் பாடல்கள் இரண்டாயிரம் வருடத்துக்கு முற்பட்டவை ஆயினும் அவற்றிற் காணப்படும் காதல் உணர்வு—அன்பு உணர்வு எக்காலத்துக்கும் சொந்தமானவை.

தலைவியைப் பிரிந்து போருக்குச் சென்ற தலைவனுடைய உள்ளத்தில் நாட்டுப்பணி நிறைவேறியதும் வீட்டு நினைவு உள்ளம் முழுவதையும் தன் வசப்படுத்துகின்றது. அவளையே நினைக்கும் அவனும் அவனையே நினைக்கும் அவளும் புலவர்கள் கண்ட அற்புதத்தம்பதிகள் ஆகின்றனர். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சு நடவாதிருக்க கண்ணுக்குப் புலப்படாத தடை!

காலசாகரத்தின் ஒரு துளி தீர்ந்து மற்றொரு ஆண்டு புதிய குமிழியாக உருவெடுத்துள்ளது. கழிந்துபோன ஆண்டை விட, நேற்று பிறந்துள்ள ஆண்டு தமக்குச் சீரும் சிறப்பும் தரவேண்டும் என்றுபிரார்த்திப்பது, விரும்புவது மனித மனத்தின் இயல்பு.

ஈழத் தமிழர்கள் கடந்த பல வருடங்களை, அத்தகைய நம்பிக்கையுடனேயே வரவேற்றார்கள்; எதிர்கொண்டார்கள். வருடங்கள் சக்கரங்களாகச் சுழன்று ஓய்கின்றனவே அன்றி, அவர்களது வாழ்க்கையில் கவிந்த இருள் இன்னும் விலகிப் போவதாக இல்லை. அதற்கான அறிகுறிகள் மெல்லிதாக —கீற்றாக— வந்து வந்து மறைந்து போகின்றன.

வடக்கு—கிழக்கில் நடைபெற்று வரும் போருக்கு ''சமாதானத்துக்கான போர்'' என்று பொன்னாடை போர்த்திக் காட்டும் அரசாங்கத்தின் ஒவ்வாச் செயல் நிறுத்தப்படும் வரை இப்பகுதி வாழ் மக்களின் அவலங்கள், இன்னல்கள், இழப்புகள், துன்பங்கள் நீங்குவது சாத்தியமில்லை.

தமிழ்மக்கள் வாழ்வில் முந்திய நிலை, சாதாரண நிலை, இயல்பு நிலை திரும்ப வேண்டுமானால் போர் நிறுத்தப்படவேண்டும். இதன் பொருட்டு அதில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர்களான அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கருத்தூன்றி, உண்மையான அக்கறை கொண்டு செயற்படவேண்டும்.

போரை நிறுத்திவிட்டு, (இடை நிறுத்தி விட்டாவது) சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதன் மூலமே மக்கள் அவலங்களைக் களைவதற்கு முன்னுரிமை கொடுக்கலாம். ஆனால் அரசாங்கம் அந்த நிலையைக் கைவிட்டு, போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை பேச்சுவார்த்தையையும் நடத்தலாம் என்ற அணுகு முறையையே இறுகக் கைப்பிடித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளதாகக் கடந்த நவம்பர் மாதத்தில் தமது மாவீரர் தின உரையில் மிகப் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

அடுத்த தரப்பு—அரசு தரப்பு—தலைவரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான மறுமொழியை மிகத் தாமதமாகவே தெரிவித்திருந்தார். தாமும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று ''புரொண்ட் லைன்'' இந்திய சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி மூலம் வெளிப்படுத்தினார்.

இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் விருப்பம் கொண்டுள்ள சூழ்நிலை இலங்கை அரசியலில் ஓர் ஒளிக்கீற்றாக மின்னியது. பிறக்கும் 1999 இல் இந்தக் கீற்று பெரிய ஒளியாக விரிந்து, பரந்து பிரகாசிக்காதா என்று மக்கள் ஏங்கினர். அவ்வாறு பிரகாசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

ஆனால் அரசாங்கத்தின்—ஜனாதிபதியின்—வேளைக்கு ஒருபோக்கும், முடிவும், அறிவிப்புக்களும் கூழ்காய்ச்சுவதற்கு பானையை அடுப்பில் வைப்பதற்கு முன்னரே, அடுப்புக் கற்களை காலால் தட்டிஎறிவது போல அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுக்கள் நடத்தாது அவர்களை ஒதுக்கிவிட்டு, தான் பெறும் இராணுவ நயங்களை அடித்தளமாக்கி, தான் விரும்பிய ஒரு தீர்வை தமிழர்கள் மீது திணிக்கும் நோக்கமே அரசாங்கத்திடம் உண்டு என்ற நிலைப்பாட்டை அதன் நிறம் மாற்றும் இப்போதைய தன்மை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுவார்த்தைக்குப் பகிரங்கமாக விருப்பம் தெரிவிக்கும் என்று அரசாங்கம் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. வெளிநாடுகளில் அரசு செய்த பிரசாரங்களில் அத்தகைய ஒரு தோற்றத்தையே காட்டி வந்தது.

இராணுவ ரீதியில் பலவீனமடைந்து மீளப்புத்துயிர் கொடுக்கும் தேவை உண்டாகும் போதே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை குறித்து பிரஸ்தாபிப்பார்கள் என்ற எண்ணத்தையும் வெளிநாடுகளுக்கு அரசு ஊட்டி வந்தது.

ஆனால் இம்முறை அரசினால் அவ்வாறு கூறித்தட்டிக்கழிக்க முடியவில்லை. கிளிநொச்சி வெற்றிக்குப் பின்னர் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குத்தயார்என்று சமிக்ஞை காட்டியதால் உலக நாடுகள் தான் கூறுவதை நம்பமாட்டா என்பது அரசுக்கு நன்றாகத்தெரியும்.

அதனாலேயே, தாமும் நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும் மூன்றாந் தரப்பு தொடர்பாளரின் பங்கினைச் சாதகமாகப் பரிசீலிக்க முடியுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா ''புரொண் லைன்'' ஆசிரியர் என். ராமுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

### மையக் காரணம்

ஆனால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உள்ளார்ந்த விருப்பம் இல்லை என்பதே உள்ளக நிலைப்பாடு. அதனால் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை கண்ணுக்குப் புலப்படாத வகையில் மூடிவிடத் திட்டமிட்டே ஜனாதிபதி சந்திரிகா இவ்வேளையில் இந்தியா சென்றார் என்று அனுமானிப்பதில் தவறிருக்க முடியாது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மத்தியஸ்தம் வகிக்க ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருந்த பிரிட்டன், கனடா, நோர்வே போன்ற நாடுகள் ''இரு

## மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம்: பந்தாடி தூக்கி வீசப்பட்டது!

தரப்பாரும் மத்தியஸ்தம் வகிக்குமாறு கேட்டால் நிச்சயமாக அந்தப் பணியைச் செய்வோம்'' என்று கூறி வந்ததமைக்கு மையக் காரணம் ஒன்று உண்டு.

இலங்கையின் அயல்நாடு இந்தியா. இலங்கையின் இனப் பிரச்சினையில் தலையிட்டு, தீக்குள் விரலை வைத்ததுபோல சுட்டுக்கொண்ட நாடு அது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முந்திய இந்தியாவின் செயற்பாடு சரியா, பிழையா என்று அந்த நாட்டைச் சேர்ந்தவர்களே விமர்சனம் செய்துவரும் காலம் இது.

இந்தியாவின் இப்போதைய அரசு இது விடயத்தில் தூர விலகி நிற்கவே விரும்பினாலும் அல்லது அவ்வாறு காட்டிக்கொண்டாலும், இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மேற்கூறிய நாடுகள் தாம் ஒருதலைப்பட்சமாகப் பங்களிக்க விரும்பவில்லை; இந்தியாவின் வெறுப்பைச் சம்பாதிக்கத் தயாராக இருக்கவில்லை.

## உள்ளும் புறமும்

குறுமுனி

அதனாலேயே இரு சாராரும் கேட்டால் மத்தியஸ்தம் வகிப்போம் என்று கூறினார்கள். இலங்கை அரசு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை விரும்பவில்லை என்பதால் அது உதவி கேட்காது என்பதும் அந்த நாடுகளுக்குத் தெரியும்.

விடுதலைப் புலிகளும் பேச்சுக்கு விருப்பம் தெரிவித்து, தாமும் தயார் என்று பதிலளித்த பின்னணியை வைத்துக்கொண்டு தென்னாபிரிக்கா மற்றும் இரண்டொரு நாடுகள் மத்தியஸ்தம் வகிக்கத் தாமாகவே முன் வந்துவிட்டால் நிலைமை ''மோசமாகி'' விடும் என்று அரசு அஞ்சியது!

வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை போடும் முயற்சியாக, ஜனாதிபதி சந்திரிகா அவசரமாக இந்தியா சென்றார். கண்ணுக்குப் புலப்படாத விதத்தில் பேச்சுவார்த்தைக்குரிய கதவுகளை மூடிவிடுவதற்கான பிரயத்தனம் அது. புத்தி சாதுரியமாக அதற்கான தந்திரங்களை, உத்திகளை இந்தியாவில் வைத்து ஒப்பேற்றினார். திட்டமிட்டது போலவே, நினைத்தது போலவே, அவருக்கு வெற்றியும் கிடைத்து விட்டது!

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தம்வகிக்காது. சம்பந்தப்பட்ட தரப்பினரே அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதுவிடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று சந்திரிகாபுதுடில்லி செல்லும் தறுவாயில் இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. இதுவும் ஒரு முன்னேற்பாட்டுநடவடிக்கையாகவேஇருக்கும்!

விடுதலைப் புலிகள் சில நிபந்தனைகளுக்கு இணங்கினாலேயே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று புதுடில்லி சென்று, ''புரொண்ட்லைன்'' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியின் நிலையை தலைகீழாக மாற்றினார் ஜனாதிபதி.

புதுடில்லி விஜயத்தின் மூலம் ஜனாதிபதி தமது நோக்கத்தை எய்தினார் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது அவருடன் கூடச் சென்ற வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இந்தியச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்த தகவல்!

இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் எட்டப்படும் முன்னர் அது குறித்து இந்தியாவுக்கு அறிவிக்கப்படும். இந்தியா மத்தியஸ்த யோசனை எதனையும் தெரிவிக்கவில்லை —என்று அமைச்சர் கதிர்காமர் மகிழ்ச்சி பொங்கக் கூறியுள்ளார்.

இந்தியாவின் அங்கீகாரம் பெற்றே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற நிலைப்பாடு உருவான பின்னர் சுய கௌரவம் உள்ள எந்த வேறு வெளிநாடு மத்தியஸ்தத்துக்கு முன்வரும்?

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் என்று இனி எவரும் மூச்சுத்தானும் விட முடியாதவாறு தடை போடப்பட்டு விட்டதை எவரும் நன்றாக இப்போது புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளினது (ஏன், தமிழ் மக்களினதும் தான்) மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை என்ற கோரிக்கை பந்தாடித் தூரத்தே வீசப்பட்டுள்ளது. சந்திரிகா அரசுக்கு இது பெரிய வெற்றி.

இனப்பிரச்சினை முழுக்க முழுக்க உள் விவகாரமே. வெளியார் எவரும் உதவ முன்வரமாட்டார்கள். ''வேண்டுமானால் பிடி. இல்லாவிடில் போ'' என்ற கொழும்புக்குச் சாதகமான நிலை உருவாக்கப்பட்டு விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் வாயையும் அடைத்துவிட வழிகண்டு விட்டார் சந்திரிகா!

அவர் தயாரிக்கும் தீர்வு எவ்வாறு தான் தரமுடையதாயினும் அநீதியைத் திணிப்பதாயிருந்தாலும் சரி அது சரியானதே என்று இந்தியா அங்கீகாரம் வழங்கமாட்டாது என்பது என்ன நிச்சயம்? — என்ன உத்தரவாதம்?

★ ★ ★

இந்த வாரத்தின் கவலைக்குரிய சம்பவமாக அமைந்தது தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான பொன். மதிமுகராஜாவின் மரணமாகும்.

அரசாங்கம் விடாப்பிடியாக நின்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை கடந்த வருடம் ஜனவரியில் நடத்தியது. அதன்பின்னர் ஒரு வருடத்தில் இப்பிரதேசத்தில் அரசியல் கொலையுண்ட நாலாமவர் பொன். மதிமுகராஜா.

இவருக்கு முன்னர் மேஜர்கள் சரோஜினி யோகேஸ்வரன், பொன். சிவபாலன் ஆகியோரும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட உப தலைவர் கி. நமசிவாயம் ஆகியோர் அரசியல் கொலை செய்யப்பட்டனர்.

மூவருக்கும் நேர்ந்த கதி தமக்கு வராது என்ற மன நம்பிக்கையுடன் கூட்டணி சார்பில் உழைத்தவர் மதிமுகராஜா. ஆனால் அவருக்கும் அதேகதி நேர்ந்துவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை, ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற என்ன வேகத்துடன் அரசு முனைந்திருக்கிறதோ—

அதே வேகத்துடன் அவற்றை தடுத்துவிடும் முனைப்புடன் விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருவது எல்லோருக்கும் தெரிந்ததே.

இத்தகைய ஒரு நிலையால் இடையில் உள்ள பொதுமக்கள் செய்வதறியாது திண்டாடுவதும் ஒன்றும் இரகசியமல்ல. அரசாங்க அதிகாரிகள், அரசாங்க அலுவலர்கள், அரசியல்வாதிகள் என்று எல்லோருமே இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில்தான்.

கடந்த வருடத்தில் நடந்த நான்கு அரசியல் படுகொலைகளுக்கும் எவரும் நேரடியாக உரிமை கோரவில்லை என்றாலும்—

சங்கிலியன் படை, தமிழின விடுதலை விரும்பிகள் என்ற பெயர்களில் அவ்வப்போதுசிவில் நிர்வாகம், உள்ளூராட்சி சபைகள் இயங்குவதற்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன; விநியோகிக்கப்பட்டிருந்தன; கடிதங்களில் அனுப்பப்பட்டிருந்தன.

கொலையுண்ட மதிமுகராஜா தமக்குஎந்தவித பகையுமில்லை, பிரச்சினையும் இல்லையென்று கூறிய வண்ணமே தமிழர் விடுதலைக் கூட்டணிக்காக உழைத்தார்.

யாழ்ப்பாணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இருந்த வேளை, எம். ஜி. ஆர். பேரவையின் சார்பில் தாம் ஒழுங்கு செய்து நடத்திய எம். ஜி. ஆர். நினைவுதின நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டு பேசியதை அடிக்கடி அவர் கூறிக்கொள்வார்.

எப்படியோ இரு தரப்புகளும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவது தொடரும் வரை பொதுமக்களுக்கு மட்டுமன்றி அரசியல் பிரமுகர்களுக்கும் சோதனையான காலமாகவே தொடரப்போகிறது.

சமாதானம் நாடிய செயற்பாடுகள் உயிர் பெற்று அமைதி உருவாகும் வரை துன்ப — கஷ்ட நிலை இவ்வாறே நீடிக்கும் என்பதில் கேள்வி இல்லை.

★ ★ ★

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் அங்கத்தவர்களுடன் இயங்கத் தொடங்கி அனேகமாக ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் சபைகளுக்கு வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி செலவிடப்படாமலே எஞ்சியுள்ளதாகத் தகவல்.

கடந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்ட செயல் திட்டங்கள், அவற்றுக்குச் செலவான பணம், செலவிடப்படாமல் எஞ்சியுள்ள நிதி போன்ற விவரங்களை வருடம் முடிவடையும் தறுவாயில் சமர்ப்பிக்குமாறு அதிகார சபை கேட்டிருந்தது.

நிதியைத் திருப்பி அனுப்புவதற்குப் பல உள்ளூர்ராட்சி சபைகளின் உறுப்பினர்கள் விரும்பவில்லை. கடந்த வருடத்தில் செலவிடப்படாத நிதி இந்த ஆண்டு மீளத் தரப்படும் என்று அதிகார சபை வட்டாரங்கள் உறுதி கூறியபோதிலும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் நம்புவதாக இல்லை.

ஏனைய பகுதிகளைப் போலன்றி தமது சபைகளுக்கு நிதி உதவி வருட ஆரம்பத்தில்—உரிய காலத்தில்—வழங்கப்படவில்லை. ஆகையால் செலவிடாத பணத்தை திருப்பித் தரக் கேட்பது நியாயமற்றது என்பதே உள்ளூராட்சி அதிகாரசபையின் வாதம்.

இந்த இரு தரப்பினருக்கும் இடைப்பட்டு பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குப்போல உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான திணைக்களத்தின் அதிகாரிகள் திணறிக்கொண்டிருந்ததை வருடம் கழிவதற்கு முந்திய கடைசி வாரத்தில் காணமுடிந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1999 சமாதானக் கனவுகளும் யுத்த ஏற்பாடுகளும்...

## ஈழத் தமிழரின் அவலங்கள் புதிய நூற்றாண்டை நோக்கி...

**மறுபக்கப் பார்வை** — **வார விமர்சனம்** — நல்லூர் தாஸ்

யுத்த நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள 'கூட்டு நடவடிக்கைகள் சபை' (ஜே. ஓ. பி) ஒன்று இன்னும் இரு தினங்களில் செயற்படத் தொடங்க உள்ளது. ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் றொஹான் டி. எஸ். தளுவத்த இந்த உயர் இராணுவ அமைப்புக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய படை நடவடிக்கைகள் இடம் பெறலாம் என்ற அச்சத்தினால் வன்னியில் முள்ளியவளைப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறுகின்றனர்.

இந்த இரு செய்திகளுடனும் புதிய ஆண்டு பிறந்துள்ளது.

வெலி ஓயாவில் இருந்தும் நெடுங்கேணியில் இருந்தும் படையினர் முள்ளியவளையை இலக்குவைத்து நகரலாம் என எதிர்பார்த்து பெரும் எண்ணிக்கையான மக்கள் புதுக்குடியிருப்பு பகுதி நோக்கி சாரை சாரையாக இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாக இப் பத்தியை எழுதும்போது தகவல் கிடைத்திருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் மாவீரர் தினச் செய்தி ஊடாக விடுத்த சமாதான சமிக்ஞைகள் புதிய ஆண்டிலாவது சமாதானம் உருவாக வாய்ப்பளிக்கும் என்ற எதிர்பார்ப்பு சகல வட்டாரங்களிலும் நிலவியது. குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள குடாநாட்டு மக்கள் மத்தியிலும், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிவாழ் மக்களிடையேயும் இந்த எதிர்பார்ப்பு இரட்டிப்பாக இருந்தது.

இந்த இரு பிரதேச மக்களும் இருவேறு விதமான நெருக்கடியான சூழ்நிலைக்குள் வசிக்கின்றனர்.

வடக்கு—கிழக்கு வாழ் மக்களுக்கு மட்டுமன்றி நாட்டின் சகல பிரஜைகளினதும் வாழ்விலும் யுத்தம் ஏதோ ஒருவகையான பாதிப்பைக் கொடுத்துக் கொண்டே வருகிறது.

புதிய ஆண்டுகள் மலரும் போது சமாதானம் மெல்ல சாயல் காட்டிச் செல்வது வழக்கம். இம்முறையும் அவ்வாறே சமாதானச் சாயல்கள் தென்பட்டன.

தென்னாபிரிக்க மத்தியஸ்தம், மாவீரர் தினச்செய்தி, ஜனாதிபதியின் இந்திய விஜயம் என்பன பொது மக்களிடையே சமாதான எதிர்பார்ப்பை விதைத்தன. ஆனால் இந்தத் தடவையும் யுத்த முழக்கங்கள் சமாதானத்தின் முனகல்களை அடித்துச் சென்றுவிடும் அறிகுறிகளே தென்படுகின்றன.

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்து விட்ட அரசு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் நீட்டிய நேசக்கரத்தையும் பற்றிக் கொள்ளத் தவறி விட்டது. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை புதிய ஆண்டு 'தேர்தல்கள் ஆண்டு' என்பதால் சமாதானத்தை ஏற்படுத்த கடும் முயற்சி எடுப்பது போன்று பாவனை செய்வதும் சமாதானம் நெருங்குகிறது என்ற பாணியிலான பிரசாரங்களை மேற்கொள்வதுவும் அவசியம்.

எனவே அரசுப்பக்கம் இருந்து வரும் சமிக்ஞைகளை பெரிதாக எண்ணிவிட முடியாது.

யுத்தத்தை புதிய ஆண்டுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் அரசு தமிழர் பிரச்சினையை—தமிழ் மக்களின் சொல்லொண்ணா அவலங்களை—புதிய நூற்றாண்டுக்கும் இட்டுச் செல்லப் போகின்றதா என்பதே சமாதான விரும்பிகளிடையே எழும் கேள்வி.

இரண்டு நூற்றாண்டுகளை இணைக்கும் ஆண்டு என்ற வகையில் 1999 சரித்திர முக்கியத்துவம் பெறுகிறது.

புதிய நூற்றாண்டை வரவேற்கும் கோலாகல நிகழ்வுகள் இந்த ஆண்டு முழுவதும் உலகெங்கும் நடைபெற உள்ளன.

புதிய நூற்றாண்டுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் உலகெங்கும் இடம்பெறும் பகைமைப் பிணக்குகள், மோதல்கள், கிளர்ச்சிகள், உள்நாட்டு யுத்தங்கள் என்பன இந்த ஆண்டுக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்ற பொதுவான கோரிக்கை உலக சமூகத்தின் முன் விடுக்கப்படுகிறது:

மோதல்களில் ஈடுபடுவோர் அனைவரும் இக் கோரிக்கையைக் கவனத்தில் எடுக்கவேண்டியவர்களாகவே உள்ளனர்.

பெரும் உயிர், உடைமை, பொருளாதார இழப்புகளுடன் சிக்கலாகத் தொடரும் இலங்கை இன விவகாரமும் இதற்கு விதிவிலக்கல்ல.

★ ★ ★

### தளுவத்தவுக்கு புதிய பதவி

இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய நியமிக்கப்பட்டதை அடுத்து ஓய்வு பெற்ற தளபதி றொஹான் தளுவத்தவுக்கு பாதுகாப்பு விரிவாக்கக் கட்டமைப்பில் முக்கிய உயர் பதவி ஒன்று வழங்கப்படும் என்றும் தகவல் வெளியாகி இருந்தது. பின்னர் அத்தகைய ஒரு பதவி உடனடியாக அவசியமில்லை என்பதால் அது கைவிடப்பட்டதாகவும் பாதுகாப்புவட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'கூட்டு நடவடிக்கைகள் சபையின்' (JOINT OPERATION BUREAU) 'கட்டளை அதிகாரிப் பதவிக்கு (GENERAL OFFICER COMMANDING) தற்போது அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

டிசம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட ஜனாதிபதியின் நியமனக் கடிதம் அவரிடம் வழங்கப்பட்டிருக்கிறது. நாளைய மறுதினம் திங்கட்கிழமை முதல் (ஜனவரி 4) கூட்டு நடவடிக்கைகள் சபை செயற்படத் தொடங்கவுள்ளது.

யுத்த நடவடிக்கைகளைத் திட்டமிடல், அவற்றைச் செயற்படுத்துதல், ஆயுதக் கொள்வனவு பற்றிய முடிவுகளை எடுத்தல், புதிய நியமனங்களைச் செய்தல் ஆகிய பிரதான பணிகளில் தீர்மானம் எடுத்துச் செயற்பட சட்டவலுவுடன் கூடிய அதிகாரம் இச்சபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் படையினர் சந்தித்த மிகமோசமான இழப்புகளை அடுத்தே இராணுவ நடவடிக்கைகளில் ஜனாதிபதி அவசரமாகத் தலையிட்டார். விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தனது நேரடிப் பொறுப்பின் கீழ் எடுத்தார். அதுவரை இராணுவ நடவடிக்கைகளை வழிநடத்தி வந்தவர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆவார். 'அரசியல் ஜெனரல்' என வர்ணிக்கப்பட்ட அனுருத்த ரத்வத்தவின் நடவடிக்கைகள் களத்தில் உள்ள படை உயர் அதிகாரிகளின் விமர்சனத்துக்கு உள்ளாகி வந்ததும், அவை குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டமையும் தெரிந்தவையே.

இராணுவ நடவடிக்கைகளை ஜனாதிபதி பொறுப்பேற்றதை அடுத்து 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை திடீரெனக் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக வன்னியில் புதிய முனையில் 'சூரிய சக்தி' (ரிவி பல) என்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

ஜெனரல் அனுருத்த ரத்வத்தவை ஓரங்கட்டும் நோக்கில் ஜனாதிபதி செயற்படத் தொடங்கியிருப்பதையே அவரது இந்த நேரடித் தலையீடு காட்டுவதாக விமர்சகர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

யுத்த நடவடிக்கைகளை 'புதிய கூட்டு நடவடிக்கை சபை'யின் பொறுப்பில் விட்டுள்ள ஜனாதிபதி தமக்கு மிக விசுவாசமான முன்னாள் இராணுவத் தளபதி றொஹான் தளுவத்தவுக்கு ஜெனரல் பதவி வழங்கி கூட்டு நடவடிக்கைகள் சபையின் அதிகாரியாகவும் நியமித்துள்ளார்.

இந்தப்புதிய மாற்றத்தை அடுத்து இதுவரை அரசியல் ஜெனரலின் தலைமையில் வழிநடத்தப்பட்ட படை நடவடிக்கைகள் இனிமேல் இராணுவ ஜெனரலின் தலைமையில் இடம்பெற உள்ளதை இராணுவ நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதியின் நேரடிப் பொறுப்பின் கீழ்—

கூட்டு நடவடிக்கைச் சபையின் திட்டத்தின்படி —

புதிய இராணுவத் தளபதியின் வழிகாட்டலின் கீழ் —

புதிய ஆண்டில், புதிய படை நகர்வுகள் இடம்பெறவுள்ளன. இதற்கான ஆயத்தங்கள் பூர்த்தியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை படையினரை முந்திக்கொண்டு பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தப் புலிகள் தயாராகி வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது. கிளிநொச்சி, பரந்தன் பகுதியை அண்டிய பிரதேசத்தில் இத் தாக்குதல் நடத்தப்படலாம் என கொழும்பு வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது. ஆனால் புலிகள் எங்கே பதுங்குகிறார்கள், எங்கே தாக்குவார்கள் என்பதை ஊகிப்பது கடினம்.

புலிகளைப் பொறுத்தவரை சமாதானப் பேச்சுக்கு அரசுக்கு சந்தர்ப்பம் வழங்கி ஆயிற்று, அரசு செவி சாய்க்கவில்லை. எனவே அவர்கள் எச்சமயத்திலும் எங்கும் தாக்கலாம்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் பெரும் தாக்குதலுக்குப் புலிகள் தயாராகி வருவதாக வெளியான தகவல்கள் வேண்டுமென்றே அவர்களால் கசியவிடப்பட்ட தகவலாக இருக்கலாம். எனினும் புலிகளுக்கு அவகாசம் வழங்காமல் நகர்வு ஒன்றைப் படையினர் திடீரென ஆரம்பிக்க வாய்ப்பு உண்டு.

'வெற்றி உறுதி' நடவடிக்கை கைவிடப்பட்டு, 'சூரிய சக்தி' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பிறகு உருவாகி உள்ள கள நிலைவரம் குறித்து உயர் படை அதிகாரிகள் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கியதாகத் தெரியவருகிறது.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக ஜனாதிபதி புதுடில்லி புறப்படுவதற்கு முன்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

'சூரிய சக்தி' நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மாங்குளம் பகுதிகளை உள்ளடக்கிய 134 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை படையினர் கைப்பற்றி இருந்தனர்.

ஒட்டுசுட்டான் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் அங்கேயே தரித்து நிற்க, வெலி ஓயாவில் இருந்து தண்ணிமுறிப்பு ஊடாகவும், நெடுங்கேணியில் இருந்தும் முன்னேறி நெடுங்கேணியில் இருந்து 22 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முள்ளியவளையைக் கைப்பற்ற படை நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட இருப்பதாக முள்ளியவளைப் பகுதியிலுள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

புலிகளினதும், பொதுமக்களினதும் பாதுகாப்பான பிரதேசமாக விளங்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் நுழையும் படையினரின் முயற்சியை புலிகள் என்னவிலை கொடுத்தும் முறியடிக்கவே முயல்வர் என விமர்சகர்கள் கருதுகின்றனர். எனவே படையினரின் அடுத்த நடவடிக்கை ஒட்டுசுட்டான் போன்று சுலபமானதாக இருக்காது என்பது தெளிவு.

இதேசமயம் கிழக்கில் புலிகளின் சிறு சிறு தாக்குதல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. படையினருக்கு தலையிடி கொடுக்கும் இத்தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்தும் உள்ளன.

கிழக்கில் விடுதலைப் புலிகள் பெரும் எண்ணிக்கையான சவப்பெட்டிகளைத் தயாரித்து தயார் நிலையில் வைத்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 250 சவப்பெட்டிகள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாக அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் இருந்து தகவல் வெளியாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் புலிகளின் சவப்பெட்டிகள் பற்றிய பேச்சடிபடுவது வழக்கம். தாக்குதல் நடக்கும் இடத்தை திசைதிருப்பப் புலிகள் சவப்பெட்டிகளைப் பயன்படுத்தியதும் உண்டு. எனவே இந்தச் சவப்பெட்டிகள் பற்றிய தகவலை வைத்துக்கொண்டு புலிகளின் அடுத்த தாக்குதல் கிழக்கில்தான் என எதிர்பார்க்க முடியாது.

படை நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தும் அதேவேளை வான் வழிப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. புதிய ஆண்டில் புலிகளின் வான் வழித் தாக்குதல்கள் படையினருக்கு சவாலாக அமையும் என இராணுவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியதை அடுத்து தரையில் இருந்து வானுக்கு ஏவும் 'சாம்' ஏவுகணைகள் உட்பட பல விமான எதிர்ப்பு ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்தது. இவற்றுக்கான கேள்விகளும் கோரப்பட்டுள்ளன.

தரையில் இருந்து வானுக்கு ஏவும் 'சாம்' ரக ஏவுகணைகள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், யுத்த முனையில் குறுகிய பிரதேச கண்காணிப்புப் பணியைச் செய்யக் கூடிய ராடர்கள், மொபைல் (நடமாடும்) வான் பாதுகாப்பு ராடர்கள், விமானங்கள் வெளியிடும் வெப்ப அலைகளை படமாகத் தரும் விசேட கருவிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கே கேள்விகள் கோரப்பட்டன.

இவற்றுக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டிய நெருக்கடியையும் அரசுக்குப் புலிகள் ஏற்படுத்தியுள்ளனர். இது தவிர, இந்த ஆயுதங்கள், கருவிகளைச் செயற்படுத்துவதற்கான பயிற்சிகளை படையினருக்கு வழங்கவும் அரசு நிதி செலவிட வேண்டியிருக்கும்.

விமானப் படையணி ஒன்றை விடுதலைப்புலிகள் உருவாக்கி இருப்பதாக வெளியான தகவல்களை இராணுவப் புலனாய்வாளர்கள் உறுதிப்படுத்தியதை அடுத்தே விமான எதிர்ப்பு ஆயுதங்களை அவசர அவசரமகக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டது.

எனினும் புலிகளிடம் வான் ஊர்திகள் இருப்பது பற்றிய தகவலை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தொடர்ந்து நிராகரித்துவருகிறார்.

புதிதாக கொள்வனவு செய்யப்படும் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் போர் முனைகளிலும், நாட்டின் கேந்திர நிலையங்களிலும், முக்கிய பிரமுகர்களின் வாசஸ்தலங்களுக்கு அருகிலும் பொருத்தப்படவுள்ளன. முக்கிய மாநாடுகள், கூட்டங்கள், அணிவகுப்புகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள் நடைபெறும் இடங்களுக்கு எடுத்துச்சென்று வான் பாதுகாப்பை உறுதி செய்ய வசதியாக நடமாடும் சாதனங்களிலும் இந்த விமான எதிர்ப்பு ஆயுதங்கள் பொருத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வான் வழியாக கரும்புலித் தாக்குதல்களை நடத்த புலிகள் விசேட பயிற்சி பெற்று வருவதாகவும், தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், முக்கிய பிரமுகர்கள் செல்லும் வாகன அணிகளை இலக்கு வைத்து வான் வழிக் கரும்புலித் தாக்குதல்களை நடத்த வான் புலிகள் தயாராகி வருவதாகவும் தென்பகுதிப் பத்திரிகைகள் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வருடத்தில் உங்களுக்கு

| | | | |
|---|---|---|---|
| * வியாழன் சூரியன் | * சனி வெ | | |
| புதன் | 01 – 04 – 1999ல் கிரகநிலை இராசிச்சக்கரம் அத்தம்—நட்சத்திரம் | | ரா |
| கே | | | |
| | | செவ் | சந் |

09 - 01 - 1999 இல் வியாழன் — மீன இராசிக்கு பூரட்டாதி 4 ஆம் பாதக்கிரகசாரத்திலும் —
05 - 03 - 1999 இல் சனி — மேட இராசிக்கு அச்சுவினி 1 ஆம் பாதக்கிரகசாரத்திலும் —
மாறும்.

பிறப்பு, கூட்டு, பெயர் எண்கள் முறையே 1 — 4 — 8 மற்றும் 2 — 7 — 9 உள்ளவர்களுக்கு இந்த ஆண்டில் பல நன்மைகள் நடக்கும்.

மேற்படி இராசிகள் மற்றும் எண்கள் குறிப்பிடப் படாதவர்கள் கிரகப் பிரீதி செய்து வருவது நல்லது. வியாழனுக்கு — தட்சணாமூர்த்திக்கு — வியாழக்கிழமைகளில் பொன்னொச்சிப் பூவால் அர்ச்சனையும் சனீஸ்வரனுக்கு சனிக்கிழமைகளில் நீலப்பூக்களால் அர்ச்சனையும் செய்து எள்ளெண்ணெய் எரித்தும் வழிபட்டு வரவும்.

உங்கள் இஷ்ட தெய்வ ஆராதனை நன்மைகள் தரும்.

இக்கிரகக் குறைபாடு உள்ள கிறிஸ்தவ அன்பர்கள் அந்தோனியார், மாதா ஆலயங்களுக்குச் சென்று வியாழன், சனிக்கிழமைகளில் தேங்காய் எண்ணெய் அல்லது மெழுகுதிரி கொடுத்து தெய்வ வேண்டுதல் செய்து வரவும்.

எல்லோரும் அவரவர் தகுதிக்கேற்ப ஏழைகளுக்குத் தானதர்மங்கள் செய்து தெய்வ அனுக்கிரகம் தானாகவே கிடைக்கும்:-

## உலக நாடுகளின் பொதுப்பலன்

அரசியலில் புதிய திசைதிருப்பங்கள் ஏற்படும். எங்கும் பரவலான அழிவுகள் ஏற்பட இடம் உண்டு. ஐ. நா. பல நாடுகளில் சமாதானப் பேச்சுக்களை நடத்த முற்படும்.

இந்திய அரசியலில் பிரதமர் வாஜ்பாய்க்கு நல்லதல்ல. தமிழ்நாட்டில் அரசு மாற்றம் ஏற்பட திடீரென அரசியல் சூழ்நிலைகள் மாறும். வடக்கில் இந்திரா காங்கிரஸின் சோனியாவும் தெற்கில் அ. தி. மு. க. தலைவி ஜெயலலிதாவும் செல்வாக்குப் பெற்று ஆட்சி பீடமேறச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

இந்தியாவில் அந்நிய சக்திகள் பல திட்டமிட்ட அழிவுகளை மறைமுகமாகச் செய்யும்.

ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளிலும், கிழக்கு நாடுகளிலும் திட்டமிட்டு ஆதிக்கவலுவைச் செலுத்தும். ஆயினும் எதிர்த்தாக்கங்களுக்கும் அந்நாடுகள் முகம் கொடுக்க நேரிடும். எதிர்பாராத இயற்கை, செயற்கை அழிவுகள் இடம்பெறும்.

உலகில் இலங்கை உட்பட பல நாடுகளில் செயற்கை இயற்கை அழிவுகள் தொடரும் பலன்களை கிரக நிலைகள் காட்டுகின்றன.




காலசக்கர வெள்ளத்தில் துள்ளி ஓடும் விறுவிறுப்பான இராசி உங்கள் இராசி. எவருக்கும் தலைவணங்க மாட்டீர்கள். வாழ்க்கைக்கு சுதந்திரம் மட்டும் போதுமா? பொருள் வேண்டாமா? உழைப்பு வேண்டாமா? தத்துவம் பேசி பத்திரத்தில் பதியவைத்தால் மட்டும் போதுமா? வயிற்றுப் பசியை வெற்றுக்காகிதத்தால் நிரப்ப முடியுமா? உங்கள் துடிப்பான போக்கும், செயல்களும் உருவாக்கங்களைச் செயற்படுத்துபவர்களை ஊக்குவிக்கச் செய்யும். புதுமையில் புரட்சி செய்ய உங்கள் மனம் அடிக்கடி நாடும்.

காத்திருந்து, காத்திருந்து காலம்வரும் என நேற்று வரை இருந்தீர்கள். காலத்தைப் பார்த்தால் கலக்கம் தான் வரும். நாடு சீருக்கு வரும் என காத்திருக்காதீர்கள். சண்டை சச்சரவு ஒரு பொழுதும் ஓய்ந்துவிடாது. அது ஒரு தொடர்கதை என்பதை உலக வல்லரசான அமெரிக்காவே காட்டி வருகின்றது. எனவே புயல் என எழுந்து பல கருவாக்க உருவாக்கங்களைச் செய்யுங்கள். வீடு, மனை, பொருள், வாகனம் எனத் தேடி ஓடிவரும். உழைப்பை ஊக்கப்படுத்துங்கள். பங்குனியில் எட்டில்வரும் சனீஸ்வரன் உங்கள் இராசியில் ஆதிக்கம் செலுத்துவான். அவன் தட்டிக் கேட்கும் முன்பு கெட்டித்தனமாக தேடுவதைத் தேடிவிடுங்கள். உச்சிக்குப் போகாதீர்கள். மத்தியில் நின்று உங்களைப் பலப்படுத்துங்கள். காணி பூமிப்பிரச்சினை, காசுபண வசூல், வேலைப்பளு, புதிய திட்டங்களில் பொருள் முடக்கம் என வந்தாலும் துணிந்து செயற்படுங்கள். ஆவணியில் நற்பலன்கள் அதிகரிக்கும். நெஞ்சுப்படபடப்பு, பொருளால் வேதனை— யோசனை, காயங்கள், வாய்வு, இரத்த அழுத்த நோய், கல்லீரல் வியாதி, தலைச்சுற்று, உஷ்ணபீடைகள் என மாறி மாறி வரும். வருத்தங்களைக் கண்டு கலங்காதீர்கள். வைத்தியம் செய்துவாருங்கள். சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்து வாருங்கள். தாக்கங்கள் குறையும்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன், வெள்ளி.




காலசக்கரத்தில் மாதம் ஒருவீடு மாறி மாறிக் குடியிருக்கும் சூரியபகவானின் ஆதிக்க வலுதான் என்னே? மார்கழியில் மாறியும், தையில் தவண்டுவந்து கொடிகட்டும் குரு தன்வீட்டில் — மீன ராசியில் — வந்ததால் பல மாற்றங்கள் பொருள் ரீதியில் உங்களுக்குத் தந்திடுவான். லாபங்கள் பலவழியில் மாறி மாறித் தந்திடுவான். 05 – 03 - 1999 இல் — மாசி மாதம்தனில் மூசி மேட மேறும் சனி — சொல்லாமல் சொல்லிடுவான் போல பொருள், பூமி, சகோதரம் என பலவேதனை, சோதனைகளைத் தந்திடுவான். ஊர் கூட்டிப் பேசிடுவார்; வழக்கு வம்பு வந்துவிடும். நாலு வார்த்தைகளை நல்லபடி பேசவிடாது ஆடி அசைத்துவிடும். ஆவணியில் ஒரு தெம்பு தந்து பலவழியில் பொருள்தேட வழி பிறக்கும் காலம் வரும்: கலங்காது தலைநிமிர்ந்து ஏறு நடைபோட்டிடுவீர். தொழில் மாற்றம், தொழில் பீடத்தில் பல பொறுப்புக்களை தந்து சுமக்கவிட்டு வேடிக்கை பார்க்கும் காலமாகும். சகோதரமொன்று திசை மாறி இடம்மாறி சென்றுவிடுவர். கைகால் பிடிப்பு, வாய்வுத் தொல்லை, நஞ்சு, குண்டு, நெருப்பு எனப் பயம் மாறி மாறித் தந்துவிடும் காலமாகும். அரசியல் வாதிகளும், இலக்கிய புருஷர்களுமான கிருஷ்ணபகவானும், ராஜாஜியும், கலைஞர் மு. கருணாநிதியும் உங்கள் இராசியில் பிறந்து மனிதகுலத்திற்குப் பலவித சேவை செய்துள்ளார்கள்; தருமத்தை —நீதியை—காக்க போராடி வெற்றி படைத்தார்கள்; எதையும் பொறுமையாகத் தாங்கி—உலக மக்களுக்கு பலவித உண்மைக் கருத்துக்களை அள்ளித் தந்தார்கள். ஆயினும் இக்காலத்தில் ஏழரையின் ஆரம்பச் சனி, பற்றி இழுத்து அயலவரை வலுச் சண்டைக்கு அழைக்கும்; பொருளைத் தட்டிப் பறிக்கக் காத்திருக்கும் என்பதை மறக்க முடியாமல் பல சந்தர்ப்பங்களை நிச்சயம் இந்த வருஷம் தந்துவிடும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.




''நீங்கள் பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி''போல எங்கும் ஓடியாடி மின்னி மறைந்திடுவீர். உங்களுக்குள் ஓர் இரகசியம் புதைந்தபடி இருக்கும். ஒவ்வொருவர் வாழ்விலும் ஒவ்வொரு எதிர்ப்பாலார் மறைந்திருந்து இயக்கி வரும் அற்புதத்தைக் கொண்டிடுவீர். ஒரு நொடியில் மற்றவரின் உண்மைகளை மனதில் பட்டெனப் புரிந்திடுவீர்; வாசித்திடுவீர். உலகுக்கு கதை ரூபத்தில் பல கருத்துக்களைச் சொல்லிவிடுவீர். 09. 01. 1999 இல் மீனத்தில் வியாழன் வந்த பின்பு உங்கள் தொழில் ஸ்தானத்தில் பல புதிய மாற்றங்கள் வந்துவிடும். பயிர் பச்சை செய்திடுவோர் மகிழ்ந்திருக்கக்கூடிய காலம் வந்துவிடும்: பங்குனி 1999 இல் சனி மேடத்தில் வந்த பின்பு பல பலன்கள் நாடித் தேடி வரும். செல்லாத பொருள்களைப் பல உவமானம் காட்டியே பொருளாக்கப் பெரிய போதனைகள் செய்திடுவீர்.

உலகத்தில் உங்களை எவரும் திருப்திப்படுத்திவிட முடியாது. மேலும் மேலும் பல ஆராய்ச்சிகளை ஆக்கபூர்வமாக உருவாக்கியபடி இருப்பீர்கள். தொழிலிலோ அன்றி வாழ்விலோ அன்றி சொத்துச் சுகத்திலோ முன்னேற இவ்வாண்டு வழிவகுக்கும் என்பதை மறவாதீர்கள். பிரயாணமென்றும், வெளிநாடு என்றும் செய்தி பல வந்து உள்ளத்தை மகிழ்விக்கும். மூத்த சகோதரமொன்றிற்கு மாற்றம் வந்துவிடும். அவரால் நீங்களும் நன்மைகள் அடைந்திடுவீர். புத்திரி, புத்திரர்கள் உள்ளவர்கள் ஏற்றம்பல கண்டுவிடுவீர். புத்திநாதன் புதன் பீடராசியில் இருப்பதனால் புத்திரரின் கல்விக்குப் பல புதிய இடங்களைத் தேட வாய்ப்புக்கள் வந்துவிடும். சொந்த பந்தமென்று கூடிப்பலர்வந்து செலவுகளைத் தந்திடுவர். ஆவணியில் காணிப் பிரச்சினை ஒன்று தேடிவரும். ஆதிக்க வெறியும், ஆணவப் பேச்சும் பேசியபடி அயலவர் ஒருவர் பயப்படுத்தி ஆட்டி அசைக்க முற்படுவார். அசையாது நிலைநிற்க கன்னி மாதாவையோ அல்லது அம்மனையோ இறுகப் பற்றிவிடுங்கள்; அமைதி வந்துவிடும்—உங்கள் வாழ்க்கையிலே.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.




கர்மஸ்தானமான 10 ஆம் வீட்டில் 05.03.1999 இல் சனி புகுந்து வரும் காலம் முதல் கடமை தவறிடுவீர். உற்றவரும், பெற்றவரும், உறுதுணைக்கு வந்தவரும், உங்களைக் குற்றவாளி ஆக்க முனைந்து நிற்பர்; தந்திரம் பலித்ததென பெருமிதம் கொண்டு பல செய்திடுவர்; 'பெட்டிசன்கள்' பல தீட்டி, பேதலிக்கச் செய்திடுவர். வட்டிக்கு காசு தாரும் எனப் பேசி பின்பு வாதுபல செய்திடுவர். ஊர், உலகம் உங்களைப் பல பேசி வேதனைப் படச்செய்யும் பலன் கண்டிடுவீர். 'வேண்டாத கோவில் இல்லை; கும்பிடாததெய்வம் இல்லை; வேதனைகள் மட்டும் தீரவில்லையென மாறாத வேதனை கொண்டிடுவீர். தர்மஸ்தானமான 9 ஆம் வீட்டில் நிற்கும் பொன்னவனாம் வியாழனால் பொருள், உழைப்பு என்பன தந்தைவழி மற்றும் புத்திரர் மூலம் உங்களை நாடி ஓடிவரப் பலன்கள் உண்டு.

ஆவணியில் — சிங்கத்தில் சூரியன் சிரித்து நிற்கும் காலதில்—வாக்காலே பலஅலுவல்கள் நடந்தேறி விடும். உண்மைபேசி நன்மை செய்ய முற்படுவீர்கள். சுமைதாங்கி நீங்கள். உதாரண புருஷராவீர். உலகத்திற்கு ஒரு ராமர் வந்த இராசியாயிற்றே நீங்கள் வந்த இந்த இராசி! இலட்சியத்தில் உறுதி நிலைதவறாத பண்டிட் நேருவாக இருந்திடுவீர். இலாபம் கருதும் உலகில், உங்கள் துன்பங்களை—துயரங்களை –மற்றவர்கள் சிந்தனையில் கொள்வர் என எண்ணவேண்டாம். சலவருத்தம் நெஞ்சுப் படபடப்பு, வேண்டாத யோசனைகள், சளித்தொல்லை, தோல் வருத்தம், கைகால் உளைவு, நோ, வாய்வுத்தொல்லை என்பன மாறி மாறி வந்து கலக்கிவிடும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி. புதன், வியாழன்.

(V ஆம் பக்கம் பார்க்க)

**இவ்வாண்டு முற்பகுதியில் வரும் வியாழன் - சனி மாற்றங்களுடன் உங்கள் ஆண்டுப் பலன் இது.**

தொகுப்பு:-
மகாதேவா ஜோதிடம்

## குறள் வெள்ளம்

அறம் எது? தருமம் புரிவது எப்படி?

அள்ளிக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. கொடுக்கும் அளவில் தருமத்தின் அளவு தங்கியிருக்கவில்லை. கொடுக்கும் அளவில் தங்கியிருந்தால் இல்லாதவன் அறம் செய்ய வழியில்லாமற் போய்விடும்.

மனிதராகப் பிறந்தவர் எவரும் நினைத்தால் செய்யக்கூடிய ஒன்றையே அறம் எனக் கருதுகிறார் வள்ளுவர். எல்லோருக்கும் அறம் செய்யச் சம உரிமைகிடைக்கிறது இங்கே!

ஆனால் எத்தனை பேரால் மனதைக் கட்டுப்படுத்தி இந்த அறத்தைச் செய்ய இயலும் என்பதே கேள்வி.

விருந்தினரை — அடுத்தவரை — உதவி தேவைப்படுவோரை — ஆறுதல்படுத்த வேண்டியவரை — கண்டதுமே முகம் மலர்ந்து பார்க்கவேண்டும். (முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி)

முகத்தில் மட்டுமன்றி அகத்தாலும் அவ்வுணர்வு பொங்கி வழிய வேண்டும். அகம் விரும்பியே முகம் மலரவும் வேண்டும். தப்பினால் தருமம் தவறிவிடும்!

இனிமேல் பிறக்கின்ற இன்சொல்லின் வழி வருவதே அறம். இதற்கு மேல் கொடுத்தாலும் தருமம்தான். கொடுக்கவழியின்றி — பொருளின்றி — அருளை அள்ளிக்கொடுத்தால் அதுவும் அறம்தான்.

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி
அகத்தானாம்
இன்சொ லினதே அறம்' — 0093.
(இனியவை கூறல்)

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(IV ஆம் பக்கத் தொடர்)

# பலன்கள் எப்படி?




பல இலட்சம் சீதனங்கள் கேட்டுப் பெறும் ஒருவகுப்பு — அதைக் கணக்குப் பார்த்து தரகுப்பணம் பறிக்கும் ஒரு கூட்டம் — அதற்காக குறிப்புக்களை திசைமாற்றி எழுதி சோதிடத்தைப் புழுதிபட வைக்கும். இத்தகையோரை உங்களுக்குப் பிடிக்காது. பொங்கி எழுந்து விடுவீர் என்பதை நானறிவேன். அடுத்தவன் வாழ்வைக் கெடுப்பவர்கள் படுத்தபின் எழ மாட்டார்கள்; ஆண்டவனும் விடமாட்டான். இதை நீங்கள் நிச்சயம் அறிவீர்கள்.

தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய பலர் தவறுகளைச் செய்வதை அறியும் பொழுது நல்லவர்கள் படும் வேதனைகளை மக்கள் இனங்கண்டு நடக்க வேண்டும். இந்த சமுதாயத்திற்கு அவர்கள் செய்யும் கெடுதிகளை நிச்சயம் நீங்கள் மன்னிக்க மாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் உறுதிமிக்க செயற்பாடு மிக்கவர்கள் நீங்கள். எடுத்த இலட்சியத்தை நிறைவேற்றிய அஹிம்சா மூர்த்தியான மகாத்மாகாந்தி பிறந்த இராசியில் பிறந்த நீங்கள் கொடுத்து வைத்தவர். ஆயினும் 09-01-99 இல் வியாழன் ஒன்பதில் வந்து பொருள் செலவு கொடுக்கும்; புத்திரருக்காகவோ — சகோதரர்களுக்காகவோ பொருள் செலவுகள் செய்வீர்கள்.

புண்ணிய ஸ்தானமான 9 ஆம் வீட்டில் 05-03-1999 இல் சனி புகுவான்.

ஆலயத் திருப்பணிக்காக பல அர்ப்பணிப்புகளைச் செய்வீர்கள். தந்தை வழியினருக்கு நல்லதல்ல. சொத்து வழியில் போட்டி ஒன்று பின் தொடர்ந்தபடி இருக்கும்.

நெஞ்சுவலி, வயிற்றுப் பொருமல், மூலச்சூடு என மாறி மாறி தொல்லை கொடுக்கும். ஓய்வற்ற உழைப்பு, கௌரவத்திற்காக மனப்போராட்டம் எனக் காலம் ஓடியபடி இருக்கும. கலங்காத உள்ளம் இறைவன் முன்பு கலங்கி அமைதி அடையும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, புதன், வியாழன்.




உங்களை ஆண்டவன் அடிமேல் அடி கொடுத்துச் சோதிக்கும் ஆண்டாக இந்த வருஷம் இருக்கும். 09-01-1999 இல் மீனராசியில் வியாழனும், 05-03-1999இல் மேட இராசியில் சனீஸ்வரனும் மாறி வரும் வேளையில் அட்டமத்துச் சனி எட்டி எட்டிப் பார்க்கும் பலன் கொடுக்கும். சிறைப்பட்ட நிலைதான். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்கள். சமுதாயத்தில் உயர்பீடம், அதிகாரம், அந்தஸ்து, பணபலம், பக்கபலம் இருக்கின்றது என்பதற்காக நீங்கள் தவறுகள் செய்யமாட்டீர்கள் என நம்பமுடியுமா? இந்தச் சமுதாயத்திற்கு ஏதாவது செய்யப்போய் சட்டத்தின் வாயில் அகப்பட்டு சோதனையும் வேதனையும் படச் சந்தர்ப்பங்கள் எழும். பொருள் இழப்பு, வயிற்றில் நோ, வாய்வுத் தொல்லை, இரத்த அழுத்தம், சலம் — மலம் சம்பந்தமாக ரோகங்கள் என்பன மாறி மாறிக் கொடுக்கும். நரம்புத் தளர்ச்சி, காயங்கள், வீக்கங்கள் மற்றும் பல வேதனையான சம்பவங்களால் உடல், உள்ளம் வேதனைப்பட வேண்டிய காலமாகும்.

காட்டிக் கொடுக்கும் கூட்டம் காதவழிதூரம் பார்த்திருந்து பாதைகளை மாற்றி விடும். கட்டிக் காக்க வேண்டியவற்றை கொட்டிவிடவோ அல்லது அவை கெட்டு விடவோ சனீஸ்வரன் செய்திடுவான். விதி வழியே சென்று மதிகெட்டு வாழுகின்றான் என்று கவிபாடும் ஒரு கூட்டம் காது கேட்கக் கத்தியபடி இருப்பார்கள். வக்கிர வியாழன் ஆவணியில் வந்தபின்பு ஒரு வெளிப்பு — விடுதலை — கொடுக்கச் செய்திடுவான். எவரையும் நம்பாதீர்கள். அமைதியும் சாந்தியும்தேட பகவான் பாதத்தை நாடுங்கள்; பரமபிதாவின் ஆலயங்களுக்குச் செல்லுங்கள்; மாதாவைக் கேளுங்கள்; அம்மனை நாடுங்கள். அதனால் மட்டுமே உங்கள் மனம் அமைதி அடையும்.


★ அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வெள்ளி.




நீங்கள் ஊருக்குச் சமாதானப் பிரியர்; வீட்டிற்கு அல்ல. 09 - 01 - 1999 இல் வியாழன், மீனம் (6ஆம் வீட்டிலும்), 05 - 03 - 1999 இல் சனீஸ்வரன் மேடத்திலும் வருகின்றன.

இந்தச் சமுதாயத்திற்கு ஏதாவது நன்மையொன்று செய்யத் துடிப்பீர்கள். தடுத்து நிறுத்த உங்கள் வீட்டிலுள்ளவர்கள் முனைவர். ஊர், உலகம் போற்ற வாழுவீர்கள். பொருள் செலவு குடும்பத்தில் அதிகரிக்கும். சகோதரம் அல்லது பிள்ளைகளின் நன்மைக்காக அல்லது கல்விக்காக அதிக செலவுகளைச் செய்வீர்கள். சித்திரையில் வரும் புதிய வருஷத்தின் பின்பு காத்திரமான பல திட்டங்களை வட்டமிட உங்களால் முடியும். ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி போய் வரும் சூழ்நிலைகள் ஏற்படும். ஒருபக்கம் புகழ் — மறுபக்கத்தில் உங்களை நாலு பேர் தூற்றியபடி இருப்பார்கள். சொந்தமென்று வந்தவர்கள் எல்லோரும் உதவி செய்கிறார்களா? யார் கெடுதிகள் செய்கின்றார்கள்? அதனால் நீங்கள் படும் மனவேதனையின் தாக்கத்தை எவரும் சிந்திக்க மாட்டார்கள். பொருள் தேடும், சுமைதாங்கியாக வாழுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி புயலெனப் பலபிரச்சினைகள் உருவாக்கப்பெறும். எதையும் சுவைத்து அனுபவித்துப் பார்க்கத் துடிப்பீர்கள். அதனால் பல போராட்டங்கள் இந்த ஆண்டில் உங்களை நோக்கி வந்தபடி இருக்கும். வெளிநாடு — பிரயாணமென்று — அலையாதீர்கள். தேடிவைத்த தேட்டத்தையும், கடன்வாங்கி வந்த பணத்தையும் கடன்காரன் போல கண்காணாத மனுஷர்கள் கவர்ந்து சென்றிடுவார்கள். கவனமாக இருக்கவும். மன அமைதி முக்கியமாகும். வயிற்றுக் கோளாறு, தலையிடி, சலவருத்தம், கல்லீரலால் நாரி உளைவு, அடிக்கடி பயநிலை என்பன தேடிவரச் செய்யும். தகுந்த வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வெள்ளி.




உங்களை யார்? எவர்? எனக் காட்டிக்கொள்ளாமலே எல்லா இடங்களுக்கும் போய் வருகின்றீர்களாமே! கண்டிப்பும், உறுதியான மனமும், பிடிவாத இயல்பும் உங்களை நேர்ப்பாதையில் இட்டுச் செல்லவேண்டும்! ஞானியா? அஞ்ஞானியா? — இரண்டுக்கும் நடுவிலே நின்று போராடுவீர்கள். 5 இல் வியாழன் 09. 01.1999 இலும், 6 இல் சனி 05. 03. 1999 இலும் வந்து நிற்கும். புத்தியைத் திசை திருப்புவீர்கள். புத்திரருக்காகவோ, சகோதரங்களுக்காகவோ, சகோதரங்களின் புத்திரரின் முன்னேற்றத்திற்காகவோ அயராது பாடுபடுவீர்கள். கண்டிப்பாக அடிக்கடி ஆஸ்பத்திரிக்குச் சென்று வருவீர்கள். வெளிநாட்டு உதவிகளைச் சாதகப்படுத்த முனைவீர்கள். எவரும் கட்டுப்படுத்தவோ சட்டதிட்டங்களைச் சொல்லி உங்களைத் தடுத்துவிடவோ முடியாது. எடுத்தெறிந்து செயற்பட முற்படுவீர்கள். தூற்றுபவர் தூற்றட்டும்; போற்றுபவர் போற்றட்டும் என பொறுமையாக இருந்து செய்படுவீர்கள். ஒரு சில சந்தர்ப்பத்தில் போர்க் கொடி உயர்த்திப் போராட முற்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உறுதியுடன் உண்மைக்காகப் போராடும் இயல்புக்கு இலக்கணமானவர் நீங்கள்தான். எதிர்ப்பாலாருடன் எப்பொழுதும் அனுசரித்துப் போக மாட்டீர்கள். உங்களின் சிறந்த ஆற்றலை அறிந்தவர்களுக்கு பல உதவிகளைச் செய்வீர்கள்.

ஒன்றில் எதிர்ப்பீர்கள்; அல்லது அணைத்து ஆறுதல் சொல்லுவீர்கள். உண்மையை உண்மை என மற்றவர் ஏற்கும்வரை விடமாட்டீர்கள். அடிக்கடி கடுமையான வேலைகளை பொறுப்பெடுத்துச் செய்து பெயர் வாங்குவீர்கள். ஆத்மீக உணர்வு, தனிமை, சமுதாய வெறுப்பு என்பன சில சமயம் உங்களை ஆட்கொள்ள இடம் உண்டு. காசு பொருளில் கவனமாக இருக்கவும். களவு, இழப்பு, காத்திருக்கும் காலமாகும். காணி பூமி என கோட்டடி வாசலுக்கு ஓடி ஓடிச் செல்லச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். நெஞ்சுவலி, அல்சர், கிருமித் தாக்கம், தலைவருத்தம், உஷ்ணபீடைகள் வருத்த இடமுண்டு. வைத்தியரை நாடுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.




வாழ்ந்தால் புகழுடன் வாழ வேண்டும். அல்லது வாழக் கூடாது எனச் சொல்லுவீர்கள். மாதுருஸ்தானமான 4 ஆம் வீட்டில் வியாழன் 09.01.1999 இலும் புத்திஸ்தானமான 5 ஆம் வீட்டில் சனீஸ்வரன் 05.03.1999 இலும் வருகின்றன. தாய் வழியிலிருந்து பொருள் வரும்; உதவிகள் கிடைக்கும். புத்திரரால் வேதனையும், போராட்டமும், அலைச்சலும் அடிக்கடி கொடுக்கும். பல இழப்புகளை சந்தித்தாலும் பல அனுபவங்களைப் பெறுவீர்கள்.

ஸ்ரீராமபக்தரான ஆஞ்சநேயர் பிறந்தஇராசியில் பிறந்துள்ளீர்கள். எந்த விதமான சவால்களையும் எதிர்கொள்ளுங்கள்; வெற்றி அடைவீர்கள். வாக்குச் சாதுரியம் மிக்க 'சொல்லின்செல்வர்' நீங்கள். தீவிர உழைப்பு மிக்க நீங்கள் மனம்திறந்து எதையும் சொல்லிவிடும் தன்மை கொண்டிருப்பீர்கள். மறைத்து பேசமாட்டீர்கள். மார்புதட்டி அடிக்கடி சவால்கள் விடவும் தயங்க மாட்டீர்கள். அடிக்கடி எங்காவது ஓடி ஓடிச் சென்று வருவீர்கள். தொழில் ஸ்தானத்தில் எல்லோருக்கும் நயம் கருதாது உதவிகளைச் செய்து கொடுப்பீர்கள். அதிகாரிகளின் ஆதரவு எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும்.

ஆவணி 1999க்குப் பின்பு உங்கள் நிலையில் மாற்றங்கள் ஏற்படும். இலட்சியங்களைக் கருதுபவர்கள் பிறரின் துன்பங்களைச் சுமக்கத் தயங்குவார்கள். ஆனால் நீங்களோ உங்கள் இன்பத்தைத் துறந்து பிறரின் துன்பங்களை சுமக்க முற்படுவீர்கள். ஈரல் வருத்தங்கள், வயிற்று வருத்தங்கள், வாய்வுத்தொல்லைகள், சளித் தொல்லைகள் என்பன வருத்த இடமுண்டு. நீங்கள் பொய், களவு பேசவே முனையாதீர்கள். அல்லது பிடிபட்டு மற்றவர்களால் கேவலப் படுத்தப்படுவீர்கள். பொருள் நிலையில் பல மாற்றங்கள் நடக்க வாய்ப்புக்கள் ஏற்படும். வீடு, மனை, பொருள், வாகனம் எனப் பல வசதிகள் தேடிவரவாய்ப்புக்கள் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி,




நீங்கள் மிகவும் பொறுமைசாலிகள். இடைவிடாத முயற்சியும், மனவுறுதியும், தன்னம்பிக்கையும், எதையும் தாங்கும் இயல்பும் கொண்டவர்கள். 09 - 01 - 1999 இல் வீரிய ஸ்தானமான 3ஆம் வீட்டில் வீரவேகத்துடன் பொன்னவனான வியாழன் வருகிறார். மாதுரு ஸ்தானமான 4இல் சனீஸ்வரன் வருவதனால் வீடு, மனை, பொருள், வாகனம் ஆகியனவும் தாயார் மற்றும் தாய் வழியினருக்கு சோதனையும் வேதனையும் வந்து போகும். சகோதரர்களுடனோ அல்லது பிள்ளைகளுடனோ வாக்குவாதப்படச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். சொத்து வழிப் போராட்டமொன்று வந்து அழைக்கும் காலமாகும் தொழில் வழியில் ஆனிக்குப் பின்பு பல மாற்றங்கள் உதயமாகும். பொருள் இலாபங்கள் பலவழியில் வந்து விடும். பதவியில் மாற்றம், பொறுப்புக்களில் மாற்றம் என பல வழிகளில் நன்மைகள் பல வரும். பற்றிய வேலைதனைப் பாசத்துடன் செய்தாலும், நேசத்தால் பல துயரம் நெடுங்காலம் கிட்டி நிற்கும். பெரியவர் என எண்ணி நல்மதிப்பு வைத்தவர்கள் 'கயவர் நீ' எனக்காது சேட்கக் கூறிடுவர். மதிகொண்டு செயற்பட்டு, மாற்றமொன்றை நீர் விரும்பி இடம் மாறித் துன்பத்தை திசை மாற்றிவிடல் நல்லதுவே. வாழ்வில் விழுந்து விட்டாலும் மெல்ல, மெல்ல எழுந்து நடந்து வர இந்த ஆண்டு கைகொடுக்கும். உங்களுக்கு வயிற்றுக்கோளாறு, நரம்புத் தளர்ச்சி, கைகால் தாக்கம், நாரிவலி, வாத உளைவு என்பன சர்வசாதரணமாகும். வைத்தியம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன், சனி.




'ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்பது போல சமுதாயத்தில் நீங்கள் ஒரு முத்து. எதையும் தாங்கிக் கொள்ளுவீர்கள். எதிலும் ஆராய்ந்து கொண்டு இருப்பீர்கள். எவரையும் அனுசரித்துப் போவீர்கள். உங்களுக்கு 09-01--1999இல் தனஸ்தானமான 2இல் வியாழனும் 05-03-1999 இல் தைரியஸ்தானமான 3 இல் சனீஸ்வரனும் வருகின்றான். புதிய திட்டம் மற்றும் புதுமையில் திறமை காண நினைப்பீர்கள். உங்களுக்கு இனஜனம், நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். சுற்றியுள்ள இடங்களெல்லாம் சுத்தமாக இருக்கச் செய்வீர்கள். நல்லவர்கள், பெரியவர்கள் உதவிகள் செய்திடுவர். தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் நடக்கும். சகோதரர்களுக்கு நல்லதல்ல. மாற்றங்கள் ஏற்படும் பலன்கள் காணப்படுகின்றன. திட்டமிட்டு எதையும் செய்ய முடியாமல் சர்தர்ப்பத்துக்கு ஏற்ப நன்மைகள் கொடுக்கும். மற்றவர்கள் வாழ்க்கையில் தலையிட மாட்டீர்கள். காசு பொருள் தேடி வரும். சுபமங்களப் பேச்சுக்கள், வெளிநாட்டுப் பிரயாணம் எனச் செய்திகள் இனிப்பாக வந்துவிடும் காலமாகும். எதிர்ப்பாலார் பல உதவிகளைச் செய்து தருவார்கள். இருதயத்துடிப்பு, மூட்டுவலி, நரம்புச் சோர்வு, கைகால் வாத உளைவு, வயிற்று நோ என்பனஇடைக்கிடை வந்து பல தொல்லைகள் தந்துவிடும். ஓய்வு முக்கியமாகும். பொருள் விஷயங்களில் அவதானமாக இருக்கவும். நரம்புத்தளர்ச்சிக்கு மருந்து செய்து வரவும். தெய்வ வழிபாடு தவறாது செய்து வரவும். அதனால் நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், வியாழன்.




உங்களுக்கு 09 - 01 - 1999 இல் உதயத்தில் குரு வருகிறார். 05 - 03 - 1999 இல் சனி 2 இல் வருகின்றார். கடந்து வந்த காலத்தில் பட்ட துன்பத்தில் பாதி வழி குறைந்து போகும். மழை விட்டும் தூவானம் விடக் காலஞ் செல்வதுபோல இன்னும் இரண்டரை வருஷங்கள் ஏழரைச்சனி தட்டிக் கேட்டபடி இருக்கும். பொருள் நிலையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். காசு இலேசில் வருமா? எனவே புதிய முயற்சிகள் எடுங்கள். துன்பம், தோல்வி, கஷ்டங்கள் எல்லாம் வாழ்க்கை என்றால் இருக்கத்தான் செய்யும். அவற்றைச் சுமாளித்து வாழ்வதிலேதான் உங்கள் திறமையே இருக்கின்றது. 'வெய்யிலில் வந்தவனுக்குத் தான் தெரியும் நிழலின் அருமை' என்பதுபோல கொஞ்சம் ஆறுதல் அடைவீர்கள். அரசியல் பேசி காலத்தை விரயமாக்காமல் பலனுள்ள எதையாவது செய்வதில் கண்ணாக இருங்கள். வெளிநாடு, பிரயாணம், புதிய தொழில் வாய்ப்பு, இடமாற்றம் என பல திட்டங்கள் உருவாக இடமுண்டு. மெல்ல மெல்லத் தேடுங்கள். நிச்சயம் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் பொருள் வரவும் சகநண்பர்களின் ஆதரவும் இருக்கும். மே 1999 இலிருந்து காணி, வாகனம் சம்பந்தமான மாற்றங்களால் பொருள்கள் வாங்கவோ, விற்கவோ நேரிடும். நண்பர்கள், உறவினர் ஆலோசனைகளால் பல துன்பங்கள் தேடிப்பின்பு கலங்க நேரிடும். புத்திரர் அல்லது சகோதரங்களின் படிப்பு மற்றும்தொழிலுக்கு பொருள் செலவு செய்வீர்கள். சளியால் தொல்லை, கைகால் வாத உளைவு, ஈரல் நோய், இரத்த வருத்தங்கள், பயத்தால் அடிக்கடி பாதிப்பு என்பன ஏற்படும், தெய்வவழிபாடு முக்கியமாகும். மனச் சாந்தியைத்தேடி ஆலய வாசல் வரையும் சென்று வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், வியாழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற்பாடம்

அதிகாலை நேரம் ஐந்தரை. அடையாள அட்டை, பிறிகேட் பாஸ், காசு என்வலப் எல்லாம் பொக்கற்றுள் இருப்பதைச் சரிபார்த்துக்கொண்டேன். கேற்றுக்கு வெளியே தாமண்ணை குரல் தந்தார். தயாராயிருந்த நானும் புறப்பட்டேன்.

பஸ் தரிப்பில் நிற்கும் போது சிவத்தாரும் தேநீர்க் கடை திறந்துவிட்டார். வெளிச்சம் போதாததால் லாம்பும் எரிந்தது.

''இந்தக் குளிருக்கு ஒரு பிளேன்ரீ அடிச்சால்தான் தம்பி உடம்பு கொஞ்சம் வெதுவெதுப்பாயிருக்கும். கைவிஷேச நேரத்திலை கடன் சொன்னால் சிவத்தாற்றை மூஞ்சி முகம் வெதுவெதுப்பாயிருக்கும் ... அது தான் யோசிக்கிறன்''

''அதுக்கேன் யோசிப்பான் தாமண்ணை... வாருங்கோ ரீ குடிப்பம்''

இருவரும் போய் வாங்கில் இருந்து தேநீரைக் கையில் எடுக்க, நாங்கள் காத்திருந்த பஸ்ஸும் வந்தது. நான் பரபரத்தேன்.

''அது போனால் போகட்டும் தம்பி. அரை மணியில் அடுத்த பஸ் வந்திடும். தேத்தண்ணியை ஆறுதலாய்க் குடி''

முதல் பஸ்ஸைத் தவறாமல் பிடிக்க முதல் நாளே திட்டமிட்ட தாமண்ணை தேநீரை ஊதிஊதிக் குடித்துக் கொண்டிருந்தார்.

''இவ்வளவு வெள்ளணத் துலைக்கோ?'' —சிவத்தார் கேட்டார்,

''ஒருக்கால் யாழ்ப்பாணம் போகவேணும். இவர் தம்பியின்ரை அலுவலாய்த் தான். தம்பியும் ஏ. எல். பாஸ் பண்ணிப்போட்டுத் தொழில்துறை ஒண்டும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார். தகப்பன் இல்லாத பிள்ளை. தங்கைமார் ரண்டும் குமராயிருக்குதுகள்... அதுதான். காணி, தோட்டந்துரவு எண்டு இருக்கிற நிலபுலமெல்லாம் வித்தெண்டாலும் வெளிநாடு போக விரும்பியிட்டார். எனக்குத் தெரிஞ்ச ஒருவர் கொழும்பிலை ஏஜென்ஸிகளெட்டை நல்ல செல்வாக்கு உள்ளவர். இப்ப யாழ்ப்பாணம் வந்து நிக்கிறார். இந்த நேரம் நானும் ஏதோ இயண்ட உதவியைச்செய்வமெண்டு...'

சூடான தேநீர் உள்ளே போக தாமருக்கு வியர்வை அரும்பி சேட் மெல்ல ஈரமாக உள்ளே பெனியன் இல்லாதது தெரிந்தது. தோளில் போட்ட சால்வையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

பஸ் வரவே, அது நகர்வதற்குள் நாங்கள் தொற்றிக் கொண்டோம். பஸ்ஸில் இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டோம்.

''அதுசரி தம்பி, நேற்று நான் கேட்க 50 ரூபா உம்மட்டை இல்லை. இண்டைக்கு எப்பிடிக் கிடைச்சுது?''

''கரணவாய் நாகலிங் கண்ணையெட்டை விஷயத்தைச் சொன்னன். அவர் தந்த காசைத்தான் கொண்டு வாறன்''

''அவருக்கு இந்த மணப் பந்தலாலை வருமானம் பிழையில்லை. கலியாணங்கள், தண்ணிவார்வை, திருவிழாக்கள், வேறை வேறை விஷேசங்கள் எண்டு ஓய்வில்லாமல் ஓடுது பந்தலும் மணவறையும்''

''அண்ணை! பணம் நல்லதும் செய்யும்; கெட்டதும் செய்யும். அவர் நல்லது செய்யிறார். அவருக்கு தெய்வம் குறைவில்லாமல் குடுக்குது. அவரும் சந்நிதியான் தொடக்கம் மூத்த விநாயகர் வரை தெய்வங்களுக்கும் குடுக்கிறார். ஏழைபாழை, முட்டுப்பட்டதுகளுக்கும் எண்டு இப்பிடி ஒரு தனி வழியிலை ஓடுறார்.''

நேற்று தாமண்ணைக்கு 50 ரூபா கொடுக்க முடியாமல் போனதால் இவ்வளவெல்லாம் சொல்ல வேண்டியிருந்தது.

வழியில் வந்த சென்றிகளில் நான் இறங்கி நடந்து அ. அட்டை காட்டி, பாஸ் காட்டி, அப்பாவியாய் இளித்த பல்காட்டி ''மௌன வாத வெட கறனுவ?'', ''மொனோட்டத மே பத்த யனவ?'' என்ற கேள்விக்கெல்லாம் திருதிருவென்று விழித்து, ''இருக்கிறது கரணவாய். யாழ்ப்பாணம் போகிறேன்.'' என்று விளங்காத கேள்விக்கு வாயில் வந்த பதில் சொல்லி, மீண்டும் நடந்து பஸ் ஏறிய போதெல்லாம் தாமண்ணை எனது இருக்கை பறிபோகாமல் தனது சால்வை போட்டு காப்பாற்றித் தந்து, தன் பக்கத்தே என்னை வைத்துக் கொண்டார். போதாக் குறைக்கு அவரின் தமிழ்க் கேள்விக்கும் சலிக்காமல் பதில் சொன்னேன்!

யாழ். பஸ் நிலையம் வந்ததும் எல்லோரும் முண்டியடித்து இறங்கினர். தாமண்ணையும் இறங்கி எனக்காகக் காத்து நின்றார். நானும் இறங்கி வந்தபோது, —

''தம்பி! கீழ் வகுப்பிலை படிச்ச கிரிசாம்பாள் கதையெல்லாம் இந்தக் காலத்துக்குச் சரிப்பட்டு வராது. கிரிசாம்பாளின் பொறுமை, ஆறுதல் எல்லாம் கதையோட விட்டிடவேணும். நடைமுறைக்கு ஒத்து வராது''



தாமண்ணை சொன்ன கிரிசாம்பாள் 'யார் மகள்' எந்த ஊர், எத்தனை வயசு, எப்படி முகம்' ஒரு விவரமும் எனக்குத் தெரியாவிட்டாலும் தெரிந்ததுபோல் ஒரு புன்முறுவல் காட்டிக்கொண்டேன்.

''தம்பி! என்ன...முகங் காஞ்சு கிடக்கு? முன்னம் முன்னம் பொறுப்பான காரியம் ஒண்டுக்குப் போறம். வெறு வயிற்றோடை போனால் முகம் குளிர்ச்சியாயிராது. வயிற்றுக்கு ஏதாவது போட்டால்தான்...''

''ஏதாவது சாப்பிடுவம் அண்ணை''

தாமண்ணை விறுவிறென்று நடந்தார். மருந்தகம், உணவகம், துணியகம், அச்சகம் என்று பல 'அகம்' களைக் கடக்கையில், இடையே ஓர் 'ஒட்டகம்' வந்தது. அது சைக்கிள் ரியூப் ஒட்டும் இடம் என்று புரிந்தது. கடைசியாக தாமண்ணை ஒரு சாப்பாட்டகம் வந்தடைந்தார். ஊதுபத்தி வாசனை, வானொலி இசைகளைக் கடந்து இருவரும் உள்ளே நுழைந்தோம்.

கொஞ்சம் தாமதமாக வந்த பையனிடம் [illegible]ளுக்கெல்லாம் எங்கட அவசரங்கள் விளங்காது...சாப்பிட என்ன இருக்கு? மசாலை தோசை இருக்கே?''

''மசாலை தோசை என்றால் 10 நிமிஷம் செல்லும்'' என்றான் பையன்.

''அதுவரை, சாப்பிட இட்டலி, கிழங்கு, சாம்பார் ஏதாவது கொண்டுவா''

தாமர் பண்ணும் அட்டகாசம் கேட்டு, அரைக் கை சேட், மடித்துக்கட்டிய வேட்டி, காதுப்பூ, நெற்றிப் பொட்டு சகிதம் நின்ற முதலாளியே வந்துவிட்டார்.

''ஐயாவை நல்லாய்க் கவனி'' என்று சொல்லி தானே பரிமாறத் தொடங்கிவிட்டார். உழுந்து வடை, கப்பல் பழம் என்று ஏக தடபுடல். புதுமாப்பிள்ளைக்கு மாமியார் வீட்டு உபசாரமெல்லாம் தாமண்ணைக்கு ஹோட்டலில் நடந்தது. கடைசியாக 'ரீ' யுடன் விருந்து முடிந்து வெளியேறு கையில் தாமண்ணை பிறிஸ்ரல் பைக்கற்றும் வாங்கிக் கொண்டார்.

வெளியே நடைபாதை ஓரத்தில் தவளை போல, முடமான ஒரு சப்பாணிக் கிழவன் ஒரு ரூபாவுக்காகத் தன் இரு கைகளையும் ஏந்தினான். எனது கை பொக்கற்றினுள் துழாவ, எனது முயற்சியைத் தடுப்பதுபோல ''தம்பி! தம்பி!'' என்று அவசரத் தொனியுடன் எட்டி நடை போட்டார் தாமண்ணை. என் அருகாமையை உணர்ந்தும் —

''என்ன தம்பி கொஞ்சமும் அனுபவமில்லாத பிள்ளையாய் இருக்கிறாய். கீழ் வகுப்புப் படிக்காமல் ஏ. எல் படிச்சனியே?... ஔவையார் என்ன சொன்னவ தெரியுமே? 'அறஞ்செய விரும்பு' அறஞ்செய்ய...... எது?...... விரும்பு எண்டுதான் சொல்லியிருக்கிறா. 'அறஞ் செய்' எண்டு சொன்னவவே? நீ விரும்பியிட்டாயெல்லோ அது போதும். பேசாமல் வா.''

மீண்டும் ஆஸ்பத்திரி வீதி ஓரமாய் வந்து நின்றோம்.

''தம்பி, கன்னாதிட்டிச்சந்தி போய் ரண்டு மூடக்குத் தாண்ட வீடு வந்திடும். அவ்வளவு தூரமில்லை. எண்டாலும், போறனாங்கள் ஒரு மதிப்பாய்ப் போனால்தான் போற விஷயத்துக்கும் ஒரு மதிப்பு வரும்...''

மதிப்பாய் போகிற விஷயம் விளங்காமல் நான் குழம்பினேன். எனது குழப்பம் அவருக்குப் புரிந்தது.

''இப்ப நாங்கள் ஓட்டோவை [illegible] நிறுத்திப் போட்டு 'ஹோர்ன்' அடிக்க வேணும். அவையள் எட்டிப்பார்க்க, நாங்கள் ஓட்டோவை விட்டு இறங்க வேணும்...அப்பதான் போற விஷயத்துக்கு ஒரு கனதி வரும்...என்ன?. நான் சொல்லுறது இப்ப விளங்குதே?''

''ஓமண்ணை... ...அப்பிடிச் செய்வம்.''

இந்த 'மதிப்பு' விஷயம் எனக்குப் புரியாவிட்டாலும், ஒரு விஷயம் மட்டும் புரிந்தது—தாமண்ணையின் வயிறு 'ஹவுஸ் புல்'. நடப்பது கஷ்டம்.

சஞ்சீவி சிறுகதை

போத்துக்கீஸர் காலத்து போர்டிக்கோஉள்ளவீடொன்றின் வாசலில் ஓட்டோ நின்றது. கேற் பூட்டியிருந்தது; ஓட்டோவின் கரகரத்த 'ஹோர்ண்' சத்தம் வீட்டில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. 'மதிப்பை'ப் பார்க்க யாரும் இல்லாததால் வேறு வழியின்றி நாங்கள் ஓட்டோவை விட்டு இறங்க ஓட்டோ திரும்பிப் பறந்தது. 70 ரூபா பணமும் கூடப்பறந்தது.

தாமண்ணையின் சிம்மக் குரல் கேட்டு சிறுநாயொன்று விழித்துக்கொண்டது. அதையடுத்து சுமார் 15 வயதுப் (பையன் வேலையாள் என்று தோற்றம் சொன்னது) ஒருவன் கேற்பக்கம் வந்தான். கூர்ந்து கவனித்தான். 'என்ன விஷயம்?' என்று கேட்பது போல ஒரு பார்வை.

''என்ன தம்பி என்னைத் தெரியேல்லையே...? நான் தான் தாமு. தாமோதரத்தார். போன மாதமும் வந்து மதுரலிங்க ஐயா வேடை கதைச்சு தேத்தண்ணியும் குடிச்சுட்டுப் போனனான்...''

தாமண்ணை காட்டிய வலுவான நெருக்கம் பையனிடம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

''ஐயா ஊர் காவத்துர போயிருக்காங்க. அப்புறம் சாயந்தரமாத்தான் வருவாங்க. பின்னாடி சாயந்தரமா வந்து பாத்துக்குங்க''

பையன் போய்விட்டான்.

தாமண்ணை கேற்றை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, தலையைக் குனிந்து தீவிரமாக ஆலோசித்தார். நான் பொக்கற்றில் கைவிட்டு காசு என்வலப்பின் கனத்தை ஒரு குத்து மதிப்பாகக் கணக்கெடுக்க முயன்றேன்.

தம்பி இண்டைக்கு நல்ல நாள். அதோடை கிழமையும் வெள்ளி. மதுரலிங்கர் வந்து சேர ராகுகாலமும் கழிஞ்சிடும் ..ஒரு நல்ல அலுவல் பற்றி யோசிக்கிறன். மீசை வைச்சு, சினிமாத்தனமாய் திரியிற இளசுகளுக்கு இந்தச் சங்கதியளிலை நம்பிக்கையில்லை. பேப்பர்களிலையும் கேலி பண்ணிறமாதிரி கதை எழுதுறாங்கள் கதை. நீ எப்பிடி நினைக்கிறியோ தெரியல்லை...''

'நீங்கள்எதைப்பற்றிச்சொல்லுறியள் தாமண்ணை?'

''நேரே இந்தப் பக்கமாய் ரண்டு முடக்குத் திருப்ப ஒரு லேனுக்குள்ளை எனக்குத் தெரிஞ்ச ஒருவர் — சோதிடத்திலை வலுவிண்ணர். சாதகம், கைரேகை, எண் சோதிடம் மூண்டிலையும் பெரிய ஒரு புலி. இப்ப நாங்கள் போற பயணம் ஜேர்மனியோ, சுவிஸோ, கனடாவோ; பயணம் எப்ப நடக்கும் எல்லாம் அச்சொட்டாய்ச் செல்லுவார். வெளிநாட்டுப் பயணம், கலியாண விஷயம், படிப்பு, தொழில் துறை, வழக்குத்தகராறு, மாடு—கண்டு களவு, நோய் நொடி, புதுயாவாரம், வாகனம் வாங்கிறது எதெண்டாலுஞ் சரி. ரேகையைக் காட்டினால் போதும். அவர் சொல்லிறதுக்கு அப்பீல்கிடையாது. அதோடை நான் கொண்டு போற கேசெண்டால் 'றேற்'றும் ஒரு பத்துப் பதினைஞ்சு குறைவு. ஒருக்கால் எங்கடை இந்த விஷயத்தையும் அவரைக் கேட்டுப் பார்ப்பமெண்டு யோசிக்கிறன்... நீ என்ன நினைக்கிறாய் தம்பி?''

''அதுக்கென்னண்ணை... பாப்பம்.''

சந்துகள் கடந்து சோதிடரின் பொந்துக்குள் வந்து சேர்ந்தோம். முன்புற நீண்ட தாழ்வாரத்தில் இருந்த வாங்கு ஒன்றில் உட்கார்ந்தோம். அங்கே இருந்த சாய்வு நாற்காலிதான் சோதிடரின் சிம்மாசனம் என்று தோன்றியது. ஒரு ரீப்போ, ஒரு பஞ்சாங்கம், ஒரு சோதிடப் புத்தகம் எதுவுமே அங்கு காணப்படவில்லை. ஒரு சோதிடச் சூழ்நிலையின் நிழல் கூட அங்கு இல்லை. வீட்டுக்குள் செல்லும் வாசல், போக வர இடைவெளி விட்டு பலகை ஸ்கிறீன் கொண்டு மறைக்கப்பட்டிருந்தது.

கையில் சுருட்டு, தீப்பெட்டி சகிதம் எங்களை எட்டிப் பார்த்த சோதிடரின் முகத்தில் ஒரு மலர்ச்சி. வயது சுமார் அரை நூற்றாண்டு.

-கா. அருளானந்தம்-
(கீழ்க் கருணையூர்)

''என்ன... தாமர் அவசர கேஸோ? ஆறுதலோ?''

''இல்லை, சாத்திரியார் இது வெரி வெரி ஆறுதல்... ஏன்... உங்களுக்கு ஏதேனும் அலுவல் இருக்கோ?''

''இல்லை, தாமர் உள்ளை ஒரு சின்ன வேலை. பத்து பதினைஞ்சு நிமிஷத்திலை வந்திடுவன்.''

''தாராளமாய் போய் வாருங்கோ!''

சாத்திரியார் உள்ளே போய்விட்டார்.

''சாத்திரியார் தனியாள் தம்பி. இந்தச் சட்டி பானை பிக்கல் பிடுங்கல் ஒண்டும் கிடையாது. பரம்பரையாய் சோதிடந்தான் தொழில் இப்ப பார்... எங்கடை விஷயத்திலை ஒரு சின்னச் சறுக்கல் விட்டால் போதும்... தம்பியாணை ஒரு சதக்காசு குடுக்க விடமாட்டன்.''

வாசல் பக்கம் ஸ்கிறீனின் கீழ் இடைவெளியில், கீழ்ப் பாதம் என் கண்ணில்பட்டது. தாமரின் பேச்சுத் தொனியும் உரத்து ஏறத் தொடங்கியது.

''முதல் அவர் சொல்ல வேணும் நாங்கள் சுவிஸ் பயண விஷயமாய் வந்ததை. பிறகு, ரண்டு பெண் சகோதரம், கொப்பர் 5 வருடம் முந்தி கண்மூடினது, எல்லைப் பனையிலை ஓலை வெட்டினதாலை தகராறுப் பட்டு, கொப்பரும் கொம்மானும் கோட்டுக்குப்போய் அப்புக்காத்துமாரெட்டை காசைக் கரியாகினது... பிறகு...''

தாமண்ணை சொல்லச் சொல்ல, காதை அவர் பக்கம் கொடுத்திருந்தாலும், பலகைத் தடுப்பு இடைவெளியில் சுருட்டுப் புகையின் அசைவு வேகவேகமாய் அதிகரித்ததையும் சாத்திரியின் கீழ்ப்பாதத்தையும் என் கண்கள் அவதானித்துக் கொண்டன. சாத்திரம் சரியாய்ச் சொல்லப்படும் என்பது நன்கு புலனாகியது.

எதிர்பார்த்தபடியே, தாமரின் பேச்சை மீண்டும் 'ரேப் றெக்கோடரில்' போட்டது போல, சோதிடரின் குரலில் சாத்திரம் கேட்டுக் கொண்டு புறப்பட்டோம்,

புறப்படும் போது, தாமண்ணை சாத்திரியாரை பின்பு வந்து சந்திப்பதாக ஒரு 'ஒப்பந்த வாக்களிப்பு'. அதனுள் ஒய்ந்தகொமிஷன்சமாசாரமும் நுண்ணிதாய்ப்புரிந்தது.

மீண்டும் பிரதான வீதிக்கு வந்தோம். வெளியில் தகித்தது. வெளியே வந்ததும்

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பரிசுப் பொருள்

சஞ்சீவி சிறுகதை

அடிக்கடி ஏதாவது பிரச்சினைகளில் சிக்குப்பட்டு, அவற்றைத்தெளிவிக்கும்வரை அல்லோல கல்லோல மாய்ப் போய்விடும். பிரச்சினைகள் பற்றி பயம் இல்லை. அவற்றின் ரூபம் வாமனமாகவும் அல்லது விஸ்வரூபமாகவும் வரும். எப்படியாயினும் தீர்க்கப்பட வேண்டியதாகத்தான் இருக்கும். தீர்க்காவிட்டால் எதையோ பறிகொடுத்தது மாதிரி இருக்கும். முகம் தூக்கணாங் குருவிக் கூடு மாதிரித் தொங்கிக் கிடக்கும்.

எப்படியாயினும் திணறுப்பட்டு, அவதிப்பட்டு தீர்த்து விட்டால் சந்தோஷம் மாதிரி இருக்கும். இதுவும் இருக்கும் பிரச்சினைகளின் மத்தியில் பெரிய பிரச்சினை அல்ல. இருந்தாலும் மனதை அரிக்கும் பிரச்சினை. பிரச்சினையாயுள்ளபோதே சொல்லிட வேண்டும். முடிந்த பின்சொல்வதில் அர்த்தம் இல்லை.

நேற்று மாலை பவியைக் காணலாம் எனப் போனேன். முகத்தை எங்களுக்குப் பிடிக்காத ஒருவரின் சோகத்தில் பங்கு கொள்ளும்போது எப்படி கோணலாக்கிவைத்திருப்போமோ அதுபோல் வைத்திருந்தாள். என்னைத் திரும்பியே பார்க்கவில்லை. உம்மென்றபடியே அரசமரத்தில் இறகுகளைக் கோதிக் கொண்டிருந்த புறாவைப் பார்த்தபடி நான் வந்ததே தெரியாதது மாதிரி, அல்லது ஒரு பொருட்டாகக் கருதாதது மாதிரி, புறாதான் அவசியம் எனப் பார்த்தபடிஇருந்தாள்.

''ஏய்..?''

மொதுவக ஸ்பரிசம் மாதிரி அழைத்தேன்.

''ம்...''

''என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்...?''

ஒரு தடவை திரும்பி எனது வெறும் கைகளைப் பார்த்துவிட்டு பழையபடி புறாவைப் பார்க்கத் தொடங்கினாள். நீண்டநேரம் மௌனம். புறாவுக்கும் எங்கள் பிரச்சினை தெரிந்ததோ என்னமோ அசையாமல் எங்களையே பார்த்தபடி இருந்தது.

''கொண்டு வந்தாயா...?''

வெறுமனே 'இல்லையென' தலையை அசைத்தேன். இதனால் பவியின் முகம் முன்னரைவிட இன்னும் கோணலாகி விட்டது என்பது தெளிவாக இருந்தது.

சில நாள்களாக பவி என்னிடம் கேட்கின்றாள். ''இவ்வளவு நாள்களில் எனக்கு ஏதாவது பரிசுவாங்கித் தந்தாயா?''

நானும் அவளும் இரண்டு வருடங்களாய்ப் பழகி வருகிறோம். உண்மைதான். அவளுக்கு இதுவரை எதையும் நான் வாங்கிக் கொடுக்கவில்லை. ஏதாவது வாங்கிக் கொடுத்திருக்கலாம். இதற்கென்று அவ்வளவு சிரத்தை எடுத்ததில்லை. அத்துடன் தோதாக எதுவும் கிடைக்கவில்லை. இவ்விடத்தில்தான் சிரமம் அதிகமாக உருவெழுந்தது.

பவி என்னிடம் பரிசு கேட்டபின் ஏதாவது ஒரு பொருள் வாங்கலாமெனஎண்ணினேன். அது அவ்வளவு சுலபம் இல்லையென எனக்கு விரைவில் புரிந்துபோயிற்று. ஒரு பொருளை வாங்க எண்ணும் போது. பலவிதமான எண்ணங்கள் தடைசெய்தன.

முதலில் ஒரு பேனா வாங்கிக் கொடுக்கலாம் என நினைத்தேன். அதுவும் ஊதுபத்தி வாசம் வரும் பேனாவாக என்று முடிவு எடுத்தேன்.

ஆனாலும் பேனா கொடுத்தால் உறவு முடிவடைந்துவிடும் என்று யாரோ சொல்லக் கேட்டு இருக்கின்றேன். எனவே பேனா வாங்கும் எண்ணத்தைக் கைவிட நேர்ந்து விட்டது. ஓர் உறவின் முடிதலுக்கு பேனா காரணமாக இருக்கும் என்பதனை என்னால் நம்பவும் முடியவில்லை. ஆனாலும்அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு நான் தயாராகவும் இல்லை.

பின் எதுவாயினும் உடை. உடைபற்றி எண்ணியவுடன் டைட்டானிக் படம் போட்ட வட்டக்கழுத்து ரீசேட்-கறுப்பு நிறம் ஞாபகம் வந்தது. அவள் தோடம்பழ நிறத்திற்கு எடுப்பாக இருக்கும். இந்த எண்ணத்தையும் கைவிட நேர்ந்தது. எப்படியெனில் டைட்டானிக் ஒரு முழுச் சோகம்; மூழ்கிய சோகம். எங்கள் உறவு மூழ்க வேண்டியதல்ல. எனவே இந்தத் திட்டமும் எனக்குப் பொருத்தப்பாடாப் அமையவில்லை.

வேறு ஏதாவது...... எதிர்ப்பட்ட கடைகள் எல்லாவற்றுள்ளும் நுழைந்து பார்த்தேன். எவையும் என்னைக் கவரவில்லை. தாஜ்மஹால், இதயம், மீன் உருவம், கண்ணன் - ராதை சிலை இவையெல்லாம் எனக்கு பொருள்களாகப் பட்டனவேயொழிய பரிசுகளாக அல்ல. நான் கொடுக்கும் பரிசு உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று இல்லை; மகத்துவமானதாக இருக்க வேண்டும்.

மகத்துவம் எதுவும் சந்திக்காத படியால் வெறுங்கையுடன் பவியைச் சந்திக்க வர வேண்டியதாயிற்று. அவளோ பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. சில வேளை ஒருவருடன் ஒருவர் கதையாமல் 'உம்'மென்று இருந்து விட்டும் போய் விடுவோம். பாவம் பலவித பிரச்சினைகளைக் கடந்து இங்கு வரும் போதுதான் சந்தோஷமாய் இருப்பாள். அதையும் இழந்து விட்டாள். நானும் கூடத்தான்.

இன்றும் கூட ஏதாவது வாங்க வேண்டும் என்று பிடிவாதமாகப் போய்ப் பார்த்தேன். ஆனாலும் முடியவே இல்லை. எதுவும் என் மனதின் சிகரங்களை தொடவேயில்லை. எல்லாம் ஏதோ அற்ப பொருள்களாகப்பட்டன. அல்லது சிதையும் வரலாற்றைக் கொண்டனவாக இருந்தன.

நகைக் கடை எதிர்ப்பட்டது. என் பெயர் பொறித்த பென்ரன் வாங்குவோமா? கடைக்குள் நுழைந்து ஓடர் கொடுத்த பின் பணம் பெரிதாக இல்லை. இருப்பினும் என் பெயரை பவி அணிவதால் என்ன மகத்துவம் வந்துவிடப் போகின்றது. இந்த இரண்டு வருடம் பழகியதைவிட? பேசாமல் ஓடரை மறித்து விட்டு வெளியேறினேன.

மௌனம் தொடர்கின்றது. இன்றுடன் இதற்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்ன செய்யலாம்?

மெதுவாக பவியிடம் கேட்டேன்.

''நீ எனக்கு ஏதாவது பரிசு. தந்திருக்கின்றாயா?''

புறாவைப் பார்த்துக் கொண்டிருந்தவள் அதிலிருந்து விடுபட்டு என்னைப் பார்த்தாள் அந்தப் பார்வையில் 'இது வரை இல்லை' எனப் பொருள்பட்டது. அதுவரை அமைதியாக இருந்தவள் ஏதோ முடிவெடுத்தவளாக எழுந்து போய் விட்டாள்.

★ ★ ★

மறுநாள் மாலையில், பவியைப் பார்க்கப் போனேன். முதல்நாள் அவள் என் இயலாமையை முறியடிக்கும் திடத்துடன் போனது ஞாபகம் வந்தது. சிலவேளை பவியால் பரிசுப் பொருள் வாங்க முடிந்திருக்குமோ என்பது என்னில் வியப்பாய் எழுந்தது. அவ்விதம் வாங்கியிருந்தால் அவள் கெட்டிக்காரிதான் என எண்ணிக் கொண்டேன்.

பவி அரச மரத்தைப் பார்த்தபடி இருந்தாள். புறாவைக் காணோம். அருகில் அமர்ந்து கொண்டேன். ஏதாவது வாங்கி இருப்பாளா? என்ற எண்ணம் மனதை அரித்தது. இவ்வளவில் வாங்கியிருந்தால் பவி கொடுத்திருப்பாள்.

''வாங்கினாயா?''

மௌனமே பதில்.

சிறிது நேரத்தால் இல்லையெனத் தலையசைத்தாள். எனக்கு பவியிடம் பிடித்த விஷயம் அவள் மறுத்துத் தலையசைக்கும் விதம். ஒரு நடுக்கம் மாதிரி விறுவிறுவென்று கழுத்தசையாமல் தலை மாத்திரம் அசையும்.

ஏன் வாங்காமல் விட்டாள்? பணம் இல்லாது இருக்குமோ? பவிநகரில் தனியார் நிறுவனமொன்றில் கணனி பிரிவில் வேலை பார்ப்பவள். நானே அவளிடம் கடன் வாங்குவேன். (திருப்பி கொடுப்பதில்லை; அது வேறு விடயம்.)

''ஏன்...?''

பதில் இல்லாமல் மௌனமாக இருந்தாள். முகத்தில் ஒரு வெறுமை தென்பட்டது:

இப்போது பார்த்து புறாவும் மரத்தில் வந்து அமர்ந்தது. புறாவைப் பார்க்கத் தொடங்கினாள்.

மீண்டும் மௌனம்......

சிறிது நேர நகர்வின் பின்—

''எதுவும் பிடிக்கவில்லை''

எனக்கு ஆச்சரியமாய்ப்பட்டது. என்னைப் போலத்தான் பவியும் எதுவும் பிடிக்காமல் மனம் லயிக்காமல் திரும்பி வந்திருக்கின்றாள்.

நான் பார்த்த மாதிரி... பேனா, டைட்டானிக்ரீசேட், இதயம், தாஜ்மஹால், மீன் உருவம் எல்லாம் பார்த்து இவற்றில் என்ன சிறப்பு இருக்கின்றது எனக் கேட்டாள். அவை யாவும் இதையும் தாண்டி புனிதமானவையல்ல என்று என்னைப் பார்த்தாள்.

இனி, பவி எனது இயலாமையின் பரிபூரணத்தைத் தாராளமாக ஏற்றுக் கொள்வாள். இது இயலாமை என்று என்னால், பவியால் ஏற்றுக் கொள்ளவும் முடியாது மீண்டும். மௌனம்.

அரச மரத்தில் இருந்த புறா எங்களையே பார்த்தபடி இருந்தது. சிறிது நேரத்தில் எங்கிருந்தோ ஒரு புறா வந்து இந்தப் புறா அருகில் அமர்ந்து கொண்டது. தன் இறகுகளை கோதியபடி குறுகுறுத்தது. இதுவும் அதைப் பார்த்து குறுகுறுத்தது. புதிதாக வந்த புறா இதன் அருகே போவதும் பின் சிறகுகளைக் கோதுவதும் குறுகுறுப்பதுமாய் பின் விலத்துவதுமாய் இருந்தது. இரண்டும் தமது பாஷையால் ஏதோ பேசிக் கொண்டன. பின் இரண்டும் ஒரே திசையில் விர்ரென்று பறந்து போயின.

நானும் பவியும் மௌனத்தை நீக்கி சில விஷயங்கள் பேசத் தொடங்கினோம்.

[யாவும் கற்பனை]

★

- கோகுலராகவன் -



# அப்பக்காரக் கிழவி

அந்த ஊரிலே கிழவி ஒருத்தி அப்பம் சுட்டு விற்று வந்தாள். கிழவி ஏழையாக இருந்தமையால் உறவினர்கள் அவ்வளவாக வந்து ஒட்டி உறவாடவில்லை. தன்னந்தனியாக அந்தக் கொண்டலடி வைரவரே துணையென்று அவள் வாழ்ந்து வந்தாள்.

அதிகாலையிலிருந்தே அப்பம் சுடத்தொடங்கி விடுவாள். சுத்தமானதும் சுவையானதுமாக இருப்பதால் அப்பம் முழுவதும் விற்பனையாகிவிடும்.

விற்ற பணத்தில் ஒரு நாணயத்தை எடுத்து அவள் குடிசையின் பக்கவாட்டில் உள்ள மண்சுவரின் கறையான் புற்றுத் துவாரத்துக்குள் போட்டுச் சேமித்துக்கொள்வாள்.



கிழவிக்கு ஒருநாள் கடும் காய்ச்சல் வந்தது. நெருங்கிய உறவினர்களுக்குச் சொல்லி அனுப்பினாள். ''காசு பணம் சொத்துப்பத்து இல்லாத கிழவியை நாங்கள் பார்க்கமாட்டோம்'' என்று உறவினர்கள் சொல்லி அனுப்பினார்கள்.

யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்

கிழவியைப் பார்ப்பதற்கு கூத்தாடிக் குமரப்பன் வந்தான். அவன் கூத்தாடிப் பிழைப்பவன். கிழவியிடம் அப்பம் வாங்கிச் சாப்பிடுபவன். கிழவி தன்னுடைய அவல நிலையை குமரப்பனிடம் சொன்னாள். குமரப்பனுக்கு கிழவியின்மேல் இரக்கம் வந்தது. கிழவியைத் தான் பார்ப்பதாக உறுதியளித்தான். வைத்தியரைக் கூட்டிக் கொண்டு வந்து மருந்துகொடுத்தான். தன்னுடைய கையால் கிழவிக்கு உப்புக்கஞ்சி காய்ச்சிக் குடிப்பதற்குக் கொடுத்தான்.

கிழவி குமரப்பனைப் பார்த்து ஒரு கடப்பாரை கொண்டு வரச்சொன்னாள். அவன் கொண்டுவந்த இரும்புப் பாரையால் பக்கவாட்டுச் சுவரிலுள்ள கறையான் புற்றை இடிக்கச் சொன்னாள். அவ்வாறே குமரப்பன் இடித்தான். காசுகள் வரத்தொடங்கின அத்தனை காசுகளையும் பொட்டலமாகக் கட்டி கிழவியின் குடிசை வாசலில் வைத்து விட்டுக் கூத்தாடி குமரப்பன் கூக்குரலிடத் தொடங்கினான்.

கிழவியின் குடிசை வாசலில் மக்கள் திரளாகக் கூடிவிட்டனர். ''ஆச்சியை ஒருநாள் பராமரித்ததுக்கு இவ்வளவு பணம் தந்தா...எத்தினை பெருமனசு ஆச்சிக்கு?'' எண்டு கத்தினான். கிழவியிடம் அதிக பணம் இருக்கிறது என நினைத்து உறவினர் ஒவ்வொருவரும் முந்தியடித்துக் கொண்டு அவளைப் பராமரிக்க வந்தனர்.


—தொகுப்பு: கலாநிதி சபா. ஜெயராஜா—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அருவருப்புத்தரும் கரப்பான்!

பொதுவாக அனைத்து வீடுகளிலும், ஏனைய இடங்களிலும் காணப்படுவதும், தொந்தரவை விளைவிப்பதும், அருவருப்பானதுமான பூச்சியினம் கரப்பான் ஆகும்.

இதன் உடல் தட்டையானதாகவும், மளமளப்பானதாகவும், குறுகிய இடுக்குகளில் புகுந்து வாழ்வதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது. இதன் உடலை மூடியிருக்கும் புறமேல் தோல் கைட்டின் என்னும் கொம்புப் பொருளால் ஆனது. இதன் நீண்ட கால்களில் சுணை மயிர்கள் காணப்படும்.



கரப்பான் முன்புறம் பின்புறம்

சாதாரணமாக கரப்பான் பறக்க முடியாதது. எனினும் கால்களின் உதவியுடன் விரைவாக ஓடக்கூடியது. கரப்பானின் தலையில் நீண்ட சவுக்குப் போன்ற உணர் கொம்புகள் இரண்டு உள்ளன. கரப்பான் கால்களையும் தன் உணர் கொம்புகளையும் அடிக்கடி வாயிலுள்ள தாடைகளின் வழியாக அடி முதல் நுனிவரை உருவித் துடைத்துக் கொள்ளும்.

பிராணிகள் உலகம்

கரப்பானுக்கு இரு சோடி இறக்கைகள் உள்ளன. மேல் முன் இறக்கைகள் சற்றுத் தடிப்பாக அமைந்து கீழ் இறக்கைகளைக் காப்பதுடன் பறக்கும் திசையை மாற்றுவதற்கும் உதவும். கீழ் பின் இறக்கைகள் பெரியவையாகவும், மெல்லியவையாகவும், மடிக்கக் கூடியதாகவும் அமைந்து பறப்பதற்கு உதவும்.

கரப்பான் பகலிலே சுவர், பெட்டி, இடுக்கு முதலியவற்றில் ஒளித்திருந்து இரவில் உலவும் இயல்புடையது. இது உணவுப் பொருள்கள், கடதாசி, புடைவைகள், இறந்த பூச்சிகள், மூட்டைப் பூச்சி போன்ற அனைத்தையும் கடித்தும், அரித்தும் உணவாகக் கொள்ளும். இனிப்பான பொருள்களை இது விரும்பியுண்ணும்.

பொதுவாக இது உண்பதைக் காட்டிலும் கெடுத்து, எச்சமிட்டு, அழுக்காக்குவதே அதிகம். இதன் பல இனங்களுக்கும் அருவருப்பான மணம் உண்டு. இது எங்கிருந்தாலும் இதன் அருவருப்பான மணம் அருகிலுள்ள பொருள்களையும் பற்றிக் கொள்ளும். கரப்பானினால் பல தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியமும் உண்டு.

வெப்ப வலயத்திலே வாழ்வதற்கு இயைபாக்கமுடைய கரப்பான்கள் வணிகப்போக்குவரத்துக்கள் மூலம் உலகின் பல பாகங்களிலும் பரவியுள்ளன. துறைமுகங்களிலே அதிகளவில் காணப்படும் கரப்பான் பூச்சிகள் அங்கிருந்து வெளியூரிலும், உள்ளூரிலும் பரம்பலடைகின்றன.

கரப்பான்களில் சுமார் ஆயிரத்து 600 இனங்கள் வரையுள்ளன.

கரப்பான் முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும் இயல்புடையது. சிலவற்றின் முட்டைகள் தாயின் உடலிலேயே தங்கி குஞ்சுகளாக வெளிவரும். சிறு கூடு போன்ற 'ஒவோதிக்கா' எனப்படும் பையை தனது பின் முனையிலே கரப்பான் தூக்கிக்கொண்டு திரிவதை நீங்கள் காணலாம். இந்தக் கூட்டை ஏதாவது இடுக்கில் ஒட்டிவைக்கும். பின்னர் அதிலிருந்து குஞ்சுகள் வெளிவரும். ஒரு முட்டைக் கூட்டில் சமார் 10 முதல் 32 வரையான முட்டைகள்—இரண்டு வரிசைகளில்—அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

சாதாரணமாக வீடுகளிலுள்ள கரப்பான் பிளாட்டா ஓரியென்டாலிஸ் என்னும் கிழக்கிந்தியக் கருங்கரப்பானாகும். இதன் வாழ் நாள் சுமார் 13 மாதங்களே ஆகும். ஆண் கரப்பானிலும் பார்க்க பெண் கரப்பானின் சிறகு மிகச் சிறியது. பெண்கரப்பானுக்கு இறக்கை இல்லையென்றே கூறலாம்.

கரப்பானை ஒழிப்பதற்கு வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். இதனை ஒழிப்பதற்காகத் தெளிக்கப்படும் குளோர்டேன், டீ. டீ. ரி, சோடியம் புளோரைட்டு, சோடியம் புளுவோ சிலிக்கேட்டு, தயோசயனேட், பைரித்திரம் ஆகியன நச்சுத்தன்மையுடையவை. ஆதலால் இவற்றை எச்சரிக்கையுடன் பாவிக்க வேண்டும்.

தற்போதுள்ள இறக்கையுள்ள பூச்சிகளில் எல்லாம் மிகப் பழமையான —நிலையுள்ளது— கரப்பான் என்பது குறிப்பிடத்தக்கது.


## வலமா? இடமா?

| | |
|---|---|
| 987654321 | 123456789 |
| 87654321 | 12345678 |
| 7654321 | 1234567 |
| 654321 | 123456 |
| 54321 | 12345 |
| 4321 | 1234 |
| 321 | 123 |
| 21 | 12 |
| 1 | 1 |

மேலே வலது புறத்தில் ஒன்பது எண்களும், இடதுபுறத்தில் ஒன்பது எண்களும் எழுதப்பட்டுள்ளன. கூட்டும்போது எந்தப் பக்கத்தில் தொகை அதிகம் வரும் என்று நினைக்கின்றீர்கள்? இடது பக்கமா? வலது பக்கமா?.

(விடை XV ஆம் பக்கத்தில்)


## வழி எது தெரியுமா?




1, 2, 3, 4 ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்டால் எந்த இடத்துக்கு மிகக் கிட்டிய தூரத்தில் விளையாட்டு மைதானம் உள்ளது. எந்த இடத்திலிருந்து விளையாட்டு மைதானத்துக்குப் போய் சேரமுடியாது? வழி தெரிகின்றதா உங்களுக்கு?

(விடை XV ஆம் பக்கத்தில்)

## தீக்குச்சுகள் எத்தனை?




இந்தத் தீப்பெட்டியில் இருந்து தீக்குச்சுகள் கீழே விழுந்துவிட்டன. எத்தனை முழுத் தீக்குச்சுகள் உள்ளன என்பதை எண்ணிக் கண்டுபிடியுங்கள். உடைந்த தீக்குச்சுகளை கணக்கெடுக்கத் தேவையில்லை. ஒரு நிமிடத்துக்கு மேல் எண்ணக்கூடாது. எண்ணி முடித்தீர்களா?

(விடை XV ஆம் பக்கத்தில்)




## சொற்களைத் தேடுங்கள்

கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் குறிக்கும் சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று எழுத்துக்கள் கொண்டவை. அச்சொற்களிடையே ஓர் எழுத்தில் மட்டும் மாற்றம் உண்டு. அச்சொற்களைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

i) யானை.
ii) வேறு கோலம் கொள்ளல்.
iii) இதுவும் வேறு கோலம் கொள்ளலே.
iv) கதி.
v) வேண்டாம்.
vi) வேண்டும்.
vii) முதனால்.
viii) அவியும்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## கண்டுபிடியுங்கள்!

(ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு மிருகங்கள் ஒளிந்து உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.)

(1) ஐந்து கைகள் உடையவன் நான்
ஐங்கரன் முக வடிவமும் நான்
கறுப்பு உருவம் உடையவன் நான்
கண்டுபிடித்துச் சொல் பார்ப்போம்?

(2) காக்கி உடையும் தேவையில்லை
கையில் தடியும் தேவையில்லை
காவல் காக்க வீரன் நான்
கடமையில் தவறாச் சூரன் தான்?

(3) வீட்டைத் தூக்கிச் செல்பவன் நான்
கேட்டுப் பாரென் வீரத்தை
ஓட்டத்தில் முயலைவென்றவன் நான்
ஒருக்கால் தொட்டால் ஒளிபவன்
நான்?

(4) முதலையிடம் தப்பியவன் நான் தம்பி
மூஞ்சை மட்டும் சரியில்லை
மூக்கில் சற்றும் பிழையில்லை
மனிதன் தோன்றியது என்னால்
தான்?

— வி. உதேஸ் —

**விடைகள்**

(1) யானை. (2) நாய். (3) ஆமை. (4) குரங்கு.

## பூனையார் பயந்த காரணம்!

எங்கள் வீட்டுப் பரணிலே
எலிகள் கொட்டம் அடிக்குது
என்ன என்று தெரியலே
ஏதும் எனக்கு புரியலே!

எலிகள் தொல்லை ஒழிக்கவே
எடுத்து வளர்த்த பூனையும்
எலிகள் சத்தம் கேட்டதும்
எங்கோ ஓடிப் பதுங்குதே!

பதுங்கிப் பாயும் பூனையார்
பணிந்து ஒதுங்கிப் போவதேன்?
ஒளிந்து ஓடும் எலிகளும்
ஓடி ஆடித் திரிவதேன்?

பிடித்து எலியை தின்பதால்
'பிளேக்' வரும் என்பதை
அம்மா எடுத்துச் சொன்னதால்
அரண்டு பூனை ஓடுறார்!

## வாத்து

குள்ள குள்ள வாத்து
"குவாக்", "குவாக்" வாத்து
பள்ளத் தண்ணீர் கண்டால்
பாய்ந்து நீந்தும் வாத்து
மெள்ள உடலைச் சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
செல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து

— நா. ராகுலன் —
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

## பட்டம்

பாரினில் கொடுக்கும் பட்டம்
பல வகையான பட்டம்
பண்புடன் கொடுக்கும் பட்டம்
பாங்குடன் விளங்கும் பட்டம்

கல்வியால் வந்த பட்டம்
கவின்கலையால் வந்த பட்டம்
காலத்தால் கனிந்த பட்டம்
கவித்துவத்தால் பெற்ற பட்டம்

பந்தத்தால் பெற்ற பட்டம்
பல்கலையால் பெற்ற பட்டம்
பதவியால் பெற்ற பட்டம்
பாடையால் பெற்ற பட்டம்

பட்டத்தால் வரும் பட்டம்
சட்டத்தால் வரும் பட்டம்
எங்கும் எவர்க்கும் பட்டம்
பட்டம் வாழ்வின் மட்டம்


— கு. சிவகுமார் —
(புத்தூர்.)

யாருடை...



குமாரும் ...
ளுடன் தோட்ட...
கள் சிக்கிக்கொ...
நாய் எது என்...
கொடுங்களேன்.
(விடை X...

கோழிக்...
வழி ...



இந்தக் கோ...
மேய்வதற்கு வ...
வழிகாட்ட முடி...
(விடை ...

செ...

கீழே கொடு...
வைத்துக்கொண்...
சொற்களை நிரப...
சொல்லிலும் வ...
எழுத்து அந்தந்...
டுள்ளது.

உதாரணமா...
குரிய சொல் 'சி...
வரிசையைக் கா...

| | | | |
|---|---|---|---|
| 1 | சி | | |
| 2 | | சி | |
| 3 | | | சி |
| 4 | | | |
| 5 | | | சி |
| 6 | | சி | |
| 7 | சி | | |
| 8 | | சி | |
| 9 | | | சி |
| 10 | | | |
| 11 | | | சி |
| 12 | | சி | |
| 13 | சி | | |

— ந...
(விடை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## …ருடைய நாய் எது?



…ரும் குமாரியும் தத்தமது நாய்க… தோட்டத்துக்கு வந்தார்கள். நாய் …கிக்கொண்டு விட்டன. யாருடைய …து என்று கண்டுபிடித்து பிரித்துக் …களேன்: பிளீஸ்…!

(விடை XV ஆம் பக்கத்தில்)

## …கோழிக் குஞ்சுகளுக்கு …வழி தெரியவில்லை



…தக் கோழிக்குஞ்சுகளுக்கு வீட்டுக்குப் …ற்கு வ… தெரியவில்லை. உங்களால் …ட்ட முடி…மா என்று பாருங்கள்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

## சொற்றேடல்

…ழ கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை …க்கொண்டு 13 கட்டங்களிலும் உள்ள …ளை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு …லும் வரவேண்டிய ''சி'' என்ற … அந்தந்த இடங்களில் குறிக்கப்பட் …தாரணமாக முதலாவது வட்டத்துக் …சால் 'சிவப்பு'. எங்கே உங்கள் கை …வயைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | சி | | |
| | | சி | |
| | | | சி |
| | | சி | |
| | சி | | |
| | | | |
| | சி | | |
| | | சி | |
| | | | சி |
| | | சி | |
| | சி | | |
| | | | |

1. ஒரு வர்ணம்.
2. சட்டவிரோதமாகத் தயாராகும் குடிவகை.
3. சிற்பி செதுக்குவது இதை.
4. தொடர்பு சாதனம்
5. 'ஆசியான்' அமைப்பில் ஒரு நாடு.
6. மனிதனைப் பூரணப்படுத்தும்பரகம்.
7. மிருகங்களின் ராஜா.
8. சுவைஞன்.
9. ஒரு வாத்தியம்.
10. பட்டாசுக்குப் பெயர்போன தமிழக நகரம்.
11. கொடையாக வழங்கப் படுவது.
12. வயப்படுத்தும் செயல்.
13. புளியில் ஒருவகை.

— நா. மகேந்திரலிங்கம் —

(விடை XV ஆம் பக்கத்தில்)

## கிளிகள் எத்தனை?

ஒரு மரத்தில் நிறையக் கிளிகள் இருந்தன. அவைகளை ஒரு வேடன் சுடப் போனான். ''சுடாதே! சுடாதே!!'' என்று ஒரு கிளி கத்தியது.

ஆச்சரியப்பட்ட வேடன் துப்பாக்கியைத் தோளில் போட்டுவிட்டு ''நீ எங்கே பேசக் கற்றுக்கொண்டாய்? மரத்தில் உள்ள எல்லாக் கிளிகளும் பேசுமா?''—என்று கேட்டான்,

''பேசும் கிளிகள் ஒரு குப்பம் உண்டு. எஞ்சியவை பேசாக் கிளிகள்''—என்றது அக்கிளி.

''அப்படியானால் பேசும் கிளிகள் மொத்தம் எத்தனை?'' —இது வேடனின் அடுத்த கேள்வி.

''மொத்தக் கிளிகள் குப்பமும், குப்பத்தோடு ஒப்பமும், ஒப்பத்திலை பாதியும், அந்தப் பாதியிலே பாதியும் என்னையும் சேர்த்தால் 'ஒரு நூறு''—என்று பதில் தந்தது கிளி.

குழம்பிப் போனான் வேடன். 'குப்பம்' என்றால் 'கூட்டம்' என்பதும் 'ஒப்பம்' என்றால் 'சமம்' என்பதும் அவனுக்குத் தெரியாது போலும். எத்தனை கிளிகள் பேசும் என்பதை அவனுக்குக் கண்டுபிடித்துக் கூறுங்களேன்.

**யோ. தர்சினி.**
(யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)

(விடை XV ஆம் பக்கத்தில்)

## வாத்தியார் புதிர்

கணக்கு வாத்தியார் சாம்பமூர்த்தியைப் பார்த்து சந்தேகங்களைத் தீர்க்க அருண், தாஸ், வதன், புனிதா ஆகியோர் காலை 8 மணி முதல் 11 மணி வரை, மணிக்கு ஒருவராய் மாறி மாறி வந்தனர்.

1. அருணுக்கும் தாஸுக்கும் இடையே குறைந்தபட்சம் ஒருவராவது வாத்தியாரைச் சந்தித்தனர்.

2. அருண் புனிதாவுக்கும் வதனுக்கும் முன்னால் பார்க்கவில்லை.

3. புனிதா தாஸுக்கும் வதனுக்கும் இடையே சந்திக்கவில்லை.

இந்தத் தரவுகளை வைத்துக்கொண்டு கடைசியாக வாத்தியாரைச் சந்தித்தது யார் என்று கூறுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## பணத்தைப் பங்கிடுங்கள்

உங்கள் நண்பர் உங்களிடம் பத்துப் பைகளையும் தந்து ஆயிரம் ரூபாவும் தருகின்றார். அந்த ஆயிரம் ரூபாவையும் நீங்கள் பத்துப் பையிலும் போடவேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. உங்கள் நண்பர் ஆயிரம் ரூபாவுக்குள் எந்தளவு தொகை பணம் கேட்டாலும் உடனடியாக அந்தளவு தொகைப் பணத்தைப் பைகளாக எடுத்துத் தரக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படிப் பணத்தை அளிக்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டியது இரண்டு விடயங்கள்.

(அ) நண்பர் கேட்கும் பணத்தைக் கொடுப்பதற்காக பணம் போட்ட பைகளைத் திறக்கக்கூடாது.

(ஆ) நண்பர் தந்த பணம் முழுவதும் பத்துப் பைகளுக்குள்ளும்தான் இருக்கவேண்டும். பைக்கு வெளியில் பணம் ஏதும் இருக்கக்கூடாது.

எங்கே உங்கள் மூளையைக் கசக்கிப் பத்துப் பைகளிலும் போடுவதற்கு பணத்தைப் பங்கிடுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)




## முயன்று பாருங்கள்

1. ஓர் அரசன் ஒரு கூடையில் ஒரு தொகை மாம்பழங்களைக் கொண்டு வந்தான். அவனது முதலாவது மனைவி கூடையிலிருந்த மாம்பழங்களை மூன்றாகப் பிரித்தாள். மீதி ஒன்று இருந்தது. அவள் மூன்றில் ஒரு பங்கை எடுத்துச் சென்றாள். இரண்டாவது மனைவி வந்து எஞ்சியிருந்த மாம்பழங்களை மூன்றாகப் பிரித்தாள். அப்போதும் ஒன்று மீதியாக இருந்தது. அவள் அந்த மூன்றில் ஒரு பங்கை எடுத்துச் சென்றாள். 3 ஆவது மனைவியும் இருந்த மாம்பழங்களை மூன்றாகப் பிரித்தாள். அப்பவும் ஒன்று மீதியாக இருந்தது. அவளும் அதில் மூன்றில் ஒரு பங்கை கொண்டுசென்றாள். பிறகு அரசன் வந்து இருந்ததை மூன்றாகப் பிரித்தான். இப்போது மீதி இல்லை. மூன்று மனைவிகளுக்கும் அவற்றைக் கொடுத்தான். அவ்வாறாயின் கூடையில் ஆரம்பத்தில் எவ்வளவு பழங்கள் இருந்தன?


2. ஓர் அறையின் நான்கு மூலைகளிலும் நான்கு பூனைகள் இருந்தன. ஒரு தொகை எலிகள் முகட்டிலிருந்து அறைக்குள் இறங்கின. முதலாவது பூனை அதில் சிலவற்றைச் சாப்பிட்டது. மீதி எலிகள் இரண்டுமடங்காகின. அவற்றில் சிலவற்றை இரண்டாவது பூனையும் சாப்பிட்டது. அதன் பின் எஞ்சிய மீதி எலிகள் மூன்று மடங்காகின. அவற்றில் சிலவற்றை மூன்றாவது பூனை சாப்பிட்டது. அதுபோக எஞ்சியவை நான்குமடங்காகின. அவற்றை நான்காவது பூனை மொத்தமாகத் தின்று ஏப்பமிட்டது. ஆனால் நான்கு பூனைகளும் சம அளவிலான எலிகளையே சாப்பிட்டிருந்தன. அப்படி என்றால் முதலில் வந்த எலிகள் எத்தனை?

—சூரியகாந்த்—

(விடை XV ஆம் பக்கத்தில்)

## கையுறையை சோடி சேருங்கள்!

இந்தப் புதிர் சிறுவர்களுக்கு மட்டுமல்ல; பெரியவர்களின் மூளைக்கும் ஒரு சோதனைதான். கீழே உள்ள கையுறைகளில் ஒரு சோடி உறைகள் ஒளிந்துள்ளன. எங்கே அவை எவை என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.




(விடை XV ஆம் பக்கத்தில்)

## நொடிப்பொழுது

1. சொல்லாமல் வரும்; நில்லாமல் போகும். அது என்ன?
2. நிமிரும் குனியும்; கூப்பிட்டால் பேசாது. அது என்ன?
3. அப்பா மஞ்சள், அம்மா வெள்ளை, பிள்ளைகள் கறுப்பு. அது என்ன?
4. அப்பம் போல் இருக்கும்; நெருப்பைக் கண்டால் முட்டைபோல் ஆகிவிடும். தொட்டால் உடைந்துவிடும். அது என்ன?
5. சின்னச் சிறுக்கையும் பெரிய சிறுக்கையும் சேர்ந்து கட்டியமாலை; சிக்கில்லாமல் அவிழ்க்க முடியாது. அது என்ன?

**செ. அகிலன்.**
(ஆண்டு 4, உடுவில் மகளிர் கல்லூரி)

### விடைகள்

1. நாள். 2. துலா. 3. வாழைப்பழம்: 4. பெற்ரோ மக்ஸின் மாண்டில். 5. இடியப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை றோஜா முள்

11

அவளது சொத்து விவரத்தைக்கேள்விப் பட்டபோது கரோலுக்கே ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவையும் வைத்துக் கொண்டு நீயும் நானும் அமைதியாக — நிம்மதியாக வாழ முடியுமா என்று கேட்டான் டானியல். கேள்வி நியாயமானதுதான்.

கரோலும் பணத்தைப் பற்றி பெரிதாக அக்கறைப் படவில்லை. மீண்டும் டானியலின் பண்ணைக்குத் திரும்ப வேண்டும். அதைச் சீர்ப் படுத்த வேண்டும். அங்கே அமைதியாக வாழ வேண்டும். அவனோடு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும். இதுவே அவளதும் ஆசை.

விடயம் வெளியே கசியும் போது டானியலையும் கரோலையும் பிரித்து அவளை அடையப்பல பெரியபுள்ளிகள் முயற்சிக்கலாம். இதனால் பல தலைவலிகள் ஏற்படலாம்.

எல்லாச் சாத்தியங்களையும் நிதானமாக ஆராய்ந்தனர் டானியலும் கரோலும். பண்ணை போல ஒரு பெரிய அனாதை ஆச்சிரமத்தைக் கட்டி அங்கே ஆயிரக்கணக்கான அனாதைகள், மனநிலை தவறியோர், வலுவிழந்தோர், ஏழைகள் போன்றோரைப் பராமரிக்கலாம் எனச் சொன்னாள் கரோல். டானியலுக்கும் அது பிடித்திருந்தது. அளவுக்கு மீறி அன்பைச் செலுத்த விட்டால் அவள் ஆபத்தானவளாக சில வேளைகளில் மாறி விடுவாள் என்ற ஏக்கமும் அவனிடம் இருந்தது.

இன்னும் இரண்டொரு தடைகளைத் தாண்டியபின் எல்லாம் சிந்திப்போம் என்றிருந்தான் டானியல். பண்ணையை ஒருமுறை போய்ப் பார்க்க வேண்டும் என மனம் எண்ணியது. ஜோர்ஜின் காரில்தான் போக வேண்டும். அவசரப்பட்டுப் போகவேண்டாம் என ஜோர்ஜ் ஆறுதல் கூறினான்.

★ ★ ★

மைக் மீண்டும் சில நாள்கள் கழித்து அந்தப் பண்ணைக்கு வந்தான். தான் தங்கியிருக்கும் பிளாட்டில் இருந்து தலைமறைவாகாமல் அடிக்கடி அங்கும் உலாவி நடித்துவிட்டே திரும்பி இருந்தான். அங்கே அவனை யாரும் எதுக்கும் சந்தேகப்பட்டதாகத் தெரியவில்லை.

வந்ததும் றொப்பின் கையைப் பிடித்துப் பார்த்தான். நாடித்துடிப்பு இருந்தது. வாயில் தண்ணீரை விட்டதும் நா அசையத் துடித்தது. தொண்டை, கண் காயங்களுக்கு ஏதோ இலைகளை அரைத்து அப்பி இருந்தாள் பண்ணைக்காரி. சேலைனில் சில மருந்துகளையும் ஏற்றி இருந்தாள்.

உணர்வுகள் அற்றவனாகவே [illegible] காணப்பட்டான். இவனால் இனி ஏதும் செய்யமுடியாது என்ற நம்பிக்கை பிறந்தது. பாங்கில் ஒரு பெரிய லொக்கரை எடுத்து இவனதும் தனதும் ரொக்கங்களை வைத்துவிடல் வேண்டும் என நினைத்தான். வைரங்கள் முழுவதும் தனக்கே சொந்தம் என்ற நினைவு அவனை எங்கெங்கோ மிதக்க வைத்தது.

தொலைவில் ஒரு வாகனத்தின் உறுமல் கேட்டது. இங்கு பிற வாகனங்கள் வருவதில்லை. மரம் ஒன்றில் ஏறி உயர நின்று அவதானித்தான். வெள்ளை நிறவான் ஒன்று பண்ணையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

இறங்கி வந்து தனது காரை மறைவாக விட்டுவிட்டு மீண்டும் மரத்தில் ஏறிக் கொண்டான். அடர்ந்த இலைகளுக்குள் மறைந்துகொண்டு நிலைமையை அவதானித்தான்.

வான் மெல்ல மெல்லப் பண்ணைக்கே வந்தது. வீட்டு முற்றத்தில் நின்றது. ஒருவன் அதிலிருந்து இறங்கினான். பண்ணைக்காரியுடன் ஏதேதோ பேசினான். வான் நிறைய இருந்த வெள்ளைப் பெட்டிகளை இறக்கி விறாந்தையில் அடுக்கினான். வான் புறப்பட்டுப் போனது.

தனக்குத் தெரியாமல் பண்ணைக்காரி ஏதோ வியாபாரம் செய்கிறாள் என நினைத்தான் மைக். மனதில் வன்மம் வளர்ந்தது. மெல்ல மரத்தால் இறங்கி வந்தான்.

''யாரது வந்தது?''

''யாரோ றொப்பின் சினேகிதி கொடுத்து விட்டதாம். அவனுக்குரிய பொருள்கள்'' என்றாள் அவள்.

'அடடே! இவருக்கு கள்ளத் தொடர்பும் இருக்கோ? இடமும் சொல்லி வைத்திருக்கிறாரோ? ஆசாமி பொல்லாத ஆள்தான். நல்லவேளை இனி மீளமாட்டார்.'

தது. நகரத்துக்கு வந்தபின் அடிக்கடி ஜோர்ஜைக் கண் காணிக்காமல் இருக்க மனம் இடம் தரவில்லை.

கரோலின் அழகை ஒரு முறை அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் உடம்பைச் சூடேற்றியது. அவள் அவனை நிச்சயம் அடையாளம் கண்டு விடுவாள். இணங்கியும் வரமாட்டாள். பழி வாங்குவாள் என்ற பயம் இருந்தது.

இவளைப்போல் எத்தனை அழகிகளை அனுபவிக்கலாம். இவளா வேண்டும்?...... என்றாலும் அவளை ஒருமுறை...

அந்த இரகசிய அறைக்கு வந்தான். மைக், றொப் எனப் பெயர் பொறிக்கப் பட்ட இரண்டு இரும்புப் டியை இறுகப் பூட்டினான். சாவிகளோடு வெளியேறி அறையை இறுகப் பூட்டினான். அப்படியோர் அறை இருப்பது யாருக்கும் தெரியாது.

விடிந்ததும் வங்கிக்குப் போகவேண்டும். போதிய பணம் கையில் இருந்தது. ட்றைவிங் லைசென்சை எடுத்துப் பார்த்தான். 'மைக் பிராங்' எல்லாம் சரியாக இருந்தது. அந்தக் கறுத்த ஆடைகள் இல்லாமல் அவனைக் களத்தில் யாரும் எளிதில் அடையாளம் காணமுடியாது. கறுப்பு நிறத்தையே துறந்தான். கறுப்புக்கண்ணாடியைக் கழற்றித் தூர வீசி விட்டான்.

போய்ப் பெட்டிகளை ஒவ்வொன்றாகத் திறந்தான். உள்ளே மூடியின் உட்பக்கம் 'கரோல் — டானியல்' எனப் பொறித்திருந்தது. பெட்டியின் உள்ளே ஆயிரம் ஆயிரம் வெள்ளை ரோஜா மலர்கள்!

மைக்கின் நிலைமையைச் சொல்லவா வேண்டும்? ஒரு பூவைக் கண்டு கலங்கிய கலக்கம் தெரியாதா? இவ்வளவையும் கசக்கி எறிய முடியுமா? ஒரு பூவை எடுக்கப் பெட்டிக்குள் கையை விட்டான். முள் ஒன்று கையைக் குற்றி விட்டது.

பெட்டிகள். எதை உழைத்தாலும் சரிபாதியாகப்பிரித்து ஒவ்வொன்றுக்குள்ளும் போட்டிருந்தார்கள்.

இரண்டு பெட்டிகளையும் திறந்தான். டொலர் நோட்டுகளை அளைந்தான். எடுத்துச் சீராக அடுக்கினான். சுமார் ஒன்பது லட்சம் அமெரிக்க டொலர்கள் இருந்தன. நல்லவேளை றொப் இல்லை. இருந்திருந்தால் நாலரை லட்சம்தான் தேறி இருக்கும்?

பவுண் காசுகளும் தங்க பிஸ்கட்டுகளுமாக மூன்றரைக் கிலோ தேறும். இதைவிட

விடியல்இதமாக இருந்தது. வங்கிக்கு வந்தான். மனேஜரின் வரவேற்பு பிரமாதமாக இருந்தது. லொக்கரைப் பார்வையிட்டான். அளவு போதவில்லை. என்றாலும் பரவாயில்லை என நினைத்தான். இரண்டு லொக்கர்களைக்கேட்டால் சந்தேகம் வரக்கூடும் என விட்டுவிட்டான். திறப்புகளைப் பாரம் எடுத்தான். கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். அவசரப்படாமல் நிதானமாகச் செயற்பட வேண்டும்.

முதல்நாள் கையில் இருந்தவற்றை அதில் வைத்துப் பூட்டிவிட்டுப் புறப்பட்டான். பிளாற்றிற்கு வந்து ஆசைதீரக் குளித்தான். குடித்தான். ஆறுதலாக இருந்தது. என்றும் இல்லாத நிம்மதியாக உறக்கம் கண்களைத் தழுவியது.

விடிந்ததும் எழுந்தவன் மிகவும் உற்சாகமாக இருந்தான். முதலில் கொஞ்சம் நகைகளையும் வைரங்களையும் வங்கிக்கு எடுத்துப் போய் லொக்கரில் போட்டு விட்டு வரல் வேண்டும்.

இரகசிய அறைக்குள் இறங்கினான். கதவைத் தாழிட்டுக்கொண்டான். லைட்டைப் போட்டான். பல்ப் நடுங்கியது. இரும்புப் பெட்டியைத் திறக்கும் சமயம் பல்ப் நின்றுவிட்டது. புதிய பல்ப் கைவசம் இல்லை. கும்மிருட்டு சூழ்ந்து கொண்டது.

பெட்டியைத் திறந்தான். உள்ளே கையை விட்டான். எதுவும் தட்டுப்படவில்லை. துளாவினான். அதே மென்மையான ஸ்பரிசம். வெடுக்கென்று கையை இழுத்தான். றோசாமுள் கையில் தைத்துவிட்டது. கை கடுத்தது.

பெட்டிக்குள் இருந்த எல்லாம் எங்கே? டொலர் கட்டுக்கள்? வைரங்கள்? தங்கம்? இவ்வளவுக்கும் பதிலாக றோஜா மலரும் முள்ளுமா? இது யார் வேலை?

கரோல்! கரோல்! இனி நீ தப்பவே முடியாது. உனது வைரங்களை நீயே எடுத்துப் போய்விட்டாயா? எனது



வெடுக்கென்று கையை இழுத்தான். றொப்பிடம் ஓடினான். அங்கே றொப்பின் நாடித்துடிப்பு அடங்கி இருந்தது. திகைத்தான். திணறினான்.

★ ★ ★

பண்ணையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த வேளை மைக்கிற்கு ஆறுதலாகவும் இருந்தது. ஏக்கம் கலக்கமாகவும் இருந்தது. இனிப் பண்ணைப் பக்கமே போகக் கூடாது. றொப்பைப்புதைத்து ஆயிற்று.

யாராவது ஒருத்தியைக்கட்டிக்கொண்டு கௌரவமாக வாழ வேண்டும் என மனதும் உடம்பும் துடித்தன. இனி அலைந்து சீவியம் நடத்தக் கூடாது.

கற்பனைகள் காற்றோடு கலக்க கார் காற்றைக் கிழித்துக் கொண்டு பயணம் செய்

வைரங்கள் ஜொலித்தன. போதும், ஆயுள் முழுவதும் போதும் என நினைத்தான். ஆனால் கரோலின் சொத்துக்களோடு பார்க்கையில் இது எந்த மூலைக்கு.

ஏதோ ஓசைகேட்டுக் கலங்கினான். லைட்டை நிறுத்தி விட்டு வெளியே வந்தான். வாசற் கதவைப் பூட்டாமலே தான் இரும்புப்பெட்டிகளைத் திறந்துவைத்தது தெரிய வந்தது. நல்லவேளையாகயாரும் கண்டிருக்க வாய்ப்பு இல்லை என உணர்ந்தான். சுற்றாடலை ஆராய்ந்தான். மயக்கம் வந்தது. எவ்வளவு நேரம் என்பது தெரியாது. தெளிந்ததும் தான் மீண்டும் அறைக்குத் திரும்பினான். யாரோ தொடர்வது போலஇருந்தது. திரும்பிப்பார்த்தான். பிரமை. அவனது [illegible] தெரிந்தது. அறைக்குள் வந்தான். பெட்

உழைப்பு முழுவதையும் கூடவே கொண்டு...விழிகள் இருட்டின...

★ ★ ★

பண்ணைக்கு மலர்களை அனுப்பிய கரோல் வாகனம் திரும்பி வந்ததும் விசாரித்தாள். பண்ணைக்காரியின் முகம் மைக் அங்கு நிற்பதையும் றொப்பின் நிலை மோசமாக இருப்பதையும் காட்டி

நின்றது. அவள் தவிப்பும், ட்றைவர் துல்லியமாக கேள்விகளைக் கேட்கவும் அவள் தவித்ததும் விவரம் சொல்லிற்று. ட்றைவர் வந்து விவரம் சொன்னான் கரோலிடம்.

வீதியோரம் காட்டருகே காத்திருந்தாள் கரோல். இரண்டாம் நாள் மைக்கின் கார் ஆடி அசைந்து வந்தது. பிரதான சாலையில் இணைந்ததும் ஓட்டம் சூடு பிடித்தது.

இவள் ஜோர்ஜின் காரில் வந்திருந்தாள். கண்ணுக்கு எட்டிய மட்டும் தொலைவில் — இடையில் பல வாகனங்கள் தொடர — அவனைத் தொடர்ந்தாள். அவனது பிளாட் வரை வந்ததும் காரைத் தொலைவில் நிறுத்தி விட்டு நடந்தும் ஓடியும் வந்தாள். அவனது லிப்ட் 'பி' மேலே எழும்பிவிட்டது.

இவள் இன்டிக்கேற்றரை அவதானித்தாள். அது மாடிகளை மாற்றி மாற்றி இலக்கங்களை எறிந்து கொண்டிருந்தது. 1. 2. 3...14. 15 இல் தரித்து நின்று மீண்டும் புறப்பட்டது.

இவள் 'ஏ' லிப்ட் பிடித்து 15 இல் வந்து இறங்கினாள். நேரம் இரவு 11 ஐக் காட்டியது. காவலாளியிடம் 15 இல் வந்து இறங்கிய தனது நண்பனின் அறை — விடுதி — இலக்கம் கேட்டாள்.

''யாரது மைக்கா?'' என்றான் அவன்.

**- மு. சிவநேசன் -**

''ஆமாம்.''

''40 பி'' என்றான்அவன்.

''தாங்ஸ்'' என்றுவிட்டுத் துரத்தினாள்.

''40 பீ''

கதவைத் தொட்டாள். திறந்துகொண்டது. உள்ளே எட்டிப் பார்த்தாள். பாத்ரூமில் சள சளவென சத்தம் கேட்டது. மைக் சிறுநீர் கழிக்கிறான். நெடி வயிற்றைக் குமட்டியது. பாத்ரூம் கதவு பாதி திறந்து இருந்தது. அவன் முதுகு தெரிந்தது.

இதமாக விரிக்கப்பட்டு இருந்த கட்டிலின் கீழே புகுந்துகொண்டாள். தரையைத் தொடும்படி தொங்கும் படுக்கை விரிப்பு வாய்ப்பாக இருந்தது.

நீண்டநேரமாக சிறுநீர் கழித்தான் மைக். நெடி தாங்க முடியவில்லை. மாதக் கணக்கில் கழிக்காமல் பிளாடர் நிரம்பி இருந்தது போல இருந்தது.

ஒருவாறு திரும்பி சிப்பை பூட்டாமலே வந்தான். கொஞ்சம் உணர்ச்சி கிளம்பி இருந்தது. அவளுக்கு எரிச்சல்தான் வந்தது. கையில் மயக்க மருந்து ஸ்பிறேயை தயாராக வைத்துக்கொண்டாள்.

வந்தவன் போய் வாசல் கதவை உள்ளே பூட்டினான். கட்டிலில் வந்து தொம்மென்று விழுந்தான். ஆடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றினான். தனது உடல் வனப்பையும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் கட்டில் எதிரே கண்ணாடியில் ரசித்தான். கீழே இருந்த கரோல்கூட கண்ணாடியில் அவனைக் கண்டாள்.

''கரோல் ஐ லவ் யூ!'' திரும்பத் திரும்பச் சொல்லியவாறு தன்னையே தட

விறுவிறுப்பூட்டும் மர்மத் தொடர்

விக் கொடுத்தான். அவளுக்கு சிரிப்புத்தான் வந்தது. அடக்கிக் கொண்டாள். தனிமையிலே தவிக்கும் இவனுமா என்னை நினைக்கிறான்? இப்படியும் ஓர் ஆசை. ஆகட்டும். இன்று பார்க்கலாம்.

எழுந்தான். பாத்ரூமுக்குப் பக்கத்துச் சுவரில் கண்ணாடியைக் கழற்றி எடுத்து அரு

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மௌன மொழி -15




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.

அமைதி இதுவென
மயங்கி விடாதே!
கலசத்துக்குரிய தலையும்
கருவிக்குரிய கையும்
இருக்கிறதெங்கோ
மறைவாக!

— ந. சத்தியபாலன் —

★ ★ ★

துப்பாக்கிக் கலாசாரத்திற்குள்
நீ தூங்கும் வரை
துர்ப்பாக்கியமே எமது கலாசாரம்!

— வீ. சாயி —

★ ★ ★

வேதனை போக்கும்
சமாதானத் தேவதையே!
கண்ணிற் படாத
கண்ணிகளுண்டு
மண்ணி லென்பதை(க்)
கண்டு கொண்டாய்!
சிக்கித் தவிப்பதை
இன்றுடன் தவிர்த்து விடு!
சிக்கலைத் தீர்க்கவே
வழி காட்டி விடு!

— க. நாகராசா —

★ ★ ★

உயிரற்ற துப்பாக்கிச் சனியனும்
உறைக் குல்லாவும் போல — வெண்
புறாவே நீயும் உயிரில்லா
(சமாதான) பொம்மை தானோ?...

— மிதிலா —

சொல்லிலும் செயலிலும்
சோர்வின்றிப் பொய்யுரைக்கும்
''நல்லெண்ணம்'' கொண்ட பலர்
நடமாடும் இந்நாட்டில் — இந்த
வெள்ளைப் புறாவுமொரு வேடப் புறாவோ?

— அனலையூர்ச் சேர்ந்தன் —

மானிடனே!
சமாதானம் வேண்டுமென்று
சத்தியாக்கிரகமே செய்தாலும்
தடுப்பதற்கு இவையிங்கே
தடையாகவுள்ளபோது
சத்தியமாய் நான் வருதல்
சாத்தியமாகாது!

— வ. மோகன்ராஜ் —
ஈச்சமோட்டை.

★ ★ ★

வஞ்சனை அறியாய்;
வாழ்வின் வனப்பறிவாய்;
ரசமுணர்வாய்;
ஒரு பாறை என
மரக்கிளை என
இதனையுமெண்ணி
அமர்ந்தாயா......?
எச்சரிக்கை!!
தன்னினக் கொல்லி விலங்கின்
கவசமும் கருவியுமிவை!
எழுந்துபோ
அப்பாலே
இவற்றின் நெடி கூட
வேண்டாமுனக்கு!

— இன்முகன் —

★ ★ ★

பட்சியே!
காலம் வீணாய் கழிகின்றதே?
குதித்துப் பாய உனக்கும் தடைகளா
ஆயுதங்களால்?

— புதுவையூர் கௌசல்யா —

★ ★ ★

சித்தார்த்தன் போதித்த சிறந்தவழி தமைமறந்து யுத்தத்தை வளர்க்கும் புத்தியில்லாப் புன்மையினர் தத்துவத்தில் மட்டுமே சமாதானப் புறாக்களைச் சித்திரித்து மற்று அதன் சிறகினை ஒடித்துவிட்டார்!

— சங்குவேலி நாகபூசணி —

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்



ஏய்!
முட்டாள் பட்சியே!
போதிமரத்தில் அமர்ந்த
போதும் — சிறகுதள்
அரியப்பட்டதனை
மறந்தாயா?

— கோகுலராகவன் —

★ ★ ★

வெஞ்சமர் ஓய்ந்திடுமோ
வெறியாட்டமெல்லாம் போயிடுமோ
வெறுப்புணர்வு யாவும் நீங்கிடுமோ
வெண்புறாவே நீ தான் உரை?

— கே. அரசேஸ்வரன் —

சுடுகுழலில் புல் முளைக்க
சட்டித் தொப்பிக்குள் வெண்புறா
கூடுகட்ட நாமிங்கு சுதந்திரமாய்
கூடிக் குலவும் நாள் எந்நாளோ?

— த. அனா —
மட்டுவில்.

★ ★ ★

அடையாள அட்டையினை
எடுத்துவர மறந்தேன்!
ஊரடங்கு வேளையில்
உல்லாசமாய்ப் பறந்தேன்!
அதனால்
தடுப்புக் காவலில்
தவித்துக் கொண்டிருந்தேன்!

— இ. ஸ்ரீநிதி —

★ ★ ★

சட்டித் தொப்பிக்குள்ளே
சமாதானம்!
அடைகாக்கிறது
அமைதிப்புறா!

— என். ரீ. மிலன் —
சண்டிலிப்பாய்.

★ ★ ★

மரணக் குருவியின்
மடியில்
மனிதம் தேடுகிறாயா
மணிப்புறாவே?

— க. விஜிதா —
அச்சுவேலி.

★ ★ ★

கொஞ்சம் பொறு!
ஓர் இனம்
அழிந்தபின்
உல்லாசமாய் பறக்கலாம்!

— ஆ. முகுந்தன் —

வானில் ஒருதரம்
வட்டமடிக்க
அனுமதிக்காக
காத்திருக்கிறேன்!

— தம்பி —

சண்டாளர்களிடம்
சமாதானம் பேசி
சலித்துப் போய்
சமாதானப் புறாகூட
சத்தியப்பிரமாணம்
எடுக்கிறதா
சண்டித்தனம் செய்ய?

— ப. அகிலநாயகி —
மீசாலை.

★ ★ ★

தொப்பிக்குள்
குஞ்சுகள்;
துப்பாக்கி முனையில்.
இது,
மீட்புக்காய்
நான் செய்யும்
தவம்!

— சுடாலையண்டி —

★ ★ ★

இரும்புத் தொப்பிக்குள்
முட்டையிட்டு
துப்பாக்கியை (க்)
காவலிருத்தி
காத்திருக்கிறது
சமாதானப் பறவை (?)

— சைதன்யன் —

★ ★ ★

துப்பாக்கிகளையும்
பீரங்கிகளையும் விட
வெண்புறாவே
நீதான் அதிநவீன ஆயுதம்!

— சி. மதி —

இரும்புத் தொப்பி,
ஏந்த ஒரு துப்பாக்கி,
இது போதும்
எனக்கு!
அமைதி பரப்ப!!

நா. இராஜமனோகரன்

இரை தேடவந்து
இளைப்பாறுகின்றாயா?
இருக்குமுன்
இருமுறை யோசி!
இருந்த இடம் தெரியாமல்
இரையாகி விடுவாய்!

— பொன். வாகி —
கோப்பாய்.

★ ★ ★

சிறகுடைத்த
சிறுபுறா போலும்
விவரமறியாமல்
விபரீதத்தின் தலையில்...!

— [illegible] —
கந்தரோடை.

★ ★ ★

இறப்பு என்பது
மனிதனுக்கு மட்டுமா?
சமாதானத்தின் சின்னம்
சர்ச்சைப்படுகிறது......
புத்திசாலி மனிதன்
எத்தனையோ
புதைகுழிக்குள்......!
ஆயுதங்கள் மட்டுமேன்
மீண்டும் மீண்டும் —
ஆர்ப்பரிக்கின்றன?

— மானியூர் ரட்ணேஸ் —

★ ★ ★

சாவாயுதங்களின் பிடியில்
ஒரு சமாதானப் புறா!
அட! இதுதான்
'சமாதானத்துக்கான
யுத்தத்தின்'
புத்தம் புதிய
இலச்சினையோ?

— த. பிரபாகரன் —
சுழிபுரம்.

★ ★ ★

துப்பாக்கியையும்
தொப்பியையும்
அடைகாத்து
யுத்தத்தை
பிரசவிக்கிறது
சமாதானப்புறா!

— ப. செல்வகுமார் —

★ ★ ★

புறாவே
இப்போ பற!
ஆயுதங்கள்
நிராயுதங்களாக
நிற்கின்றன.

— மெமோறியல் ரட்டி —

★ ★ ★

துப்பாக்கித் தரைமீது
சிப்பாயின் தொப்பிமேல்
அப்பாவிப் பெண்புறா
தப்பான தாளத்தில்
ஒப்பாரி ராகத்தில் பாடுவது
இத்தரையின் —
சத்தான 'சமாதான கீதம்'

— ராணி. கனகராசா —

நாட்டினில் சமாதானம் நாட்டிடவே நாமின்று
வேட்டுகள் விதைக்கிறோம் வீணன்று— கூட்டாய்
வெண்புறா அனுப்பிநீர் வேண்டுதல் செய்தாலும்
கண்டிடோம் அதையினிக் கலை!

— செ. சுதாகரன் —
மட்டுவில் வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

## [02 - 01 - 1999 முதல் 08 - 01 - 1999 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வி | இராசிச் சக்கரம் | | ரா |
| வெ கே | | | |
| சூ புத | | | செ சந் |

மாற்றம்:

உத்தரம்—கன்னி இராசியில் சந்திரன் நிற்கும்.

*எமது நாட்டில் அரசியலில் முடிவில்லாத நிலை. ஐ. நா யுத்தத்தை நடத்த, சமாதானப் பிரியர்களை அனுப்பும் படலம் உலகெங்கும் உருவாகும் காலமாகும். 'பையன் குழப்படி; அடித்து அணைக்கிறேன்' என ஐ. நா சொல்லும் காலமுமாகும். சமாதானத்தை நிலைநாட்ட யுத்தம் அவசியமா? என மக்கள் கேட்கும் காலமாகும். இந்தியாவில் அரசியலில் தளம்பல் நிலை. 'என்னைவிடு. நான் தொல்லை தரமாட்டேன்' என எதிர்க் கட்சியைப் பார்த்து அரசு கேட்க நேரிடும். தமிழ் நாட்டில் செல்வி ஜெயலலிதாவின் கேள்விகளுக்குப் பயந்து பல நல்ல முன்னேற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கும் காலமாகும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

மேடம்: பல கசப்பான அனுபவங்கள்தான் மனிதர்களைப் பக்குவப்படுத்தும். உங்களைப் பொறுத்தமட்டில் இந்த விஷயங்கள் புதியதல்ல. தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி படபடப்புத் தன்மை ஏற்பட்டாலும் சமாளித்துக் கொள்வீர்கள். வயிற்றுக் கோளாறு, சளித்தொல்லை, மனச்சஞ்சலம், கைகால்வலி என மாறிமாறிக் கொடுக்கும். சத்துராதிகளின் மறைமுக வஞ்சனைகளை செவ்வாய்க் கிரகம் தேடித்தரும். கோப வார்த்தைகளை அள்ளி வீசியபடி இருப்பீர்கள். சனீஸ்வரனின் தாக்கச்சாயல் அடிக்கடி மனதில் ஒருவித பயப்பாட்டைத் தரும். 'துணைக்குப்போனாலும் பிணைக்குப் போகாதீர்கள்'.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

இடபம்: கெட்ட காலம் வந்தால் குடி பட்டமரமாகிவிடுமே எனப் பயப்படாமல் இருக்கமுடியுமா? சோதனை தரும் சனீஸ்வரனின் பார்வையால் பல வேதனைகள் ஓடி வந்தாலும் உண்மைக்கும், உழைப்பிற்கும் நீதி வழங்கும் பல யோசனைகளை— உங்கள் கருத்துக்களை பலருக்குச் சொல்லி வருவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உங்களிலும் தரம் குறைந்த நிலையிலுள்ளவர்களால் தூற்றப் படுவீர்கள். எதிர்ப்பாலாருடன் அடிக்கடி வாக்குவாதப்பட இடம் உண்டு. நெஞ்சுவலி, நரம்புச்சோர்வு, நாரிநோ, சல—மல உபாதைகள் என வருத்த இடமுண்டு. மனப்போராட்டம்தீர ஆண்டவன் சந்நிதானம சென்று அமைதி தேடுவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

மிதுனம்: உங்கள் புத்தியால் மின்னல் வேகத்தில் பல அலுவல்களைச்செயற்படுத்துவீர்கள். பணத்தால் மட்டும் எல்லா அலுவல்களும் நடக்குமா? படிப்பும், பண்பான செயற்பாடுகளும் இருந்தால் அவன் நல் எண்ணத்தால் பலர் வாழமுடியும். அதற்காக பல இடங்களுக்கு மாறிமாறி ஓடிச் சுழன்றபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஆளைக் காணமுடியாமல் குறைப்படுவார்கள். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கள் இருக்கும். சளி, உஷ்ணபீடைகள், கைகால் வாதஉளைவு, மலச்சிக்கல், தலையிடி, காய்ச்சல் என வர இடம் உண்டு. ஓய்வு அவசியம்,

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

கடகம்: காதல் கிரகமான வெள்ளி, போகக் கிரகமான இராகுவை ஞானப் பார்வை பார்க்கிற நிலை. நேற்றுவரை நெஞ்சில் நிலை நிறுத்திய எண்ணம், நிலை மாறித் தடுமாறச் செய்யும். எண்ணத்தால் எத்தனை இதயங்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் போகின்றன என்பது நீங்கள் நடந்து வந்த பாதையில் வெளிச்சம் காட்டியபடி இருக்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் நண்பர்களால் பெரிதுபடுத்தப் படும். அரசியல் பேசி அயலவர்களைப் பகைக்காதீர்கள். உலகத்தின் சாயலுக்கு நாம் நடந்து செல்லவேண்டும். சளித்தொல்லை. காய்ச்சல், தலை அம்மல், நாரிநோ, சலமல உபாதைகள் சிலரை வருத்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வெள்ளி.

சிங்கம்: தாய்மையும், பாசமும் கொண்டு பிறருக்கு உதவும் உங்களைக் குறைகுற்றம் சொல்லிக் கொண்டிருக்கும் ஒருசிலர் வேதனைப்படுத்தலாம். ஆனால் உங்கள் இலட்சியப் போக்கை நிறுத்த முடியாது. குரு பார்வையால் பல புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள். பொருள் சிறப்பு வரும். நல்லவர்கள், பெரியவர்களின் நட்பாலும் உதவிகளாலும் பல நன்மைகள் கிடைக்கும். சகோதரங்கள், பிள்ளைகளுக்காக பலவித சிந்தனை, இடைவிடாத அலைச்சல்கள் ஏற்பட்டபடி இருக்கும். நெஞ்சுவலி, வயிற்றுநோ, உஷ்ணபீடைகள், கண் மங்கல், களைப்பு, சலவருத்தங்கள் என்பன அடிக்கடி தேடிவரும். ஓய்வு முக்கியம்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

கன்னி: எத்தனை உள்ளங்கள் உலகத்தில்? எத்தனை உருவங்கள் உலகத்தில்? கொடிகட்டிப் பறந்தவர் கோடிப்பக்கத்துக்குப் போய்விட்டால் மதிகெட்ட சிலர் நாவசைத்துத் தூற்றிடுவர். உங்கள் நிலையை விதிபட்ட சனீஸ்வரன் விதைக்கின்ற காலம். கதி கலங்காமல் தொழில் ஸ்தானத்தில் ஊன்றியே நின்றிடுவீர்கள். உற்றவரும் பெற்றவரும், உரிமைக்கு வந்தவரும் உங்கள் உருவங்களைச் சொல்ல வந்தவர்களும் உண்மை எது, பொய்மை எது எனத் தடுமாறிக் கலங்கிடுவர். சளித்தொல்லை, மூலச்சூடு, கைகால் வலி, காயம், அடிபிடியால் உடல் தடிப்பு, சல, மல, மூல வருத்தங்கள் சிலரை வருத்தலாம். தகுந்த வைத்தியம் நன்மை தரும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வெள்ளி.

துலாம்: நல்லவன் வாழ்வான். அவன் எண்ணத்தால் பல காரியங்கள் நடக்கும் என்பதற்கு உதாரணமாக எல்லோரும் உங்களைப் பார்க்கிறார்கள். குருபார்வை கோடி நன்மைகளைத் தரும் காலமாகும். தேடிவரும் பணமொன்று நாடிவரும் பொழுது நன்மைகள் பல விளையும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் பல அதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். சக ஊழியர்கள் சமாதானம் பேசி, நன்மை—தீமைகளை மாறி மாறிச் செய்வார்கள். பெரியவர்களின் ஆசீர்வாதம் உங்களைக் காத்துநிற்கும். வாய்வுத் தொல்லை, விறைப்பு, வாதப்பிடிப்பு, தோல் வருத்தம் என வைத்தியம் செய்ய வேண்டி வரலாம். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன்.

விருச்சிகம்: சட்டம் பல பேசி சரித்திரம் படைத்த பலர் உங்கள் இராசியில் பிறந்து புகழ்பெற்றுள்ளார்கள். சாமியும் நீங்கள்தான்; ஆசாமியும் நீங்கள்தான். அடித்து அணைக்கும் காலமாகும். எதையும் உணர்வு பூர்வமான சிந்தனைகளால் நோக்கிச் செயற்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் கலகலப்பு இருக்கும். அடிக்கடி ஏதாவது விஷயமாக ஓடியாடித் திரிவீர்கள். பொருள் விஷயங்களால் மனக்குழப்பங்கள் வரலாம். பொருள் களவு போகலாம். நெஞ்சுநோ, கிருமித்தாக்கம், சளித்தொல்லை, விபத்துக்கள், உஷ்ணபீடைகள் என்பனவற்றால் வருந்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.

## சோதிட சஞ்சீவி

## மகாதேவா ஜோதிடம்

தனுசு: ஒழிவு மறைவற்ற பேச்சு, பல உபத்திரவங்களையும் தடைதாமதங்களையும் தந்துவிடும். 'நான் யாருக்கும் பயப்படவில்லை. நீதி, நியாயப்படிதானே நான் நடக்கின்றேன்?' என அடிக்கடி சொல்லியபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பல புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். புத்திநாதன் புதன், சத்திநாதன் சூரியன் உதயத்தில் இருந்து பற்பல காரியங்கள் செய்யப் பலன்தரும் காலமாகும். உஷ்ணபீடைகள், இடுப்புவலி, ஈரல் வியாதி, சலவருத்தம், உணர்ச்சி உறுப்புக்களில் வருத்தம் என்பன தேடி வந்து தொல்லை தரும். வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்; புதன்.

மகரம்: உலகம் செய்யாததை — சொல்லாததையா நான் சொல்லுகின்றேன்? நேர்ப்பாதையில் செல்லும் பொழுது எத்தனை சோதனை வருகின்றது? மெல்ல மெல்ல கருமமாற்றுங்கள். அதனால் நல்லது கெட்டதை நாலு பேர் சொல்லா விட்டாலும், தெரியாமல் விடாது அல்லவா? தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாரால் அவதிகள் ஏற்படலாம். ஆயினும் போராடாமல் இருக்க முடியுமா? எதற்கும் அமைதி

(XX ஆம் பக்கம் பார்க்க)

## முதற்பாடம்....

(VI ஆம் பக்கத் தொடர்)

குளிர்பானம் தந்த குளுகுளுப்பில் தாமண்ணையின் மூளை வெகு நிதானமாய் வேலை ஆரம்பித்தது.

''மதுரலிங்கர் இப்போதைக்கு வர ஏலாது. அந்தப் பயணம் அப்படியானது... தம்பிக்கு எஸ். சீ. ஓ. வேலாயுதற்றை மச்சான் கோபால பிள்ளையைத் தெரியுமே...? தம்பிக்கும் தெரியாமல் போகாது. அவர் இப்ப ஒரு மாதமாய் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலை சுகமில்லாமல் படுத்திருக்கிறாராம்... ஒருக்கால் பாப்பமெண்டால்... வெறுங்கையோடை எப்படிப் போறது? ஒரு ஹோர்லிக்ஸை அதை இதை வாங்கப் போனால் 100 ரூபா போதாது. ஒரு கிறீம் கிறாகர் பிஸ்கற் பைக்கற் எண்டாலும் வாங்கலாமெண்டால்... இந்த அறுந்துபோன மறதி... காசை விட்டிட்டு வந்திட்டன். அதுவும் கோபாலபிள்ளையை... வெறுங்கையாய்... சாய்க்...

''அதுக்கென்னண்ணை கிறீம் கிறாக்கர் வாங்குவம்.''

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பார்க்கக் காத்திருக்கும் கூட்டத்தில் நாங்களும் இருவர். பிஸ்கற் நொறுங்காமல் தாமரின் கட்கத்தில் பாதுகாப்பாயிருந்தது.

'செக்கிங்' முடிந்ததும் வார்ட்டுகள் பலவற்றுக்கும் சனக்கூட்டம் பரபரப்பாகச் சென்றது.

ஊகமாய் ஒரு வார்ட்டை அடைந்ததும் தாமண்ணை கண்களால் ஒரு துழாவல் துழாவி, கட்டிலொன்றில் உட்கார்ந்திருந்த நபர் ஒருவரின் அருகே சென்று, பற்கள் தெரிய ஒரு சிரிப்புடன் நின்றார். அந்த நோயாளி நபருக்கோ தாமண்ணையை யாரென்று புரியவில்லை என்பது அவரது பார்வையிலேயே தெரிந்தது.

'இவர் கோபாலபிள்ளை தானோ? அல்லது...' என்று எனக்குள் ஒரு சந்தேகம்.

''நீங்கள் சுமமில்லாமல் இங்கை இருக்கிறியள் எண்டு கேள்விப்பட்டன். வந்து பார்ப்பமெண்டால் இண்டைக்குத்தான் நேரம் கிடைச்சுது.''

''நீங்கள்ள்ள்...'' என்று ஒரு 'ள்' இழுவையில், இவரை யாரென்று நாசூக்காக அறிய முயற்சித்தார் அந்த நோயாளி நபர்.

''நீங்கள் எங்கடை எஸ். சீ. ஓ. வேலாயுத தண்ணையின்ரை மச்சான் கோபாலபிள்ளையெல்லே... இதென்ன உங்களுக்கு என்னைத் தெரியேல்லையெண்டால்... நான்தான் மயில்வாகனத்தின்ரை மச்சான் தாமு...ம்... இவர் ஆர் தம்பியெண்டு பாக்கிறியள் இவரை உங்களுக்குத் தெரியாது. நான் ஆஸ்பத்திரிக்கு உங்களைப் பார்க்கப் போறேன் எண்டாப்போலை தம்பியும் ஒரு அலுவலாய் என்னோடை வந்திட்டார்.''

கோபலபிள்ளைக்கு எங்கள் இருவரில் யாரையுமே தெரியவில்லை. இருந்தாலும் மரியாதைக்காக ஒரு சிரிப்பைப் படர விட்டார்.

''வருத்தத்தைப்பற்றி டொக்டர்மார் என்ன சொல்லுகினம்? ஏதோ நீங்கள் கெதியாய்ச் சுகப்பட்டு வீடு திரும்ப வேணும். உங்கடை குணத்துக்கு, செந்தில் வாழ் செல்வக்குமரன், அந்தச் செந்தூர் முருகன் உங்களைக் கைவிடான்... நீங்கள் சுகப்பட்ட பிறகு வேலாயுதண்ணையிட்டை எனக்கு ஒரு காரியம் செய்து தர வேணும். நான் கதைச்சுப் பார்த்தனான். சரிவரயில்லை. தன்ரை மகளுக்காக உங்கடை மகனிலை அவருக்கு ஒரு கண். ஆனபடியால் நீங்கள் என்ன சொன்னாலும் கேட்பார்.''

தாமர் சொல்லச் சொல்ல கோபாலரின் முகத்தில் எள்ளு கொள்ளு, உழுந்து, பயறு எல்லாமே வெடிப்பது போலிருந்தது.

''நீரென்ன வருத்தம் பார்க்க வந்தனீரோ... அந்த ராஸ்கல் வேலாயுதனைப் பற்றிக் கதைக்க வந்தனீரோ?''

மேற்கொண்டு மூச்சுப் பேச்சில்லாமல் தாமண்ணை வார்ட்டை விட்டு வெளியேற நானும் அவர் முதுகைப் பார்த்தபடி பின் தொடர்ந்தேன்.

''தம்பி, உவருக்கு என்ன வருத்தமெண்டு முந்தி எனக்குத் தெரியாது. இப்பதான் தெரியுது.. மூலக்கொதியாய் இருக்க வேணும்.''

''இருக்கும்... அது சரி தாமண்ணை பிஸ்கற் குடுக்க மறந்திட்டியள்.''

''மறதியில்லை தம்பி. உவனுக்குக் குடுத்துப் பிரயோசனமில்லை... என்ரை இளையவளுக்கு இது நல்ல விருப்பம்.''

வெளியே வந்தபோது வெயில் வறுத்தெடுத்தது.

''தம்பியின்ரை முகத்திலை பசிக்களை தெரியுது. எனக்கும் பசி வயிற்றை விறாண்டுது. நான் வெள்ளி, விரதந்தான். வீட்டை விட்டு வந்திட்டால் வெள்ளி, சனி எண்டு பாக்கிறதில்லை...... தம்பி விரதமே?''

''விரதமெண்டு இல்லை. வெள்ளிக்கிழமை மாமிசம் இல்லை.''

''தம்பி இனி வெளிநாடு போய்விட்டால் மச்சம், சைவம் எண்டு பாக்க முடியுமே? திறமான ஒரு சாப்பாட்டுக்கடை இருக்கு. நல்ல மீன் பொரியல் போடுவான். நண்டுக்கறி, இறால் பொரியலும் இருக்கு. முதல் சாப்பாட்டை முடிச்சுக் கொண்டு அலுவலைப் பாப்பம்.''

பீடா, பிறிஸ்ரலுடன் மத்தியானச் சாப்பாடு பூர்த்தியானது.

தாமண்ணையின் மூளை, வேலை தொடங்கியது. அடுத்து நேரப் போகும் 'விபத்தை' ஊகிக்க நான் முயற்சித்தேன்.

''பொடியன் சொன்ன 'சாய்ந்திரம்' ஆகிறதுக்கு கனக்க நேரம் இருக்கு தம்பி... சும்மா போய் எங்கை நிக்கிறது? சாப்பிட்ட களை தீர ஆறுதலாய் இருக்க வேணும். இப்ப ஒண்டு செய்வம்... போற வழியிலை இருக்கிற தியேட்டரிலை புதுப் படம் ஒண்டு ஓடுது. இந்தியாவிலை 100 நாள் ஓடின படம் எண்டு கேள்வி. அதைப் பாத்திட்டு வெளிக்கிட நேரமும் கணக்காய் வரும். எல்லாத்துக்கும் தோது... என்ன யோசிக்கிறாய்?''

''ஒண்டுமில்லையண்ணை. படத்தைப் பாப்பம்.''

இரண்டு ஓ. டி. சி. வாங்கி உள்ளே நுழைய படமும் தொடங்கியது. வெள்ளித் திரையில் சரத்குமார் தேவயானியை துரத்திக் கொண்டிருந்தார். எனது மனத் திரையில் தாமண்ணைதான் 'அவார்ட்டு'க்குரிய சிறந்த நடிகராய்த் தெரிந்தார்.

படம் முடிந்து வெளியே வந்தோம். நேரத்தைப் பார்த்தேன்; கடைசி பஸ் புறப்பட அரை மணிதான் இருந்தது.

''அண்ணை வாருங்கோ ரீ குடிப்பம்.''

''அதுக்கென்ன தம்பி, உன்ரை விருப்பத்துக்கு நான் என்ன மறுப்பே?''

தேநீர் குடித்து வெளியே வந்ததும், மேற்கொண்டு நடக்க வேண்டிய அலுவலைத் தீர்மானிக்கும் பொறுப்பை மனதில் நான் எடுத்துக் கொண்டேன்.

''வாருங்கோ! கடைசி பஸ்ஸுக்கு 15 நிமிஷந்தான் இருக்கு.'' என்று சொல்லி பஸ் நிலையம் நோக்கி எட்டி நடைபோட்டேன். கட்கத்தில் பிஸ்கற்றுடன் தாமண்ணை என்னைப் பின் தொடர ஆரம்பித்தார். எனது புத்தகப் படிப்பை இவ்வளவில் முடித்து, உலகத்தைப் படிக்க ஆரம்பித்துள்ளமை எனக்குப் புரிந்தது. முதலாம் பாடமே போதியதாய் அமைந்தது.

[யாவும் கற்பனை]

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவழி காட்டிடு புத்தாண்டே

புத்தம் புது பூமி வேண்டும்—நாம்
புன்னகை பூத்திட வேண்டும்
நித்தம் சமாதானம் வேண்டும்—இந்த
நித்திலம் சாந்தி பெற வேண்டும்
புது வழி காட்டிடு புத்தாண்டே!

சிட்டுக்கள் போல் நாம்
பறந்திட வேண்டும்—என்றும்
சிங்கார சிரிப்பினிலே நாம்
எம்மை மறந்திட வேண்டும்
புது வழி காட்டிடு புத்தாண்டே!

துன்பம் பறந்தோட வேண்டும்—எங்கும்
துயரம் மறந்து வாழ்ந்திட வேண்டும்
பண்பாடு வளர்ந்திட வேண்டும்—நித்தம்
புரிந்துணர்வு புதிதாக வேண்டும்
புது வழி காட்டிடு புத்தாண்டே!

அன்பு எங்கும் நிறைந்திட வேண்டும்
அகில மெல்லாம் அதை பெற்றிட வேண்டும்
புது மலராய் நாம் வாழ்ந்திட வேண்டும்
புது வரவாய் புத்தாண்டு வந்திட வேண்டும்
புது வழி காட்டிடு புத்தா டே!

—பா வசீகரன்—

# பிறின்சிப்பல் பில்கிளிங்டன்

உலகப் பாடசாலையின்
உத்தியோகபூர்வ அதிபர் — பில்கிளின்டன்.
'பிரின்சிப்பல்' பில்கிளின்டனின்
அலுவலகம் மட்டுமே அமெரிக்காவில்!
எல்லா நாடுகளுமே
வகுப்பறைகள்; வறிய நாடுகளே
கல்லூரியின் கழிவறைகள்.
பாடசாலைப் பாட விதானத்தில்
ஆயுத வியாபாரமே
அடிப்படைக் கற்கை நெறி!
வியட்நாமில் மட்டுமே
வில்லங்கப் பரீட்சைகள்
விஷப்பரீட்சைகளாயின.
வகுப்பறை ஈராக்கில்
சதாம் பெரும் சண்டியன்; அடங்காப் பிடாரி.
பரீட்சைத் திணைக்களம் ஐ. நா.
அவனுக்கு
பலமுறை பயமுறுத்தல் தந்தது.
"அடியாமல் படியானென்று"
அதிபருக்கு அறிவித்தது; அதிர்ந்தார்
வாங்குக்குக் கீழ் விட்டு
வாட்டியெடுத்தார் அதிபர்.
ஒழுங்காற்று நடவடிக்கைக்காய்
ஒத்தூதின பிரிட்டனும் குவைத்தும்.
அடி நொந்து விட்டதாய்
அழுதழுது முரண்டு பிடித்தான்.
அன்னை போல் ரஷ்யா அரவணைத்தது.
எண்ணெய் தடவி
எரிகாயம் மாற்றிட
எழுந்தான் சதாம்!
அதிபருக்கு அடிகொடுக்க
அத்திவாரமிட்டான்; ஆத்திரம் கொப்பளிக்க
நிமிர்ந்து நின்றவனுக்கு
நேசக்கரம் யார் கொடுப்பார்?
அடுத்த பரீட்சைக்கும்
ஆயத்தம் நடக்கிறது.
தேறுவதும் — சதாம் தவறுவதும்
தெய்வபலன் ஆகுமன்றோ?

— ந. கிருஷ்ணா —

# வேம்பின் கீழ் ஞானம்

கீழ்வானத் திசையிலே கதிரவன் எழும்வேளை
கீதமொடு கீர்த்தனங்கள் பறவையினம் பாட
ஆழ்மனத்து அமைதியினை அகத்தினிலே கருதி
அருகிலுள்ள சோலையதை என்கால்கள் சேரும்.

நேற்றாங்கே ஈராக்கில் போராச்சு தென்று
நீள்விழிகள் நீர்சொரிய ரீவியதைப் பார்த்தேன்
காற்றிலும் விரைவான கணைகண்ட பின்னர்
கருகிவிழும் உடல்கண்டு மனஞ்சோக மாச்சு!

பூந்தென்றல் குளிர்பூசிப் புதுவிதமாய் வீச
புதுமையான காலையதன் புலர்வினையே ஒதுக்கி
வேந்தொன்றின் வடிவோடு விளங்கியதோர் வேம்பின்
வேரதிலே இருந்தபடி விழியினைநான் விரித்தேன்.

மொட்டொன்று பூவாகி மலர்வோடு ஆட
முன்னைநாள் பூவொன்று மண்ணோடு சாய
பட்டென்று பனித்துளியும் படரொளியில் சாக
படர்மஞ்சள் இலையுதிர்ந்து நிலந்தன்னில் வீழும்.

இயல்புஇது பூமலரல் இயல்புஇது உதிரல்
இங்கிதிலே நாமெண்ணி மாற்றங்கள் உண்டோ?
துயரான பூமியிலே போரியல்பு என்று
தேர்ந்துவிடின் நன்றுஎன ஞானமுண் டாச்சு!

ச. சாரங்கா.

# மறந்தது ஏன்?

வெள்ளிக்கடற்கரையிட்ட
மேகம்......
புள்ளியிட்டதாய்
நட்சத்திர வானம்......
பௌர்ணமி நிலவு......
என் விழிகளின்
பார்வை வலயத்தை
நானே வரையறுக்கிறேன்
இனிமைகளுக்கு விரியவும்
இழப்புக்களுக்கு மூடவும்
இமைகள் உண்டு.
ஆனால்......
மேகமாய் என்னைச்
சோகங்கள் சூழ்கையிலே
துயர நினைவுகளை
துரத்த முடியாது......
இறையவனைக் கேட்கிறேன்
"மனதிற்கு மட்டும்
இமை படைக்க
மறந்ததேன் தேவனே?"

— நிலாமகள் —

# புத்தனே புகலிடம் தேடு!

உந்தனது
புனித பூமி பூகம்பமாகிறது.
போதி மரமெல்லாம்
மோதி வெடிக்கிறது
'செல்'கள்.
புத்தனே புகலிடம் தேடு!

உந்தனது
திரிபீடகம் இன்று
தீயிட்டுக் கொளுத்தப்படுகிறது
போதனைகளெல்லாம்
பொசுக்கப்படுகின்றன
காட்டேறிகளால்.
புத்தனே புகலிடம் தேடு!

போர்த்திருக்கும்
காவியுடையுள் கைக்குண்டு
வீசுகின்ற சாமரமெல்லாம்
இனவாதக் காற்றாய்
இசைக்கின்றது.
புத்தனே புகலிடம் தேடு!

ஆமையைக் கூட
கொன்றிடா உன்
சாம்ராஜ்ஜியத்தில்
ஆட்களைக் கொன்று
அரசமைக்க ஆசைப்படும்
அடிவருடிகள்.
புத்தனே புகலிடம் தேடு!

முற்றும் துறந்த
உனக்கின்று முடிசூட்ட
முடிமட்டும் தாம் திறந்து
வெடிவைக்க அலைகின்றார்
சகோதரர்க்கு.
புத்தனே புகலிடம் தேடு!

நாளை
உன் சிலையே
கலையிழந்து
உலையிலே உருக்கப்பட்டு
தோற்றுவிப்பார்தோட்டாக்கள்.
புத்தனே புகலிடம் தேடு!

அரண்மனை விட்டு
ஆசைகள் துறந்து
சாந்தியை நாடிய
சத்தியனுனக்கு
அடியார்கள் இன்று
போர்க்கொடி செய்வார்.
புத்தனே புகலிடம் தேடு!

புசிப்பதற்கு
மனித இரத்தமும்
ரசிப்பதற்கு
உயிர்ப் பறிப்புகளும் செய்யும்
புழுதி படிந்த பூமிதனில்
புண்ணியனே நீ ஏன்?
புத்தனே புகலிடம் தேடு!

—ஆ. ஜென்சன்
றொனால்ட் —

# ஏனிந்த வாட்டமோ இங்கு?

வாவாநம் புத்தாண்டே! வந்தமர்ந்து ஆறிங்கே,
நாவால் 'நம'வென நாமிங்கு — சேவித்தோம்;
ஆவி குளிரும் அடைமழையோ டிங்கெமக்குக்
காவியெதும் வந்தீரோ காட்டு.

போவார் வருவார் பதியுமோர் டாப்பினிலே
பாவாயுந் நாமம் பதித்திடுவாய் — மேவாத
ஆண்டொன்றே நின்கடமை யானாலும் பாவைநீ
ஈண்டிங்கு வந்ததுமோர் தென்பு.

"வானும் பொழிந்துமது வாவிகள் தேங்கியும்
ஏனோதா! னிங்கோ ரெழிலில்லை! — மோனமொன்றே!
ஊனுடலு முள்ளமும் உச்சிவெயில் காய்ந்ததுபோல்
ஏனிந்த வாட்டமோ இங்கு!"

வாண்டு மனிதரெலாம் ஆண்டுவரு மிந்நாளில்
மாண்டுமடிந் தோரே 'மஜோறிற்றி' — மீண்டதெலாம்
ஆண்டாண்டு தோறு மயல்தேசங் கண்டதம்மா
வேண்டாத நாடாய் வெறுத்து.

மாண்டவ ரேன்மாண்டார்! மர்மமொன் றிங்கில்லை
வேண்டா தவராய்நாம்; வேறென்ன! — ஒண்டொடியே
கூண்டுப்புள் ளானாலும் கொத்து முரிமையுண்டே
பாண்டவங் கேட்டிருப்பாய் பண்டு.

புதைகுழிகள் தோண்டியவர் போட்டெம்மை மூடும்
கதைகள் மிதந்துவருங் காண்பீர் — அதுநவிரச்
சாதுபோற் தூங்கியெமைச் சாய்க்கும் மிதிவெடியின்
சோதிகளும் சேர்ப்பீர் செவிக்கு.

ஓயா அலையோசை ஓடியொழித் தோடவரு
மோயாச்செல் லோசையினா லூரதிரும் — சாயாத
தேக்கு மரத்தையுந் தூக்கியது வீசியொரு
ஏக்கத்தைத் தேக்கு மெமக்கு.

வானில் மிதந்துவரும் வஞ்சின வான்கழுகும்
ஆனை மிதித்துவரு மாரம்போல் — சேனையொடு
ஏனையமற் றெல்லா மெரித்தொரு கூத்தடித்து
மான்போல் மறையும் மயம்.

— அங்குசன் —

# என்னென்பேன்!

மின்னல் இடையொடு மீன்விழி நீள்குழல்
வியப்புறு நடையோ டுடையணி மேலாம்
கன்னல் மொழியோடு கனியெனு நல்லிதழ்
கதலித் தொடையொடு பிறைநுதல் அரிதாய்ப்
பன்னல் இயலாப் பைந்தளிர் மேனியும்
பலவும் இணைந்தே ஒன்றாய்ப் புவியில்
இன்னல் மிடுக்கும் இளநறு நங்கையை
என்னென் பேனென் னென்பேன் அம்ம!

சொல்லுக் கடங்கா தமிகு வின்பம்
துணிவுட னேதுய்ப் பதற்காய் விரைந்து
செல்லா னோவென் கணவனெங் கேனும்
சென்று சிலநாள் தங்கி ஆங்கு
நில்லா ரோவென் றெண்ணு கின்ற
நிலையிலா இன்பம் பெரிதென மதிக்கும்
இல்லத் தரசி தன்னை ஈங்கே
என்னென் பேனென் னென்பேன் அம்ம!

எப்போ துந்தலை யணைக்குள் இதயம்
ஈர்த்திடு நடிகர் படங்கள் தம்மைத்
தப்பா துவைத்துத் தரத்துயர் காதல்
சரியா கப்புரிந் துவரும் தூய
இப்பி வெண்ணகை உடையிள மங்கையாம்
இழிவு தருபுன் மைநெறி செல்லும்
இப்போ தைமிகு மடமயி லாள்தனை
என்னென் பேனென் னென்பேன் அம்ம!

சடையொரு பக்கம் ஆடத் தகவல்
தந்திடு கண்ணொரு பக்கம் ஓட
இடையொரு பக்கம் தோன்ற இதயம்
ஈர்த்திடு வயிறுமுன் தோன்ற வல்ல
படைத்தொழில் செய்து வாழ்பவர் போலும்
பாங்கினில் நடந்து செல்லும் எதற்கும்
இடைதல் இலாப்பெண் மணியை ஈங்கே
என்னென் பேனென் னென்பேன் அம்ம!

கொண்டையில் மாலை சூட்டிக் கொடுங்கயல்
குளிர்விழி களிலே மையும் தீட்டி
வண்டமிழ் வாழ்ந்திடு வாகா னவாயினில்
வண்ணமும் ஊட்டி வந்து
அண்டையில் உளோரை அவதிக் குளாக்கும்
அகவிடும் மயிலன் றோவெனப் பலரும்
எண்ணும் அவள்பின் சுற்றிடும் இளைஞனை
என்னென் பேனென் னென்பேன் அம்ம!

இடைதல் - பின்வாங்குதல்
இப்பி - சங்கு


— பொலிகை மலரவன் —

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 83



சொற்சிலம்பம் இல. 83
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................

விலாசம்: ..........................................................

..........................................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி: 08 — 01 — 1999

**இடமிருந்து வலம்**

1. துரோணரின் மகன். 7. கால். 8. சாய்தல். 10. வலிமை மிக்கவன். 12. ஓர் அரச வம்சம்; சூரியனையும் குறிக்கும். 13. திடீர். 15. தூயதல்ல. 17. ஐவகை நிலங்களுள் ஒன்று. 18. கணவன்—மனைவி. 20. துப்பு. 22. வம்பர்கள் செய்வது. 24. குழந்தை. 25. சந்திரன்.

**மேலிருந்து கீழ்**

1. ஓர் ஆசிரியப்பா. 2. சுழன்று வருவது. 3. வலிமை மிக்க நாடு. 4. அடிமை எனவும் பொருள்படும். 5. மழை காலம். 6. வீடு. 9. தாவரத்தின் பகுதி. 11. பிரித்தல். 13. நிகழ்ச்சி. 14. மூன்று. 15. இது ஒய்வதில்லை. 16. மறைவில் பிடிப்பது; அடிப்பது. 17. பாதகம் செய்பவள். 19. பூட்டான் தலைநகர். 21. எலியின் இல். 23. வேகமாக ஓடக்கூடிய மிருகம்.

### சொற்சிலம்பம் — 81 விடைகள்

**இடமிருந்து வலம்**

1, சீவகசிந்தாமணி. 7. தேன்வதை. 8. வலை. 9. விபரித்தல். 12. தச. 13. சரி. 15. வேல்ரதம். 17. கழுகு. 19. தம்பதி. 21. வித்தகன். 23. வரி. 24. தில்லை. 25. செம்பு

**மேலிருந்து கீழ்**

1. சீதேவி. 2. வன்பகை. 3. கவரி. 4. சிதைத்தல். 5. தாவல். 6. மலை. 10. தசரதன். 11. பரி. 13. சம்பவம். 14. மாகவி. 15. வேகுதல். 16. தம். 18. முத்தி. 20. திரிபு. 22. கலை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற் பரிசு:** ஏ. பி. தயாளன்,
விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

★ **இரண்டாம் பரிசு:** சோ. ரவிச்சந்திரன்,
'சுமங்கலி',
உரும்பராய் கிழக்கு.

★ **மூன்றாம் பரிசு:** ச. சத்தியன்,
42/1, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 82 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# உங்கள் உள்ளத்திலிருந்து

## குப்பைகளைப் பிரசுரிக்கும் வார இதழ் சஞ்சீவி!

''உங்கள் உள்ளத்திலிருந்து......'' என்ற பகுதி வரவேற்கவேண்டிய விடயம்.

பொதுவாக சஞ்சீவியில் பல குறைகள்—கவிதை, கட்டுரை, சிறுகதை, தொடர் கதை இப்படிப் பலவற்றிலும்.

புதியவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக பிரபலமானவர்களின் ஆக்கங்கள் தொடர்ந்து இல்லையே? செங்கை ஆழியான் போன்ற பிரபலமானவர்களின் சிறுகதைகள், தொடர்கதைகள் கட்டாயம் தேவை. கொழும்புப் பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, மித்திரன், தினக்குரல், தினமுரசுப் பத்திரிகைகளில் தெணியான், செ. யோகநாதன், செங்கை ஆழியான், தாமரைச் செல்வி, மொழிவாணன், சுஜாதா, ராஜேஸ்குமார் போன்ற பிரபலமானவர்களின் கதைகள் வெளிவருகின்றன.

தொடர்கதை ஒன்று பத்திரிகையில் வெளிவரவேண்டும். அது இன்றைய சமூகப் பிரச்சினையை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆங்கிலக் குப்பைகளை தமிழில் மொழி பெயர்க்கிறீர்கள். இது தேவைதானா? உங்களின் 'வெள்ளை ரோஜா முள்' எதைச் சாதிக்கிறது?

தினகரனில் 'சிதைவுகள்', தினக்குரலில் 'மரணங்கள் மலிந்த பூமி', வீரகேசரியில் 'துன்பக் கேணியில்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவற்றின் தரம் என்னே! மனிதனைச் சிந்திக்க வைக்கின்றன; பிரச்சினைகளை ஆழமாக ஆராய்கின்றன; மக்கள் கூடும் இடங்களெல்லாம் விவாதங்களை ஏற்படுத்துகின்றன; அடுத்த ஞாயிறு எப்போது வரும் என்று ஏங்க வைக்கின்றன. இந்த ஒரு நிலைமையை நீங்கள் ஏன் ஏற்பத்த முடியாதுள்ளது?

தமிழீழ மக்களுக்கு கொடிய போரால் ஏற்பட்ட அனர்த்தங்களை இப் பத்திரிகைகள் மிகச் சிறப்பாக சித்திரிக்கின்றன. இதை உள்நாட்டில் உள்ளோரும் வெளிநாட்டில் உள்ளோரும் விரும்பிப் படிக்கின்றனர்; தெரிந்து கொள்ள ஆவல் படுகின்றனர். ஆனால் உங்கள் பத்திரிகை என்ன செய்கின்றது? 'வெள்ளை ரோஜா முள்' போன்றவற்றை பிரசவிக்கின்றது!

கவிதைகள் என்றால் மந்திரங்கள் என்று பொருள். ஆனால் உங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கவிதைகள்? அவை கவிதைகளா? தமிழுக்கு அவமானம். அதுவும் இரண்டு பக்கங்கள். நீங்கள் பத்திரிகையாளர் என்ற முறையில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையைப் பார்க்க வேண்டும்.

கொழும்புப் பத்திரிகைகள் — மித்திரன், தினமுரசு கூட — மிகத் தரமான கவிதைகளை வெளியிடுகின்றன. நீங்கள் 05-12-1998 அன்று 'அதிரடி அரங்கில்' பிரசுரித்த 'கலாசாரச் சீரழிவு' போன்று மொழிச் சீரழிவை, இலக்கியச் சீரழிவை உங்கள் பத்திரிகை வாராவாரம் செய்கின்றது.

சமய, புராணக் கட்டுரைகளும் அப்படியே. இதிகாசக் கதைகள் நன்றாக இருக்கின்றன.

உங்கள் பத்திரிகை குறித்து பொதுவானதொரு அபிப்பிராயம் உள்ளது. அதைக் கூறத்தான் வேண்டும். மரண அறிவித்தல் பார்க்கவும், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் காலபலன் பார்க்கவும்தான் அது தகுதியானது என்ற ஓர் அபிப்பிராயம் மக்கள் மத்தியில் உண்டு. தயவு செய்து அதை மாற்றுங்கள்.

**கலைமகள் வீதி, நல்லூர்.** **ம. சிவலோகநாதன்.**

★ ★ ★

## விஷமிகளின் தேவையற்ற செயல் கண்டனத்திற்குரியது

தமிழ் அறிவை வளர்த்துக் கொள்ளவும் அந்த அறிவை வெளிக்கொணரவும் சஞ்சீவி 'சொற்சிலம்பம்' புதிர்ப் போட்டியை வாசகர்களிடையே நடத்தி வருகிறது. இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இந்தப் போட்டியில் குலுக்கல் மூலம் வெற்றி பெறும் மூவரின் பெயர்களையும் அஞ்சல் முகவரிகளையும் வெளியிட்டும் வருகின்றது. இப்பெயர்களையும் முகவரிகளையும் பயன்படுத்தி சில விஷமிகள் ஏதாவது ஒரு கோயிலின் வரலாற்றுப் பெருமையினையும் அக்கோயிலில் கடந்த காலத்தில் நிகழ்ந்த அற்புதச் செயல்களையும் தொகுத்து அப்பிரசுரத்தினை அலட்சியம் செய்தவர்கள் அடைந்த துன்பத்தினையும், அப் பிரசுரத்தினைப் போன்று குறிப்பிட்ட தொகைப் பிரசுரத்தினை வெளியீடு செய்து அனுப்பியவர்கள் அடைந்த நன்மையினையும் குறிப்பிட்டு ஒரு பிரசுரத்தினை அனுப்புகின்றனர். இதேபோல் குறிப்பிட்ட தொகைப் பிரசுரத்தினை வெளியிடுமாறும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இத்தகைய பிரசுரத்தை வெளியிடுவோர் இதன்மூலம் மக்களை ஓர் உளவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாக்கலாம் எனக் கருதுகின்றனர், ஆனால் தன்நம்பிக்கையும் பக்தி வைராக்கியமும் கொண்டவர்களை இந்தப் போலிப் பிரசுரங்கள் பாதிக்க மாட்டா.

எனவே பொழுதுபோக்கிற்காக இத்தகைய போலிப் பிரசுரங்களை வெளியிடுபவர்கள் தமது சிந்தனையை பயன்தரத் தக்க வழிகளில் செலவிடுவார்களானால் அது நன்மைக்குரியதாகும்.

**கூச்சாய்.** **கண்ணன்.**

★ ★ ★

## பிரசுரிக்க முடியாதவற்றை திருப்பி அனுப்ப முடியுமா?

சஞ்சீவி சிரஞ்சீவியாக வாழ்க: வளர்க.

சஞ்சீவிக்கென அனுப்பப்பட்ட சுய ஆக்கப் படைப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிரசுரமாகாத நிலை நீடிக்கும் பட்சத்தில் எழுதியவர்களுக்கே அவற்றைத் திருப்பி அனுப்புவது திருத்துவதற்கு வாய்ப்புத் தரும் தர்மமாக அமையாதா? பதிவு செய்யப்பட்ட இலக்கம், விடயம், திகதி ஆகியனவற்றைக் குறிப்பிட்டு, முத்திரைகளையும் இணைக்கும் பட்சத்தில் பிரசுரமாகாத ஆக்கங்கள் எமக்குத் திரும்பக் கிடைக்குமா?

**சுன்னாகம்.** **கே. எஸ். சிவஞானராஜா.**

**வாசகரே!**

உங்கள் எதிர்பார்ப்பு நியாயம் மிக்கது; உரிமையுடன் கூடியது. ஆனால் இங்கு வந்து குவியும் ஆக்கங்கள், கடிதங்கள், துண்டுப்பிரசுரங்கள், நோட்டீஸ்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் உங்கள் ஆலோசனையைச் செயற்படுத்துவது இப்போதைக்கு எமது சக்திக்கு அப்பாற்பட்டது. திருப்பி அனுப்புவதை எதிர்பார்ப்பவர்கள் தமது படைப்புக்களில் ஒரு பிரதியை எடுத்து வைத்துக்கொண்டு இங்கு அனுப்பினால் என்ன? பத்திரிகையும் படைப்பாளிகளும் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைதான் இது!

(ஆ-ர்)

★ ★ ★

## விளையாட்டு அரங்கை சேர்ப்பது மிக அவசியம்

சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை தரக்கூடிய பல விடயங்களை நல்ல முறையில் வாசகர்களுக்கு சஞ்சீவி வழங்க வருகின்றது. சஞ்சீவி மேலும் வளர எனது சார்பிலும் வாசகர் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

சஞ்சீவியில் விளையாட்டு அரங்கு எனும் ஒருபகுதியையும் இணைத்து விளையாட்டு சம்பந்தமான விடயங்களையும் பிரசுரித்தால் குடாநாட்டில் உள்ள வீர வீராங்கனைகளுக்கும் விளையாட்டில் ஆர்வமுடைய என் போன்ற வாசகர்களுக்கும் இது பயனுடையதாக அமையும். குறிப்பாக சாதனை வீரர்கள், எந்த ஆண்டில், எந்த நாட்டவர் சாதனை போன்ற பல்வேறு விடயங்கள் பயனுடைதயாக அமையும். அதுமட்டுமன்றி விளையாட்டு அலுவலர் தெரிவு மற்றும் பல்கலைக்கழகஉடற்கல்வி டிப்ளோமாபோன்றவற்றின் போட்டிப் பரீட்சைக்கும் இது பயனுடையதாக அமையும்.

இப்பகுதியைச் சேர்த்து மக்களிடையே விளையாட்டுத்துறையை வளர்க்கவும் உரமிடுங்கள்.

**ஆவரங்கால்.** **பி.இரவீந்திரன்.**

★ ★ ★

## வித்தியாசமான சிறுகதையும் பிரசுரமாகாதது ஏன்?

இன்று எமது சமூகத்தில் நிலவுகின்ற சீர்கேடுகளையும், மூட நம்பிக்கைகளையும் அலசுவதாக 'சஞ்சீவி' சிறுகதைகள் அமைந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதும் பராாட்டத் தக்கதும் ஆகும். எனினும் வாரத்தில் இரண்டு 'சஞ்சீவி' சிறுகதைகளும் அந்தப்பாணியில் தான் அமைய வேண்டுமா? அதாவது விஞ்ஞானக்கதைகள், புராணக்கதைகள், எதிர்காலத்தில் நடப்பதாக கற்பனை செய்து எழுதப்படும் வியப்பூட்டும் கதைகள் போன்றவையும் இடம்பெறாதது ஏன்? சிறுகதை இலக்கியத்தின் இதர அத்தியாயங்களுக்கும் வாசகர்களை 'சஞ்சீவி' எப்போது அழைத்துச் செல்லும்.?

**அரியாலை.** **அருணோதயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

VIII மற்றும் XI ஆம் பக்கங்களில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

## வலமா? இடமா?

இரண்டு பக்கத்திலும் ஒரே விடைதான் வரும். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா!

## வழி எது தெரியுமா?

★ கிட்டிய தூரம்— 3 இலிருந்து.

★ போய்ச் சேரமுடியாது — 2 இலிருந்து.

## தீக்குச்சு எத்தனை?

22 தீக்குச்சுகள்.

## சொற்களைத் தேடுங்கள்

(i) வேழம். (ii) வேடம்.
(iii) வேசம். (iV) வேகம்.
(V) வேணாம்.
(Vi) வேணும்.
(Vii) வேதம்.
(Viii) வேகும்.

## யாருடையநாய் எது?

★ குமாருடையது கறுப்பு.

★ குமாரியினுடையது வெள்ளை.


## சொற்றேடல்

1) சிவப்பு. 2) கசிப்பு,
3) கற்சிலை. 4) தொலைபேசி.
5) மலேசியா.
6) வாசிப்பு. 7) சிங்கம்.
8) ரசிகன். 9) கஞ்சிரா.
10) சிவகாசி. 11) பரிசில்.
12) வசியம். 13) சிறுத்தை.

## வாத்தியார் புதிர்

யலிதா, தாஸ், வதன், அருண் என்ற ஒழுங்கில் அருணே கடைசியாகச் சந்தித்தான்.

## கோழிக்குஞ்சுகளுக்கு வழி தெரியவில்லை



## கிளிகள் எத்தனை?

36 கிளிகள்.

## பணத்தைப் பங்கிடுங்கள்

பத்துப் பைகளிலும் முறையே 1, 2, 4, 8, 16, 32, 64, 128, 256, 489 ரூபா பணம் இருக்கும்.

## முயன்று பாருங்கள்

(1) 28 பழங்கள்.

(2) முகட்டிலிருந்து இறங்கியவை 41 எலிகள். ஒவ்வொரு பூனையும் சாப்பிட்டவை 24 எலிகள்.

## கையுறையை சோடிசேருங்கள்!

வலது, இடது கையுறைகள் சேர்ந்தால்தானே ஒரு சோடி வரும்? எனவே இடது கையின் பின்புறத்தைக் காட்டும் மூன்றாவது கையுறையும் வலது கையின் உள்புறத்தைக் காட்டும் முதலாவது கையுறையும் தான் ஒரு சோடி!

---

# வெள்ளை றோஜா...

(X ஆம் பக்கத் தொடர்)

கில் சாத்தினான். உள்ளே கதவு ஒன்று திறந்துகொண்டது. ஹோல் லைட்டை நிறுத்தினான். உள்வே ஓர் இரகசிய அறை தெரிந்தது. லைட்டைப் போட்டான். உள்ளே இறங்கினான். பெட்டிகளைத் திறந்தான். பிதற்றினான்.

''தாங் யூ றொப்! உனது முழுவதும் எனக்கு!'' என்றான். தங்கத் தகடுகளை அள்ளி எத்தினான். வைரங்களை எடுத்தான்.

''கரோல் நீ என்னோடு வழ்ழ வந்தால் உனது வைரங்கள் உனக்கே சொந்தம்'' என்றான்.

திகைத்தாள் கரோல்! தேடப்படும் எனது வைரங்கள் எப்படி இவனிடம்? ? ?...

மரத்தைச் சுரண்டி 'கர கர' ஓசை எழுப்பினாள் கரோல். திகைத்தான் மைக். வெளியே வந்தான். அறையை ஆராய்ந்தான். வெளிக் கதவைத் திறந்தான். ஒடையை ஆராய்ந்தான். திரும்பி வரவும் கட்டில்மீது மயங்கி விழுந்தான்.

இருளில் கரோல் மயக்க மருந்தை ஸ்பிறே பண்ணியது அவனுக்குத் தெரிய நியாயமில்லை.

எதிர்பாராதது சந்தித்தது. எல்லாவற்றையும் அள்ளிக் கட்டினாள் கரோல். கொலைசெய்யும் திட்டத்தைக் கைவிட்டாள். இவ்வளவு சொத்தையும் இழந்து இவன் கொஞ்சநாள் வாழ வேண்டும் என ஆசைப்பட்டாள். றோசா மலரைப் பெட்டிக்குள் வைத்தாள்.

சுமக்க மாட்டாமல் சுமந்து வந்து லிப்டில் அடுக்கினாள். மீண்டும் மீண்டும் போய் எடுத்துவந்து அடுக்கினாள். லிப்ட் வாச்சர் தூங்கி விழுந்தார். அவருக்கு ஒரு ஸ்பிரே அடித்தாள்.

லிப்ட் புறப்பட்டது: 15...14...13 ... 4, 3, 2, 1, G கதவு திறந்ததும் துப்பாக்கியில் இருந்து சன்னங்கள் புறப்பட்டதுபோல ஸ்பிரே பயரிங் கொடுத்தாள்.

(தொடரும்)

---

# இந்த வார...

(XII ஆம் பக்கத் தொடர்)

யாக மெல்ல, மெல்ல சென்று கொண்டு இருப்பீர்கள். பொறுமைக்கு இலக்கணமான நீங்கள் அடிக்கடி ஓய்வு எடுக்க வேண்டும். வயிற்று வருத்தம், கைகால் தாக்கம், நரம்புவியாதி, தலைவலி, வாத வாய்வுத் தொல்லைகள் இருக்கச் செய்யும். வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

கும்பம்: குறிதவறிப் பிழைத்துக் கொண்டதாகப் பிறர் கருதிவிடலாம். ஒரு முறை தவறினால் மறுமுறையும் தவறும் என்று இல்லையே? கண்க்குப் போடுகிற உங்களை காப்பாற்ற உதயத்தில் வியாழ பகவான் ரூபத்தில் உங்களுக்கு நிற்கையிலே பலர் பகைத்தால்தான் என்ன? உறுதியுடன் செயற்படுங்கள். உள்ளத்தில் கள்ளமில்லா உங்கள் செயற்பாடு தொழில் ஸ்தானத்தில் துலக்க வழியேற்படும். மேலதிகாரிகள் வாழ்த்துவர். நயம் தேடி வந்தவருக்கு பணம் இல்லாததால் பல பலவீனச் செயற்பாடுகளை உங்கள் மீது திணிக்க முற்படும் காலமாகும். எதிர் நீச்சலடித்து முன்னேறுங்கள். நரம்புச் சோர்வு, மூட்டுவலி, கைகால் வலி, படபடப்பு, நெஞ்சு வலி, வரட்சித்தன்மை என்பன சிலரை வருத்தலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

★ மீனம்: கட்டுப்பட்டு, கட்டுப்பட்டு கட்டிக் காக்க வேண்டிய காலமாகும். திசை மாறிச் சென்றவர்கள் வழி தேடி உங்களை வட்டமிட்டு வரும் காலமாகும். ஏழரைச் சனி பலரை ஏவிவிட்டு வேடிக்கை பார்த்து எக்காளமிடும். எதிர்ப்பாளர் எதிர்த்திடுவர். தொழில் ஸ்தானத்தில் வேலி பயிரை மேயும் நிலை ஏற்பட்டு பயப்பாட்டைத் தோற்றுவிக்கும். வரவு செலவை அதிகரிக்கச் செய்ய பலவழிதேடலாம். சளி, கை—கால் விறைப்பு, பதற்றநிலை, எதிலும் நம்பிக்கையற்ற போக்கு என்பன அடிக்கடி இருக்கும் காலமாகும். சனீஸ்வரன் பல தடுமாற்றங்களை தந்துகொண்டிருப்பார். தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நா... கள், வியாழன்.

---

**க. தனேந்திரன். தனங்கிளப்பு.**

● காதலா, நட்பா சிறந்தது? இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

✱ இரண்டும் சிறந்தவையே. இரண்டுக்கும் அடிப்படை அன்பும் தியாகமுமே. வேறுபாடு காதலில் உடற்சேர்க்கை. நட்பில் அது இல்லை. காதலுக்காக உயிர்விட்டோரும், நட்புக்காக உயிர்த் தியாகம் செய்தோரும் வரலாற்றில் உள்ளனர்.

★ ★ ★

**எஸ். சோபன். கொக்குவில்.**

● கவிஞர்கள், புலவர்கள் இருவருக்கும் என்ன வித்தியாசம்?

✱ கவி படைப்போர் கவிஞர். புலம் (அறிவு) படைத்தோர் புலவர்.

★ ★ ★

**அ. அஜித் சஞ்சீவ். அரியாலை.**

● கல்வியைப் பயின்று கொண்டே காதலைத் தொடரலாமா?



✱ தொடரலாம். ஆனால் தாலாட்ட ஆயாவைத் தேடும் நிலை வராவிட்டால் சரி.

★ ★ ★

**எஸ். வாசவன். பெரிய மதவடி.**


● பெண்கள் அணியும் ஆடையைப் பற்றி கட்டை, குட்டை என்று நொட்டை கூறும் ஆண்களைப் பற்றி......!

✱ பட்டை அடித்தது போல் கட்டையைக் கிறங்க வைப்பதால் சொட்டை கூறுகின்றார்கள்.

★ ★ ★

**ம. நித்தியன் கரவெட்டி.**

● திருமண விடயத்தில் தான் விரும்பும் குதிரையை விடத் தன்னை விரும்பும் கழுதை மேல் என்கின்றார்களே!




✱ எப்படி என்றாலும் காலால் உதை கிடைப்பது நிச்சயம் என்பதை உறுதிப் படுத்துகிறார்கள் போலும்.

★ ★ ★

**பொ. சிவம். துன்னாலை மத்தி.**

● கொண்டான் வீட்டிருக்க கொண்டையில் பூவும் வைத்து கோயில், கோயில் என்று அலையும் கோதையர் பற்றி......?



✱ வேறு பேதை. இந்தக் கொண்டானைக் கொண்டோடிய பின்னர்தான் முழிப்பு வரும்.

★ ★ ★

**ஆர். சௌமியா. யாழ்ப்பாணம்.**

● 'ரிவி பல' இராணுவ நடவடிக்கை எதிரி எதிர்பாராத வேளையில் எதிர்பாராத தருணத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் தந்திரோபாயம் நிறைந்த நடவடிக்கை என்கிறேன். நீர் யாது சொல்கிறீர்?

✱ மிகவும் துணிச்சலான கேள்வி. ஆனால் உங்கள் முகவரியையும் குறிப்பிட்டு எழுதத் துணிச்சல் வரவில்லையே!

# வித்துவான் பதில்கள்

**என். எஸ். பத்மா. யாழ்ப்பாணம்.**

● வெளிநாட்டில் வாழும் இலங்கையர் பலர் திருமணம் செய்ய இங்கிருந்து பெண்கள் எடுப்பது ஏன்?



✱ 'ஒரிஜினல்'களின் அருமை அங்கு போன பின்புதான் புரிந்திருக்கும்.

★ ★ ★

**மானியூர் ரட்னேஸ். யாழ்.**


● ஆறறிவு படைத்த மனிதனும் மனிதனும் ஏன் அடிபட்டுக் கொள்கிறார்கள்?

✱ ஆற்றுப்படுத்தாத அறிவைப் பெற்றிருப்பதால்.

★ ★ ★

**க. பிரசாந்தன். வண்ணார்பண்ணை.**

● திட்டவட்டமான பதில் கூறுங்கள். காணாமற் போனோர் கதி என்ன?



✱ விசாரிக்க வருகிறோம் என்றவரையே காணவில்லையே?

★ ★ ★

**வி. பிரபா. நீர்வேலி.**

● மனைவியை இழந்த ஒருவன் சமையலுக்கு வேலைக்காரியை வைப்பதா வேலைக்காரனை வைப்பதா வசதியானது?

✱ சமையலுக்கு மாத்திரமா, சமயத்துக்கும் சேர்த்தா கேட்கிறீர்?

★ ★ ★

**சு. யசோ. குமியன்.**

● 'உதயன்', 'சஞ்சீவி' பிரசுரமாகும் பிரதிகளின் எண்ணிக்கை யாதோ?

✱ வனிதையிடம் வயதைக் கேட்பது போன்ற கேள்வி இது.

★ ★ ★

**பாரி. வேலணை.**

● வித்துவனே! பிரபல ஆண்கள் கல்லூரி ஒன்றில் நடக்கும் அசம்பாவிதங்கள் அம்பலத்துக்கு வருகின்றன. ஆனால் பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் நடக்கும் அசம்பாவிதங்கள் அம்பலத்து வருவதில்லையே! காரணம் என்னவோ?

✱ ஆண்கள் அல்லவா? அவ்வப்போது தகவல் வெளியே நீட்டும்; பின்னர் அடங்கிவிடும். மற்றையது பெண்களுடையதல்லவா? உள்ளேதான் நடக்கும்; ஆனால் காலம் செல்ல வெளியில் தெரியவரும்.

★ ★ ★

**மூ. சிவம். தட்டாதெரு, யாழ்.**

● ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

✱ வளைந்துதான் யாருக்கு என்ன லாபம்?

★ ★ ★

**வி. மைத்ரேயி. நெட்டிலிப்பாய்.**

● அழகு எது? பேரழகு எது?

✱ குழந்தை கெஞ்சி அழுவது பார்க்க அழகு. அதைக் கொஞ்சி மகிழும் போது சிரிப்பது பேரழகு.

★ ★ ★

**ரி. சுந்தரி நீராவியடி, யாழ்.**

● ஆண்மை எதில் உள்ளது? உடல் வலிமையிலா? உள வலிமையிலா?

✱ 'பிறன்மனை நோக்காப் பேராண்மை' என்று திருவள்ளுவரே பதில் தந்துவிட்டாரே!

**எஸ். சுஜி. வரணி.**

● ஆலயத்துக்குள் மேலாடையுடன் வருவதற்கு ஆண்களுக்கு மட்டும் தடை ஏன்?

✱ தடை உத்தரவை பெண்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்களா? ரொம்ப மோசம் நீங்கள்!

★ ★ ★

**ஏ. சித்திரா. தனங்கிளப்பு.**

● பக்கத்து வீட்டில் ஒருவர் எந்நேரமும் பால் அருந்துகிறாரே?

✱ எதிர்ப்பாலோ அல்லது (பனை, தென்னை) மரப்பாலோ இல்லைத் தானே! விட்டு விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடா நெருக்கடி இந்த ஆண்டு மேலும் மோசமடையும் ஆபத்து!

## அமெரிக்கா, பிரிட்டன் கடும் போக்கு ஈராக்கின் பிடிவாதம் அதிகரிப்பு

தனது நாட்டின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் பறக்கும் எதிரி விமானங்களைச் சுடப் போவதாக ஈராக் கடந்த சனிக்கிழமை விடுத்த அறிவிப்பை அடுத்து வளைகுடாவில் புதிதாக நெருக்கடி உருவாகி இருக்கின்றது. இந்த அறிவிப்பு வெளியாகி இரு நாள்களில் இடம்பெற்ற சம்பவங்கள் இதனை கோடி காட்டுகின்றன.

கடந்த திங்கட்கிழமை வட ஈராக் மீது பறந்த அமெரிக்க ரோந்து விமானங்களை நோக்கி ஈராக் மூன்று ஏவுகணைகளை ஏவியது.

இந்த ரோந்து விமானங்களில் ஒன்று பதிலடியாக ஏவுகணை ஏவப்பட்ட ஈராக்கின் விமான எதிர்ப்பு நிலைகள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதில் நான்கு ஈராக் படையினர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது விமானங்கள் அத்தனையும் பத்திரமாகத் திரும்பிவிட்டன என்று அமெரிக்கா கூறுகிறது. ஆனால் விமானங்களில்ஒன்றைச்சுட்டு வீழ்த்தி இருப்பதாகவும் விமானத்தின் சிதைவுகள் வட ஈராக்கின் பாலைவனப் பகுதியில் கிடப்பதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது ஒருதலைப் பட்சமாக இம்மாத நடுப் பகுதியில் நடத்திய நான்கு நாள் தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற பாரதூரமான சம்பவமாக இந்த ரோந்து விமானம் தாக்கப்பட்ட சம்பவம் கருதப்படுகிறது. வளைகுடா நெருக்கடி புது வருடத்திலும் தொடரும் அறிகுறியாக அவதானிகள் இதனைக் கருதுகின்றனர்.

இப்படியான தாக்குதல்களின் பின் வழமை போன்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்ன் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களைக் கண்டித்துவிட்டு இருந்து விடுவார் என்றே முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இம்முறை நிலைமை மாறிவிட்டது. அமெரிக்காவையும் பிரிட்டனையும் கண்டித்ததுடன் நின்றுவிடாது ஐ. நா. ஆயுதப் பரிசோதகர்களை இனி ஈராக்குக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்று சதாம் அறிவித்தார். தனது ஆகாயப் பிராந்தியத்துக்குள் பறக்கும் எதிரி விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப் போவதாகவும் கூறினார். இந்த அறிவிப்பு எதிர்பாராத ஒன்றாகும். வளைகுடா நிலைமையை இது மேலும் மோசமாக்கி விட்டுள்ளது.

### ஈராக்கின் நிலைப்பாடு

ஈராக்கின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் பறக்கும் எந்த ஒரு விமானத்தையும் சுடுவதற்கு ஈராக்குக்கு உரிமை இருப்பதாக ஈராக் உதவி ஜனாதிபதி தஹா யாசின் ரம்டான் கட்டார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஈராக் விமானங்கள் ஈராக்கின் வடபகுதியிலும் தென் பகுதியிலும் பறப்பதற்கும் —

அந்த இரு பகுதிகளிலும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ரோந்து செல்வதற்கும்—ஐ. நா வினால் அதிகாரமளிக்கப்படவில்லை. அது ஈராக் உள்விவகாரங்களில் அப்பட்டமான தலையீடு என்பது ஈராக்கின் நிலைப்பாடு.

### ஷியா, குர்டிஷ் பிரச்சினைகள்

வட ஈராக்கில் உள்ள குர்டிஷ் இன மக்களையும் தென் ஈராக்கில் உள்ள ஷியா முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காக இந்த இரு பகுதிகள் மீதும் ஈராக் விமானங்கள் பறப்பதற்கு 1992 இல் ஐ நா. வினால் தடைவிதிக்கப்பட்டது.

வட ஈராக்கில் வாழும் குர்டிஷ் சிறுபான்மை மக்கள் ஈராக்கிய ஆட்சியாளர்களுக்கு எதிராக தனிநாடு கோரி நீண்டகாலமாகப் போராடி வந்தனர். 1991 வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் படைகள் குர்டிஷ் பகுதிக்கு பெருமளவில் அனுப்பப்பட்ட போது ஐ.நா. தலையிட்டதுடன் அப்பகுதி மீது ஈராக் விமானங்கள் பறக்கவும் தடைவிதித்தது.

அதேபோன்று தென் ஈராக்கில் பெரும் அளவில் வாழும் ஷியா முஸ்லிம்கள் ஈராக் இராணுவத்தின் அச்சுறுத்தலை எதிர்நோக்கிய சமயம் தென் ஈராக்கிலும் இதே போன்ற தடை அமுல் செய்யப் பட்டது.

ஈராக்கின் தற்போதைய ஆட்சியாளர்கள் சுனி முஸ்லிம்கள். 1980 - 88 ஈரான் — ஈராக் யுத்தத்துக்கு அடிப்படைக் காரணமே சுனி — ஷியா முஸ்லிம் பிரச்சினை தான். ஈரானில் ஆட்சியில் இருப்போர் ஷியா முஸ்லிம்கள். மதப் பிரச்சினை இருந்தாலும் தற்போதைய வளைகுடா நெருக்கடியில் ஈரான் மிதவாத போக்கையே கடைப்பிடிக்கிறது.


அமெரிக்காவும் பிரிட்டனும் மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு இடமளிக்காத வகையில் ஐ. நா. தீர்மானங்களுக்கு மதிப்பளிக்கும் படி ஈரானிய அதிபர் கதாமி ஈராக்கைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐ. நா. தீர்மானத்துக்கு அமைய அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக்கின் வடக்கே 36 ஆவது சமரேகையிலும் தெற்கே 33 ஆவது சமரேகையிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

பிரெஞ்சு விமானங்கள் தெற்கே 32 ஆவது சமரேகையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தன. அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக் மீது இம்மாத நடுப்பகுதியில் ஒருதலைப்பட்சமாக நடத்திய தாக்குதலை ஆட்சேபித்து பிரான்ஸ் ரோந்துப் பணியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. அதுவரை தெற்கே 32 ஆவது சமரேகையில் பிரெஞ்சு விமானங்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்தன.

### சதாமின் பிடிவாதம் அதிகரிப்பு

வளைகுடாப் பிரச்சினையில் சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள நிலைப்பாடு காரணமாகவே சதாமின் பிடிவாதம் இம்முறை அதிகரித்திருப்பதாக அவதானிகள் நம்புகின்றனர். அத்துடன் 1990 இல் ஈராக் மீது ஐ.நா. வினால் விதிக்கப்பட்ட தடை பாரதூரமான விளைவுகளை ஈராக்கில் ஏற்படுத்தி வருவதால் ஏதாவது ஒரு முடிவு காண வேண்டும் என்பதில் சதாம் உறுதியாக இருந்து வருகிறார்.



அம்மானில் நடைபெறும் அரபுநாடுகளின் நாடாளுமன்ற யூனியன் கூட்டத்தில் கலந்துகொண்ட அரபு நாடுகளின் பிரதிநிதிகள்

## உலக உலா

ஈராக்கை பலவீனப்படுத்த முன்னர் தடையை நீக்கினால் ஈராக் மீண்டும் பலம் பெற்று விடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

ஈராக்கினால் அண்டை நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து கருதியே ஐ. நா. வினால் தடை அமுல் செய்யப்படுவதாக அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் சமாதானம் கூறுகிறார்.

ஆனால் ஈராக் பலம் அடைந்தால் இஸ்ரேலுக்கு ஆபத்து ஏற்படும் என்பதே உண்மையான நோக்கம்.

அமெரிக்காவைப்பொறுத்தவரை மத்திய கிழக்கில் இஸ்ரேலின் நலங்களுக்குப் பின்பே அரபு நாடுகளின் நலன்கள். கடந்த 50 வருட கால வரலாறு இதற்குச் சான்று.

1991 வளைகுடா யுத்தத்தின் போது ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன், பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத் ஆகியோர் ஈராக்கை ஆதரித்தனர். ஏனைய முழு அரபு நாடுகளும் ஈராக்குக்கு எதிராகவே நின்றன.

ஆனால் தற்போது பெரும்பாலான அரபு நாடுகள் ஈராக்குக்குஆதரவாக கருத்து வெளியிட ஆரம்பித்து விட்டன.

ஜோர்தானின் தலைநகர் அம்மானில் அரபு நாடுகளின் நாடாளுமன்ற யூனியன் கூட்டம் தற்போது ஆரம்பமாகி உள்ளது.

தற்போதைய நெருக்கடியில் அரபு நாடுகளின் ஆதரவைப் பெறமுடியும் என்று ஈராக் நம்புகிறது.

வைநதி ஒப் பந்தத்தில் இருந்து இஸ்ரேல் பின்வாங்கி இருப்பது சதாமுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

ஐ. நா பாதுகாப்புச்சபையின் நிரந்தர நாடுகளான ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகியவற்றின் ஆதரவுடன் அரபு நாடுகளின் உதவியை ஒன்றுதிரட்டிஐ.நாவின்பொருளாதாரத் தடைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வைப்பதே ஈராக்கின் நோக்கம்.

ஆனால் பெரும்பாலான அரபு நாடுகள் தமது நாடுகளில் வளர்ச்சியடைந்து வரும் அடிப்படை வாதத்துக்குப் பயந்து ஈராக்கை ஆதரிப்பதுபோன்று காட்டிக் கொண்டாலும் உள்ளூர ஈராக்கின் பலம் அடக்கப்படுவதையே விரும்புகின்றன.

1973 ஆம் ஆண்டின் பின்னர் உலகில் எண்ணெய் விலை குறைந்து வருவதால் ஈராக்கின் எண்ணெயும் உலக சந்தைக்கு வருமானால் தமது எண்ணெய் வர்த்தகம் மேலும் பாதிக்கப் படலாம் என்பது பெரும்பாலான அரபு நாடுகளின் கருத்து. ★

# மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் தடங்கல்

இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நத்தன்யாகு, பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத், அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் ஆகியோருக்கிடையிலான வைநதி ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்களே ஆகின்றன.

இந்த ஒப்பந்தத்தில் இருந்து இஸ்ரேல் பின்வாங்கி இருப்பது மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு பலத்த அடி ஆகும்.

1978 ஆம் ஆண்டு மெனாச்செம் பெகினுக்கும் அன்வர் சாதாத்துக்கும் ஜிம்மிகார்ட்டருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட காம்ப்டேவிட் ஒப்பந்தத்தைப் போன்று வைநதி ஒப்பந்தமும் மத்தியகிழக்கு சமாதான முயற்சிகளில் ஒரு மைல் கல்லாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இஸ்ரேலில் லிகுட் கட்சியைச் சேர்ந்த தீவிர வலதுசாரிகள் ஒப்பந்தத்தை எதிர்த்ததை அடுத்து ஒப்பந்தத்தை இடைநிறுத்தி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இஸ்ரேல் பிரதமருக்கு ஏற்பட்டது.

வை நதி ஒப்பந்தத்தின்படி மேற்குக்கரையில் 18 சதவீதமான பிரதேசம் பலஸ்தீன அதிகார சபையின் முழுக்கட்டுப் பாட்டின் கீழ் வரவேண்டும். அதற்கு முன்னோடியாக மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேல் படைகள் மூன்று கட்டங்களாக வாபஸ் பெற ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தின் படி மேற்குக்கரையில் இருந்து இஸ்ரேல் படைகளின் இரண்டாவது கட்ட வாபஸ் இம்மாதம் 18 ஆம் திகதி இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் எதுவுமே நடைபெறவில்லை.

இஸ்ரேல் அமைச்சரவை வைநதி ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு இரு நிபந்தனைகளை விதித்தது. இஸ்ரேல் நாடாளுமன்றம் இந்த வருடம் மே மாதம் தேர்தல் நடத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றியது.

★ பலஸ்தீன அதிகார சபையின் அதிகாரிகள் [illegible] உள்ள சட்ட விரோத ஆயுதங்கள் பறிமுதல் செய்தல்.

★ ஜெரூஸலத்தை தலைநகராகக்கொண்ட பலஸ்தீன சுதந்திர நாடு அமைப்பதைக் கைவிடுவதாக பலஸ்தீன அதிகாரசபை அறிவிக்க வேண்டும்.

இந்த இரண்டுமே இஸ்ரேல் அமைச்சரவை விடுத்த நிபந்தனைகள் ஆகும்.

அத்துடன் வைநதி ஒப்பந்தத்தின் பிரகாரம் இஸ்ரேல் சிறைகளில் உள்ள 500 பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்ய வேண்டும். அதற்கும் இஸ்ரேல் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

மேற்குக் கரையில் பலஸ்தீன அதிகார சபையின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பலஸ்தீன அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட பாடநூல்களையும் இஸ்ரேல் படையினர் பறிமுதல் செய்துள்ளனர். அந்த நூல்களில் இஸ்ரேலை சியோசியவாதிகள் என்றும் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தம் கட்டம், கட்டமாக அமுல் செய்யப்பட்டு இந்த ஆண்டு மே மாதம் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

மே மாதம் சுதந்திர பலஸ்தீன நாட்டை பிரகடனம் செய்யப்போவதாக பலஸ்தீன அதிகாரசபைத் தலைவர் யஸீர் அரபாத் அச்சுறுத்திவருகிறார்.

வைநதி ஒப்பந்தத்தில் இருந்து நழுவுவதற்கே இஸ்ரேலில் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்பட இருப்பதாக அரபாத் குற்றஞ்சாட்டி வருகிறார்.

அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் வளைகுடா நெருக்கடியில் கூடுதல் கவனம் செலுத்தியதால் மத்திய கிழக்குப் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தி வைநதி ஒப்பந்தத்தை பாதுகாப்பதற்கு தவறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

வைநதி ஒப்பந்தம் முற்றாக கைவிடப்பட்டு அரபாத் பலஸ்தீன தனிநாட்டைப் பிரகடனம் செய்வாரானால் அது மிக மோசமான நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org